# எரிமலை
# ERIMALAI

ஜனவரி - 2008




மாவீரர் நாள் உரை - 2007



**எல்லாளன் நடவடிக்கை ஒரு வரலாற்று அதிர்ச்சி**



கடற்புலிகளின் தளபதி சூசை அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



## தமிழ்ச்செல்வம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



எரியும் அநுராதபுர விமானப்படைத்தளம்









வாசகர்கள்
அனைவருக்கும்
எங்கள் புத்தாண்டு
பொங்கல்
வாழ்த்துக்கள்



04

மாவீரர் நாள் உரை - 2007



18

தமிழ்ச்செல்வம்



கட்டுரைகள்


| | |
|---|---|
| ஜெயராஜ் | 11 |
| க.வே.பாலகுமாரன் | 18 |
| சிறி.இந்திரகுமார் | 26,40,44 |
| பு.சத்தியமூர்த்தி | 32 |
| க.பாலகிருஸ்ணன் | 36 |
| வேழினி | 42 |
| அன்பன் | 46 |
| ப.துசியந்தன் | 64 |
| சாரங்கன் | 67 |


நேர்காணல்கள்


| | |
|---|---|
| கடற்புலிகளின் தளபதி சூசை | 20 |
| ஆதிலட்சுமி சிவகுமார் | 58 |


கவிதைகள்


| | |
|---|---|
| அ.பிரியன் | 14 |
| சுபாஸ் | 15 |
| ந.அழகன் | 37 |
| அன்பரசன் | 53 |
| ஆதிலட்சுமி சிவகுமார் | 76 |


சிறுகதை


| | |
|---|---|
| தமிழ்நிலா | 50 |


வரலாற்று நவீனம்


| | |
|---|---|
| தமிழ்க்கவி | 54 |




20

நேர்காணல் கடற்புலிகளின்



Tamileelam Archive



எமது பிராந்தியத்திலே உலகப் பெரு வல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக்கொள்கிறோம். இதற்கு இலங்கைத்தீவில் நெருக்கடிநிலை நீங்கி, சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதே நேரம் பேரினவாதச் சிங்கள அரசு உலகநாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான, பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பி விடுகின்ற கைங்கரியத்தைச் செய்துவருகிறது. சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலகநாடுகள் எமது பிரச்சினையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

........ தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

மாவீரர் நாள் - 2007 உரையில் இருந்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# தலைவாசல்

## மாவீரர் நாளும் உரையும்

ஈழத்தமிழ் மக்களைத் தூண்டி எழுப்பிச் சிந்திக்கச்செய்து அதன் பயணாய்ப் போரிட வைத்த வரலாற்றுச் சாதனை எமது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களைச் சாரும். தனது பழம்பெரும் வீரவரலாற்றை இழந்து நின்ற தமிழினத்திற்கு அதை மீளப் பெற்றுக்கொடுத்த சிறப்பும் அவருடையதாகும். உலகின் போர்க்குணம்மிக்க இனங்களில் ஒன்றாக ஈழத்தமிழினம் மதிப்பிடப்படுவதற்கு அவரே காரணமானவர். சோம்பிக் கிடந்த தமிழனை மாணப்போர் செய்யவைத்தார் என்பது பிரபாகரனின் ஒப்பற்ற இமயச் சாதனை. தமிழரின் நீண்ட வரலாற்றில் தற்காலப் படைக்கலன்களையும் போரியல் தொழில்நுட்பங்களையும் செய்திறனோடு முதன்முறையாகப் பயன்படுத்தியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே. இதைச் செய்தவர் பிரபாகரன் அவர்களே.

மேதகு பிரபாகரன் அவர்கள் உலகறிந்த போரியல்மேதை, தலைசிறந்த இராசதந்திரி, புரட்சித்தலைவர், சமுதாயச்சிற்பி, உலகத் தமிழினத்திற்கு தலைமை வகிப்பவர் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள். தமிழர் தம் வாழ்வை அவர் மாற்றி அமைத்துவிட்டார். புலம்பெயர்ந்த எமது உடன்பிறப்புக்கள் மீது அவர் ஏற்படுத்திய பாதிப்பிலும் பார்க்கப் பழைய குடிகளாகப் பல நாடுகளில் வாழும் தமிழர்கள்மீது அவர் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. கூனிக்குறுகிய உலகத் தமிழினம் இன்று நிமிர்ந்து நிற்கிறது. உரிமை மறுக்கப்பட்ட தமிழுறவுகள் அவர் பெயரைச் சொல்லிப் பலம் பெறுகிறார்கள். இழந்த உரிமையைப் போராடிப் பெறமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மலேசியா, சிங்கப்பூர், மியன்மார், மணிப்பூர், தென்ஆபிரிக்கா, மொறிஷியஸ் போன்றவற்றின் இந்திய வம்சாவழித் தமிழர்கள் பிரபாகரனின் தலைமையை விரும்பி ஏற்றுள்ளனர். ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27ஆம் நாள் அவர் ஆற்றும் மாவீரர் நாள் உரையை உலகத் தமிழினம் காதுகொடுத்துக் கேட்கிறது. வருடமொருமுறை உரையாற்றும் அவருடைய வழமையைப் பிறிதோர் நாட்டில் காணமுடியாது. உலக அரசியல் வரலாற்றில் எமது தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர்உரை ஒரு புதிய அனுபவம். இவ்வருட மாவீரர் உரை உலகத் தமிழினத்திடம் சென்றடையக்கூடாது என்ற நோக்கில் புலிகளின்குரல் வானொலி மீது எதிரி நடத்திய தாக்குதல் பயனளிக்கவில்லை. மாவீரர் உரை உலகெலாம் பரவியது. மாவீரர் நாள் நிகழ்வுகளும் வெற்றிகரமாக நடைபெற்றன.

நவம்பர் 27 எமது மாவீரர்களின் கல்லறைகளில் நாம் விளக்கேற்றும் நாளாகும். அவர்கள் எமது இனத்தின் காவல்தெய்வங்களாவர். இளவயதில் இளமையின் சுகங்களை மறந்து அவர்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். மாவீரர்கள் வாழும் இடத்தைத் துயிலும்இல்லம் என்கிறோம். மாவீரர் நாள் வணக்கம் உலகத் தமிழினத்திற்கும் ஈழத்தமிழினத்திற்கும் மத உணர்வோடு வணங்கும் மரபாகியுள்ளது. நவம்பர் 27 இருவகையில் எமக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. அது எமது மாவீரர்களுக்கு விளக்கேற்றும் நாள். நாம் வருடம் பூராகவும் கேட்பதற்குக் காத்திருந்த தேசியத் தலைவரின் மாவீரர்நாள் உரை வெளிவரும் நாள். இருவகையிலும் இந்தநாள் சிறப்புப் பெறுகிறது.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக
ஜனவரி 2008
இருபத்தேழாம் ஆண்டு



தமிழீழ தேசியத் தலைவர்

## மேதகு வே. பிரபாகரன்

அவர்களின்

மாவீரர் நாள் உரை - 2007

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 2007.

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள். தமிழீழச் சுதந்திரப் போரை இந்தப் பூமிப்பந்திலே முதன்மையான விடுதலைப் போராட்டமாக முன்னிறுத்திய எமது மாவீரச் செல்வங்களை நினைவுகூரும் தூய நாள். ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரி நட்சத்திரங்களாக எரிந்து, எமது விடுதலை வானை அழகுபடுத்தி, அலங்கரித்து [illegible] எமது சுதந்திரச்சிற்பிகளை நினைவுகூரும் புனித நாள்.

எமது மண்ணிலே, எமது காலத்திலே எமது கண்முன்னே வீரத்திற்கு இலக்கணமாக வாழ்ந்து, விடுதலையின் வித்தாக வீழ்ந்தவர்கள் எமது மாவீரர்கள். எதிரிக்குத் தலைவணங்காத வணங்கா மன்னர்கள். எமது தேசவிடுதலைக்காக [illegible] விடுத்த மாவீரர் அனைவரும் மனிதமலைகளாக, மன[illegible]யற்ற ஈகங்கள் புரிந்து, அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் செய்து, எண்ணற்ற சாதனைகள் புரிந்து எமது தேசத்தின் வரலாற்றுச் சக்கரத்தை விடுதலையின் பாதையில் விரைவாக அசைத்துச் செல்பவர்கள் எமது மாவீரர்களே.

மனித வரலாற்றுச் சக்கரம், காலங்களைக் கடந்து, யுகங்களை விழுங்கி, முடிவில்லாமற் சுழல்கிறது. இந்த முடிவில்லாத இயக்கத்தில், உலகத்து மனிதன் நிறையவே மாறிவிட்டான். அவனிடத்தில் எத்தனையோ புதிய சிந்தனைகள் தோன்றியிருக்கின்றன எத்தனையோ புதிய கருத்தோட்டங்கள் பிறந்திருக்கின்றன. எத்தனையோ புதிய எண்ணங்கள் அவன் மனதிலே தெறித்திருக்கின்றன. இந்தச் சிந்தனைத் தெறிப்பிலே, சுதந்திரமும் சமத்துவமும் சுபிட்சமும் ஒரு வாழ்வை அவன் கண்டுகொண்டான். சாதி, சமய, பேதங்கள் ஒழிந்த, அநீதியும் அட்டூழியங்களும் அகன்ற, சூழ்ச்சிகளும் சுரண்டல்களும் நீங்கிய, கொந்தளிப்புக்களும் நெருக்கடிகளும் அகன்ற ஓர் உன்னத வாழ்வைக் கற்பிதம் செய்தான். இந்தக் கற்பிதத்திலிருந்து தோன்றிய கருத்துருவம்தான் சுதந்திரம். இந்த உன்னதமான கருத்[illegible]யின் உயரிய இலட்சியமாக வரித்து, மனிதன்

ஓயாது வீசும் இந்த விடுதலைப் புயல் இன்று எமது தேசத்திலே மையம்கொண்டு நிற்கிறது. சுழன்றடிக்கும் சூறாவளியாக, குமுறும் எரிமலையாக, ஆர்ப்பரித்தெழும் அலைகடலாக எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டுநிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமாகத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்துநிற்கின்றனர். எல்லைக்காப்புப் படைகளாக, துணைப்படைகளாக, விசேட அதிரடிப்படைகளாக எழுந்துநிற்கின்றனர். போர்க்கோலம் கொண்டு, மூச்சோடும் வீச்சோடும் போராடப் புறப்பட்டுநிற்கின்றனர்.

முப்பத்தைந்து ஆண்டுகளாக ஓய்வில்லாமல் வீசும் எமது வீரவிடுதலை வரலாற்றில் நாம் என்றுமில்லாதவாறு தரைப்படை, கடற்படை, வான்படையென முப்படைகளும் ஒன்றுசேர ஒரு பெரும் படையாக எழுந்து, நிமிர்ந்து நிற்கிறோம். நீண்ட கொடிய சமர்களிற் களமாடி அனுபவமும் முதிர்ச்சியும் பெற்ற முன்னணிப் படையணிகளோடும் பன்முகத் தாக்குதல்களையும் நிகழ்த்தவல்ல சிறப்புப் பயிற்சிபெற்ற சிறப்புப் படையணிகளோடும் நவீன படைக்கலச் சக்திகளுடனும் பெரும் போராயுதங்களுடனும் ஆட்பலம், ஆயுதபலம், ஆன்மபலம் எனச் சகல பலத்துடனும் நவீன இராணுவமாக வளர்ந்துநிற்கிறோம். நீண்டகாலம் பெரும் சமர்களை எதிர்கொண்டு, மூர்க்கமாகப் போர்புரிந்து பெற்றெடுத்த பட்டறிவாலும் கற்றறிந்த பாடங்களாலும் கட்டப்பட்டுச் செழுமைபெற்ற புதிய போர் மூலோபாயங்களோடும் புதிய போர்முறைத் திட்டங்களோடும் நவீன போரியல் உத்திகளோடும் எதையும் எதிர்கொள்ளத் தயாராக நிற்கிறோம். இந்த மலையான நிமிர்விற்கு, இந்தப் பூகம்ப மாற்றத்திற்கு ஆதாரமாக நிற்பவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் இங்குப் பெருமிதத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

> மனித வரலாற்றுச் சக்கரம், காலங்களைக் கடந்து, யுகங்களை விழுங்கி, முடிவில்லாமற் சுழல்கிறது. இந்த முடிவில்லாத இயக்கத்தில், உலகத்து மனிதன் நிறையவே மாறிவிட்டான். அவனிடத்தில் எத்தனையோ புதிய சிந்தனைகள் தோன்றியிருக்கின்றன எத்தனையோ புதிய கருத்தோட்டங்கள் பிறந்திருக்கின்றன. எத்தனையோபுதிய எண்ணங்கள் அவன் மனதிலே தெறித்திருக்கின்றன. இந்தச் சிந்தனைத் தெறிப்பிலே, சுதந்திரமும் சமத்துவமும் சுபிட்சமும் ஒரு வாழ்வை அவன் கண்டுகொண்டான். சாதி, சமய, பேதங்கள் ஒழிந்த, அநீதியும் அட்டூழியங்களும் அகன்ற, சூழ்ச்சிகளும் சுரண்டல்களும் நீங்கிய, கொந்தளிப்புக்களும் நெருக்கடிகளும் அகன்ற ஓர் உன்னத வாழ்வைக் கற்பிதம் செய்தான். இந்தக் கற்பிதத்திலிருந்து தோன்றிய கருத்துருவம்தான் சுதந்திரம்.

எனது அன்பார்ந்த மக்களே!

நாம் வாழும் உலகிலே புதிய பூகம்ப மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. உலகமே ஆசியாவை நோக்கித் திரும்பியிருக்கிறது. இருபத்தோராம் நூற்றாண்டும் ஆசியாவின் சகாப்தமாக ஆரம்பித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த, எமது கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் சமூக, பொருளாதார, விஞ்ஞானத் துறைகளிலே பெருவளர்ச்சியிட்டி முன்னேறி வருகின்றன. அண்டவெளி ஆராய்ச்சிகள், சந்திரமண்டல ஆய்வுகள், அணுக்கருப் பரிசோதனைகளெனப் புதிய பாதையிலே பயணிக்கின்றன. மனித சமுதாயம் முன்னெப்போதும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, இயற்கையின் எண்ணற்ற புதிர்களுக்கு விடைகள் காணவும் தீராத வியாதிகளுக்குத் தீர்வுகள் தேடவும் புதிய பயணத்திலே இறங்கியிருக்கிறது. அரிய உயிரினங்களையும் தாவர வகைகளையுங்கூடக் காத்து, பூகோள முழுமையையும் பாதுகாக்கின்ற புனித முயற்சியிலே காலடி எடுத்து வைத்திருக்கிறது. ஆனால், சிங்களத் தேசம் மாத்திரம் நேரெதிர்த் திசையிலே, அழிவு நோக்கிய பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது. தன்னையும் அழித்து, தமிழினத்தையும் அழித்து வருகிறது. இதனால், அழகிய இலங்கைத்தீவு இரத்தத்தீவாக மாறியிருக்கிறது.

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும் தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் [illegible]களுக்கு மேலாகவே இனவாத விசத்தினுள் மூழ்கிக்கிடக்கிறது. சிங்கள இனவாத விசம் இன்று மிருகத்தனமான வன்முறையாகக் கோரத்தாண்டவமாடுகிறது. அறுபது ஆண்டுகளுக்குமேலாக வன்முறை அகன்ற அகிம்சை வழியிலும், ஆயுதவழியிலும் தமிழர் நீதிகேட்டபோதும் சிங்கள உலகிலே சிந்தனை மனமாற்றம் நிகழவில்லை. எத்தனையோ இழப்புக்கள், எத்தனையோ அழிவுகள், எண்ணற்ற உயிர்ப்பலிகள் நிகழ்ந்தபோதும் சிங்களத் தேசம் மனந்திருந்தவில்லை. தொடர்ந்தும், அது வன்முறைப் பாதையிலேயே பயணிக்கிறது. அடக்குமுறையாலும் ஆயுதப் பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே அது விரும்புகிறது. அமைதி முயற்சிகளுக்குூட்டிவைத்துவிட்டு, தனது இராணுவ நிகழ்ச்சித்திட்டத்தைத் துணிவுடனும் திமிருடனும் தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது. இதற்குச் சர்வதேசச் சமூகத்தினது பொருளாதார, இராணுவ உதவிகளும் அரசியல் தார்மீக ஆதரவும் இராஜதந்திர முண்டுகொடுப்புக்களும் ஒருபக்கச்சார்பான தலையீடுகளுந்தான் காரணம்.

எமது பிராந்தியத்திலே உலகப் பெரு வல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக் கொள்கிறோம். இதற்கு இலங்கைத்தீவில் நெருக்கடிநிலை நீங்கி, சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக [illegible]டும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக் [illegible]

Tamileelam Archive

நாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான, பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பிவிடுகின்ற கைங்கரியத்தைச் செய்துவருகிறது. சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலகநாடுகள் எமது பிரச்சினையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

இப்படியான அநீதியில் அமைந்த அந்நியத் தலையீடுகள், காலங்களை விழுங்கி நீண்டுசெல்லும் எமது போராட்டத்திற்குப் புதியவை அல்ல. அன்று இந்தியா தனது தெற்கு நோக்கிய வல்லாதிக்க விரிவாக்கமாக எமது தேசியப் பிரச்சினையிலே தலையீடு செய்தது. தமிழரது சம்மதமோ ஒப்புதலோ இன்றி, சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்தது. அடிப்படையில் அந்த ஒப்பந்தம் தமிழரது நலனுக்காகவோ நல்வாழ்விற்காகவோ செய்யப்பட்டதன்று. தீர்வு என்ற பெயரில் ஐம்பத்தேழிற் கைச்சாத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் இருந்த அதிகாரங்களைக்கூடக் கொண்டிராத எலும்புத்துண்டு போன்ற ஒரு அரைகுறைத் தீர்வை இந்தியா அன்று எம்மக்கள் மீது கட்டிவிட முயற்சித்தது. ஓர் இலட்சம் இராணுவத்தினரின் பக்கபலத்தோடும் இரண்டு அரசுகளின் உடன்பாட்டு வலிமையோடும் எட்டப்பர் குழுக்களின் ஒத்துழைப்போடும் அந்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்திவிட இந்தியா தீவிரமாக முயற்சித்தது. தமிழரது தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொட்டுநிற்காத, தமிழரின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்திசெய்யாத அந்த அரைகுறைத் தீர்வைக்கூடச் செயற்படச் சிங்களப் பேரினவாதிகள் அன்று அனுமதிக்கவில்லை.

சிங்களத் தேசம் பற்றியும் அதன் நயவஞ்சக அரசியல் பற்றியும் நாம் நன்கு அறிவோம். எமக்கு அது பற்றிய நீண்டபட்டறிவும் கசப்பான வரலாறும் இருக்கின்றன. எனவேதான், நாம் அன்று இந்தியாவுடன் பல்வேறு தடவைகள் பல்வேறு இடங்களிற் பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சுக்களின்போது, சிங்களப் பேரினவாதம் பற்றி அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறினோம். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டுவருவது சிங்கள அரசின் நோக்கமன்று, தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, தமிழரின் வளங்களை அழித்து, தமிழரை அடிமைகொண்டு, அழித்தொழிப்பதுதான் சிங்கள அரசின் நோக்கம் என்பதை அன்று இந்தியாவிற்கு எடுத்துரைத்தோம். இந்தியா இணங்கமறுத்தது. இதனால், தமிழ் மக்கள் தமது மண்ணிலேயே பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் சந்தித்தனர்.

அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது. சிங்கள அரசின் சாதுரியமான, சாணக்கியமான பரப்புரைகளுக்குப் பலியாகி, சமாதான முயற்சிகளுக்குப் பாதுகாவலனாக நின்ற நாடுகளே, எமது விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டிருக்கின்றன. இதில் வேதனையான, ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்னவென்றால் ஒருகாலத்தில் எம்மைப் போன்று தமது சுதந்திரத்திற்காகப் போராடிய தேசங்களும் எம்மைப் பயங்கரவாதிகளாகப் பட்டஞ்சூட்டியமைதான். இவற்றுக்கும் மேலாக, புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் தாம் வாழும் நாடுகளிலே பலம்பொருந்திய சக்தியாக நின்று, தமிழீழ விடுதலைப் போ[illegible] வ[illegible]வதையும் அரசியல் ஆதரவைத் திரட்டிவரு[illegible]

பேரினவாதத்தின் கோரப்பிடிக்குட்சிக்கி, எம்மக்கள் அழிந்துவருவதையும் அந்தப் பேரழிவைத் தடுக்க, புலம்பெயர்ந்த மக்கள் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானப் பணிகளையும் மேற்கொண்டுவருவதையும் சிங்களப் பேரினவாதத்தாற் சகிக்கமுடியவில்லை. எனவேதான், புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை உடைத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடச் சிங்களப் பேரினவாதம் தீவிரமாக முயற்சித்துவருகிறது. இந்த அநியாயத்திற்குச் சில உலக நாடுகளும் துணைபோகின்றன. எம்மக்கள் தாம் வாழும் நாடுகளின் அரசியற்சட்டங்களுக்கு அமைவாக, நீதி தவறாது மேற்கொள்ளும் அரசியற் போராட்டங்களையும் மனிதாபிமானச் செயற்பாடுகளையும் படுபாதகமான குற்றவியற் செயல்களாக இந்நாடுகள் காட்டிவருகின்றன. தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைதுசெய்து, சிறைகளிலே அடைத்து, அவமானப்படுத்தியிருக்கின்றன. நீதி கேட்டு, நியாயம் கோரி எம்மக்கள் நடாத்திய போராட்டங்களைக் கீழ்த்தரமாகக் கொச்சைப்படுத்தியிருக்கின்றன.

இத்தகைய நடுநிலை தவறிய ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் சர்வதேசச் சமூகம்மீது எம்மக்கள் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கைகளை மோசமாகப் பாதித்திருப்பதோடு அமைதி முயற்சிகளுக்கும் ஆப்புவைத்திருக்கின்றன. சமாதானப் பேச்சுக்களிற் பங்குகொண்ட இருதரப்பினரது சமநிலை உறவைப் பாதித்து, அமைதி ஒப்பந்தமும் முறிந்துபோக வழிசெய்திருக்கின்றன. அத்தோடு, இந்நாடுகள் வழங்கிவரும் தாராளப் பொருளாதார இராணுவ உதவிகளும் இரகசியமான இராஜதந்திர முண்டுகொடுப்புக்களும் சிங்கள இனவாத அரசை மேலும்மேலும் இராணுவப் பாதையிலேயே தள்ளிவிட்டிருக்கின்றன. இதனால்தான், மகிந்த அரசு அநீதியான, அராஜகமான ஆக்கிரமிப்புப் போரை எமது மண்ணிலே துணிவுடனும் திமிருடனும் தொடர்ந்துவருகிறது. இராணுவப் பலத்தைக்கொண்டு, தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற மமதையில் மகிந்த அரசு சமாதானத்திற்கான கதவுகளை இறுகச்சாத்தியது. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கி ஒடுக்கி ஆளவேண்டும் என்ற ஆசை என்றுமில்லாதவாறு தீவிரம்பெற்றது. முழுஉலகமும் முண்டுகொடுத்துநிற்க, போர்நிறுத்தத்தைக் கவசமாக வைத்து, சமாதானச் சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்தி, மகிந்த அரசு ஆக்கிரமிப்புப் போரை அரங்கேற்றியது. போர்நிறுத்தத்தைக் கண்காணித்த கண்காணிப்புக் குழு கண்களை மூடிக்கொண்டும் கைகளைக் கட்டிக்கொண்டும் கொழும்பிலே படுத்துறங்கியது. அனுசரணையாளரான நோர்வே நாட்டினர் அலுத்துப்போய் அமைதியாக இருந்தார்கள். எமக்குச் சமாதானம் போதித்த உலக நாடுகள் மௌனித்துப் பேசமறுத்தன. 'சமாதானத்திற்கான போர்' என்றும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கை' என்றும் 'தமிழரின் விடுதலைக்காக, விமோசனத்திற்காக நடாத்தப்படும் போர்' என்றும் சிங்கள அரசு தமிழின அழிப்பை நியாயப்படுத்திப் போரைத் தொடர்கிறது.

மகிந்த அரசு தனது முழுப் படைப்பலசக்தியையும் ஆயுதங்களையும் ஒன்றுதிரட்டி எமது தாயகத்தின் தெற்குப் பிராந்தியம் மீது பெரும் போரைக் கட்டவிழ்த்துவிட்டது. ஓயாத மழையாகப் பொழிந்த அகோரக் குண்டுவீச்சுக்களாலும் எறிகணைகளாலும் எமது பண்டைய நாகரிகம் புதைந்த வரலாற்றுமண் மயானபூமியாக மாறியது. சரித்திரப் பிரசித்தி பெற்ற தமிழரின் தலைநகரான திருமலை சிதைக்கப்பட்டது. தமிழரின் பண்டைய பண்பாட்டு நகரான மட்டக்களப்பு அகதிகளின் நகரமாகியது. வடக்கில் தமிழரின் கலாச்சார மையமான யாழ்ப்பாணம்



சிறைச்சாலையாக மாற்றப்பட்டது. மொத்தத்தில், சிங்கள அரசின் தமிழின அழிப்புப்போர் தமிழரின் நிம்மதியான வாழ்வைக் கெடுத்து, தமிழரை அகதிகளாக்கி, தமிழரின் சமூக, பொருளாதார வாழ்வைச் சீரழித்து, தமிழருக்கு என்றுமில்லாத பேரவலத்தைக் கொடுத்திருக்கிறது. எமது தாய்நிலம், ஒருபுறம் சிங்கள இராணுவப் பேயாட்சிக்குட் சிக்கிச்சீரழிய, மறுபுறம் உயர் பாதுகாப்பு வலயங்கள், விசேட பொருளாதார வலயங்கள் என்ற பெயரில் வேகமாகச் சிங்களமயப்படுத்தப்படுகிறது. சிங்கக் கொடிகளை ஏற்றியும் சித்தார்த்தன் சிலைகளை நாட்டியும் வீதிகளுக்குச் சிங்களப் பெயர்களை மாற்றியும் பௌத்த விகாரைகளைக் கட்டியும் சிங்களமயமாக்கல் கடுகதி வேகத்திலே தொடர்கிறது. இதன் உச்சமாக, தமிழீழத்தின் தென் மாநிலம் முழுவதிலும் சிங்களக் குடியேற்றங்கள் காளான்கள் போன்று அசுரவேகத்திலே முளைத்துவருகின்றன.

அநீதியான யுத்தம் ஒன்றை நடாத்தி, பொருளாதாரத் தடைகளை விதித்து, போக்குவரத்துச் சுதந்திரத்தை மறுத்து, தமிழரைக் கொன்றுகுவித்து, இலட்சக்கணக்கில் இடம்பெயரவைத்துவிட்டு, தமிழின ஆன்மாவை ஆழமாகப் பாதித்த இந்தச் சோகமான நிகழ்வைச் சிங்களத் தேசம் வெற்றிவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது. தமிழரைப் போரில் வென்றுவிட்டதாகப் பட்டாசு கொழுத்தி, வாணவேடிக்கைகள் காட்டி ஆர்ப்பரிக்கிறது. கிழக்கு மீதான முற்றுகை வலயம் முற்றுப்பெற்றுவிட்டதாக[illegible] யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி முன்வேலியை [illegible]

யோரம் முழுமைக்கும் விலங்கிட்டுவிட்டதாகச் சிங்களப் பேரினவாதம் திமிர்கொண்டது. புலிகளுக்கு எதிரான போரிற் பெருவெற்றி ஈட்டிவிட்டதாகச் சிங்கள ஆட்சிப்பீடம் திருப்திகொண்டது.

எமது விடுதலை இயக்கத்தையும் எமது விடுதலைப் போராட்டத்தையும் சிங்களத் தேசம் எப்போதும் தவறாகவே புரிந்துகொள்கிறது. குறைத்தே மதிப்பீடுசெய்கிறது. பூகோள அமைப்பையும் புறநிலை உண்மைகளையும் மிகவும் துல்லியமாகக் கணிப்பிட்டு, எதிரியின் பலத்தையும் பலவீனத்தையும் சரியாக எடைபோட்டு, எதிர்விளைவுகளை மதிப்பீடு செய்து, இவற்றின் அடிப்படையிலேயே நாம் எமது போர்த்திட்டங்களைச் செயற்படுத்துகிறோம். எதிரியின் யுத்த நோக்குகளையும் உபாயங்களையும் முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக அனுமானித்தறிந்தே, எமது போர்த்திட்டங்களை வகுக்கிறோம். இப்படித்தான் கிழக்கிலும் எமது போர்த்திட்டங்களை வகுத்தோம். தற்காப்புத் தாக்குதல்களை நடாத்தியவாறு தந்திரோபாயமாகப் பின்வாங்கினோம். புலிகளின் தேசத்தில் அகலக்கால் நீட்டுவதும் நீட்டிய காலை நிலையாக வைத்திருப்பதும் எத்தனை ஆபத்தான விவகாரம் என்பதை சிங்களம் 'ஜெயசிக்குறு' சமரிற் கற்றிருக்கலாம். ஆனால், சிங்கள இராணுவம் நாம் விரித்த வலைக்குள் வகையாக விழுந்து, பெருந்தொகையில் படையினரை முடக்கி, ஆளில்லாப் பிரதேசங்களை இன்று ஆட்சிபுரிகிறது. நில அபகரிப்பு என்ற பொறியிற் சிங்களம் மீளமுடியாதவாறு மீளவும் [illegible]கிறது. இதன் பாரதூரமான விளைவுகளை அது

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

**சத்திய இலட்சியத்திற்காகச் சாவைச் சந்தித்துச் சரித்திரமாவதற்கு ஆயிரமாயிரம் வீரர்கள் எமது விடுதலை இயக்கத்தில் அணிவகுத்து நிற்கும் வரை, எமக்கு முன்னால் எழுகின்ற எல்லாத் தடைகளையும் நாம் உடைத்தெறிந்து போராடுவோம். எதையும் தாங்கும் இதயத்துடனும் இரும்பை யொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும் வரை, எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.**

வரலாற்றிலே முதல்தடவையாக எமது கரும்புலி அணியினரும் வான்புலிகளும் கூட்டாக நடாத்திய 'எல்லாளன்' நடவடிக்கை சிங்கள இராணுவப்பூகத்தின் உச்சந்தலையிலே ஆப்பாக இறங்கியிருக்கிறது. இந்த மண்டை அடி சிங்களம் கட்டிய கற்பனைகள் கண்டுவந்த கனவுகள் அத்தனையையும் அடியோடு கலைத்திருக்கிறது. அநுராதபுர மண்ணில் எம்மினிய வீரர்கள் ஏற்படுத்திய இந்தப் பேரதிர்விலிருந்து சிங்களத் தேசம் இன்னும் மீண்டெழவில்லை. ஈகத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட இந்த வீரர்களின் உயர்ந்த உன்னதமான அர்ப்பணிப்பு சிங்களத் தேசத்திற்கு ஒரு செய்தியைச் சொல்கிறது. அதாவது, தமிழனை அழிக்க நினைப்போருக்கு அழிவு நிச்சயம் என்பதோடு, இந்த மாவீரர்கள் பற்றவைத்துள்ள விடுதலைத்தீயின் எரிநாக்குகளிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும் தப்பிவிடமுடியாது என்பதுதான் அது.

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இன்னும் உணர்ந்துகொள்ளப்போவதில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப்பிடிக்கவேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்களமயமாக்கிவிடவேண்டும் என்ற ஆதிக்கவெறியும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து அகன்றுவிடப்போவதில்லை. தொடர்ந்தும் கோடிகோடியாகப் பணத்தைக் கொட்டி, உலகெங்கிலிருந்தும் ஆயுதங்களையும் போராயுதங்களையும் தருவிக்கவே மகிந்த அரசு முனைப்புடன் செயற்படுகிறது. எனவே, மகிந்த அரசு தனது தமிழின அழிப்புப் போரைக் கைவிடப்போவதில்லை.

தனது பாரிய இராணுவத் திட்டத்தையும் அதன் விளைவாகத் தமிழீழ மண்ணில் ஏற்பட்டுவரும் பேரவலங்க

களின் உதவியையும் பேராதரவையும் பெற்றுக்கொள்ளவே மகிந்த அரசு அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவை அமைத்தது. இதனைக் கடந்த மாவீரர் நினைவுரையில் நான் தெளிவாக எடுத்துக்கூறியிருந்தேன். வருடக்கணக்கிற் காலத்தை இழுத்தடித்து, எந்தவிதமான தீர்வையும் முன்வைக்கமுடியாது, இறுதியில் இரண்டு மாத விடுப்பிற் பிரதிநிதிகள் குழுவினர் சென்றிருப்பது இதனையே காட்டிநிற்கிறது.

தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது. தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தமிழரின் தேசியத் தனித்துவத்தை அங்கீகரிக்கவும் தென்னிலங்கைக் கட்சிகள் தயாரில்லையென்பதும் இன்று சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என ஆளும்கட்சி அடம்பிடிப்பதும் தீர்வுத்திட்டமே வேண்டாம் என மஞ்சள், சிவப்புக் கட்சிகள் பிடிவாதமாக நிற்பதும் கடந்தகால நிலைப்பாடுகளிலிருந்து குத்துக்கரணம் அடித்து, அரசின் போர் நடவடிக்கைக்கும் ஆதரவு, சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு எனப் பிரதான எதிர்க்கட்சி எதையும் தெளிவாகக் கூறாது இழுவல் மொழியில் நழுவிக் கண்ணாம்பூச்சி விளையாடுவதும் இதனைத்தான் தெளிவுபடுத்துகின்றன. இதன்மூலம் சிங்கள அரசியற் கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தமிழின விரோதப் பேரினவாதக் கட்சிகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான இனவாதக் கட்சிகளிடமிருந்து யாரும் தீர்வை எதிர்பார்த்தால், அது அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.

சிங்களப் படைகளின் 'அக்கினிக்கீல' என்ற பாரிய படை நடவடிக்கையைத் தவிடுபொடியாக்கி, போரிற் புலிகளை வெற்றிகொள்ளமுடியாது என்பதைச் சிங்களத் தேசத்திற்கு இடித்துரைத்தபோதுதான் அன்று சிங்களம் அமைதி முயற்சிக்கு ஆர்வங்காட்டியது. எமது உயரிய போராற்றலை வெளிப்படுத்தி, இராணுவ மேலாதிக்கநிலையில் நின்றபோதுதான் சிங்களத் தேசம் அமைதி ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டது. உலக நாடுகளிலிருந்து பெற்ற தாராள நிதியுதவிகளையும் ஆயுத உதவிகளையுங் கொண்டு தனது சிதைந்துபோன இராணுவ இயந்திரத்தைச் செப்பனிட்டு, தனது இராணுவ அரக்கனைப் போரிற்குத் தயார்ப்படுத்திச் சிங்களத் தேசம் சமாதான வழியிலிருந்தும் சமரசப் பாதையிலிருந்தும் விலகித் தனது பழைய இராணுவப்பாதையிற் பயணிக்கிறது.

மகிந்த அரசு ஒருதலைப்பட்சமாகப் போர்நிறுத்தத்தை முறித்து, தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் அழித்தொழிக்கும் இராணுவச் செயற்றிட்டத்தை இன்று ஈவிரக்கமின்றிச் செயற்படுத்திவருகிறது. ஆயிரக்கணக்கில் எம்மக்களைக் கொன்றுகுவித்து, கூட்டிப் புதைகுழிகளுக்குட் புதைத்து, பெரும் மனித அவலத்தை எம்மண்ணில் நிகழ்த்திவருகிறது. அனுசரணையாளரான நோர்வேயை அவமதித்து அடக்கிவருகிறது. கண்காணிப்புக்குழுவைக் காரசாரமாக விமர்சித்துவருகிறது. தனது பயங்கரவாதத்தை மூடிமறைக்க ஐநாவின் உயர் அதிகாரிகளைக்கூடப் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கிறது. செய்தியாளர்களோ தொண்டுநிறுவனங்களோ செயற்படமுடியாதவாறு தமிழர் தாயகத்திற் பதற்றத்தையும் பயப்பீதியையும் உருவாக்கி, உண்மை நிலைவரத்தை உலகிற்கு

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னமும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக்காகப் போராடிய கிழக்குத்தீமோர், மொன்ரி நீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்துகொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

இருப்பினும், எமது தேசியப் பிரச்சினையிற் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும் நடவடிக்கைகளும் எம்மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எம்மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்துபோயிருக்கிறது. இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கிறது. சமாதானத்திற்காக உழைத்த எமது தலைப்புதல்வன் தமிழ்ச்செல்வனைச் சர்வதேசம் சமாதானம் பேசியே சாகடித்திருக்கிறது. அமைதிப் பாதையில் இயங்கிய எமது விடுதலை இயக்கத்தின் இதயத்துடிப்பை வலுக்கட்டாயமாக இழுத்து நிறுத்தியிருக்கிறது. எமது இதயங்களில் இலட்சிய நெருப்பை மூட்டி, மறைந்த மாவீரருக்கு ஆண்டுதோறும் விளக்கேற்றும்போது எப்போதும் என்னருகிருக்கும் எனது அன்புத் தம்பி தமிழ்ச்செல்வனுக்கும் சேர்த்து இம்முறை என்கையால் ஈகச்சுடரேற்றும் நிலைமையைச் சர்வதேசம் உருவாக்கியிருக்கிறது. உலகத் தமிழினத்தையே கண்ணீரிற் கரைத்து, கலங்கியழவைத்திருக்கிறது.

சிங்களத் தேசத்தின் சமாதான விரோதப்போக்கை, போர்வெறியை உலக நாடுகள் உறுதியோடு கண்டித்திருந்திருந்தால், தமிழ்ச்செல்வன் இன்று உயிரோடு இருந்திருப்பான். சமாதானத்திற்கு இப்படியொரு பேரிடி விழுந்திருக்காது. சமாதானத்தின் காவலர்களாக விற்றிருக்கும் இணைத்தலைமை நாடுகளும் இந்தப் பெரும் பொறுப்பிலிருந்து தவறியிருக்கின்றன. சமாதானத்தைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பும் தார்மீகக் கடமைப்பாடும் இந்த இணைத்தலைமை நாடுகளுக்கு இல்லையென்றால் காலத்திற்குக்காலம் இடத்திற்கிடம் அவர்கள் மாநாடு கூட்டுவதன் அர்த்தம்தான் என்ன? சிங்கள அரசிற்குச் சீர்வரிசை செய்து, ஆயுத உதவிகள் அளித்து, தமிழரை அழித்துக்கட்டத் துணைபோவதுதான் இந்த நாடுகளின் உள்ளார்ந்த நோக்கமா? இத்தனை கேள்விகள் இன்று எம்மக்களது மனங்களிலே எழுந்திருக்கின்றன. எனவே, சர்வதேசச் சமூகம் இனியாவது எமது விடுதலைப் போராட்டம் தொடர்பாக நீதியான புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என எமது மக்கள் உறுதியாக நம்புகின்றனர். இனஅழிப்பைத் தொடரும் சிங்கள அரசிற்கு இராணுவப் பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்தி, சர்வதேசச் சமூகம் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இறையாண்மையையும் ஏற்று அங்கீகரிக்கும் என எமது மக்கள் இன்றைய புனிதநாளிலே எதிர்பார்த்து நிற்கின்றனர்.

எனது அன்பார்ந்த மக்களே!

நாம் பூமிப்பந்திலே வாழ்கின்ற தனித்துவமும் விசேட பண்புகளும் கொண்ட ஒரு சிறப்புவாய்ந்த இனம். மிகவும் தொன்மை வாய்ந்த இனம். தனித்துவமான இன அடையாளங்

இனம். நீண்ட காலமாக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் இன ஒடுக்குமுறைக்கு எதிராக, விடிவு தேடி, விடுதலை வேண்டிப் போராடிவருகிறோம். நாம் காலங்காலமாகப் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது சொந்த மண்ணில் எமக்கேயுரித்தான வரலாற்று மண்ணில் அந்நியரிடம் பறிகொடுத்த ஆட்சியுரிமையை மீளநிலைநாட்டுவதற்காகவே போராடிவருகிறோம். இழந்துவிட்ட எமது இறையாண்மையை மீளநிறுவி, எமது சுதந்திரத் தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காகவே நாம் போராடிவருகிறோம்.

எமது மக்களின் இந்த நீதியான, நியாயமான, நாகரிகமான போராட்டத்தைச் சிங்களத் தேசம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள மறுத்துவருகிறது. மாறாக, எம்மண்மீதும் மக்கள்மீதும் பெரும் இனஅழிப்புப் போரை, ஆக்கிரமிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. போர் என்ற போர்வையில் மாபெரும் மனித அவலத்தை ஏற்படுத்திவருகிறது. அறுபது ஆண்டுக்காலமாக அநீதி இழைக்கப்பட்டு, அடக்குமுறைக்கு ஆட்பட்டு, சாவும் அழிவும் எண்ணில்லா இன்னல்களும் குடிபெயர்ந்த அகதி வாழ்வுமாக எம்மக்களின் அன்றாடச் சீவியம் சீரழிந்த போதும் எமக்காக எந்தவொரு நாடோ, எந்தவோர் அமைப்போ குரல்கொடுக்கவில்லை. ஆதரவோ அனுதாபமோ தெரிவிக்கவில்லை. உலகமே கண்ணை மூடிக்கொண்டு, பாராமுகமாகச் செயற்படுகிறது.

பூமிப்பந்தெங்கும் எண்பது மில்லியன் தமிழர் பரந்துவாழ்ந்த போதும், எமக்கென ஒரு நாடு இல்லாதமைதான் இந்தப் பரிதாப நிலைக்கு - இந்த மோசமான நிலைமைக்குக் காரணம். எனவே, எமது மாவீரர்களை நினைவுகூரும் இன்றைய எழுச்சிநாளில் உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ்மக்கள் அனைவரையும் தமிழீழ விடுதலைக்காக உணர்வெழுச்சியுடன் கிளர்ந்தெழுமாறு வேண்டிக்கொள்கிறேன். அறிவுவளம், செயல்வளம், பொருள்வளம், பணவளம் என உங்களிடம் நிறைந்துகிடக்கும் அனைத்து வளங்களையும் ஒன்றுதிரட்டி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு நீங்கள் வழங்கிய பங்களிப்புக்களுக்கும் உதவிகளுக்கும் இச்சந்தர்ப்பத்திலே எனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று வருங்காலத்திலும் நிறைந்த பங்களிப்பை வழங்குமாறு அன்போடும் உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன். சத்திய இலட்சியத்திற்காகச் சாவைச் சந்தித்துச் சரித்திரமாவதற்கு ஆயிரமாயிரம் வீரர்கள் எமது விடுதலை இயக்கத்தில் அணிவகுத்து நிற்கும் வரை, எமக்கு முன்னால் எழுகின்ற எல்லாத் தடைகளையும் நாம் உடைத்தெறிந்து போராடுவோம். எதையும் தாங்கும் இதயத்துடனும் இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும் வரை, எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம். புனித இலட்சியத்திற்காகத் தம்மையே ஆகுதியாக்கிக்கொண்ட எமது மாவீரரை நினைவுகூரும் இன்றைய நாளில் நாம் ஒவ்வொருவரும் அந்த மாவீரரின் இலட்சியக் கனவை எமது நெஞ்சங்களிலே சுமந்து, அந்த மாவீரரின் இறுதி இலட்சியம் நிறைவுபெறும் வரை தொடர்ந்து போராடுவோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

(வே. பிரபாகரன்)
தலைவர் தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

# தேசத்தின் குரல்

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின்



முதலாம் ஆண்டு
நினைவாக...

தேன்தமிழீழ தேசத்தின் குரலே!
ஆன்ற நுண்ணறிவுடை நல்மதி யுரைஞனே!
தோன்றிடு தாயகச்சுடர் எழும்போது
நீ விழி மூடிய செய்தியோர் கொடுமையே...!

உண்மையை உரைத்த உன் திருநாவும்
உலகினை ஈர்த்த உன் பேனாவும்
கண்களில் எரிந்த விடுதலைத் தீயும்
எங்களுள் மீண்டும் எழுவது உறுதியே...!

நினைவு நாள்
டிசம்பர் 14

தமிழரின் உரிமைப்போரில்

# தேசத்தின் குரலின் பங்கும் பணியும்

■ ஜெயராஜ்



'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் ஆற்றிய பணி என்ன? அதனை ஒரு கட்டுரையில் மதிப்பிட்டுவிட முடியுமா? அன்றி பன்முகம் கொண்ட அவரின் ஆளுமையை விளங்கிக் கொள்வதற்கோ அன்றி மதிப்பீடு செய்வதற்கோ என்னால் முடியுமா? என்பதும் கேள்விக்குரியதே.

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சுமார் 28 வருடங்கள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார். இவர் லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை குறித்த அக்கறை, விருப்பு, அவர் தம்மை உலகில் பரந்துபட்டு காணப்பட்ட விடுதலை இயக்கங்களுடனான உறவுகள், தமது இனத்தின் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை என்பன தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளக் காரணமாகியது.

> " இவர் லண்டனில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை குறித்த அக்கறை, விருப்பு, அவர் தம்மை உலகில் பரந்துபட்டு காணப்பட்ட விடுதலை இயக்கங்களுடனான உறவுகள், தமது இனத்தின் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை என்பன தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளக் காரணமாகியது "

'தேசத்தின் குரல்' பாலசிங்கம் அவர்களின் போராட்ட வரலாறு - அதில் அவர் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் சிந்தனைக்கும் முடிவுகளுக்கும் செயல்வடிவம் கொடுத்தமை, இதற்கு அப்பால் அவரின் தத்துவார்த்த உலகம், இலக்கிய வட்டம், இதில் அவரின் மொழி ஆளுமை என்பனவெல்லாம் அவர் பற்றிய மதிப்பீட்டிற்கான அளவு கோலாகக் கொள்

மேற்கூறப்பட்டவற்றை அளவிடுவதற்கான தமது படைப்புக்கள் பலவற்றையும் அவர் கொடுத்துவிட்டு சென்றுள்ளார். இவற்றில், அவர் எழுதிய 'போரும் சமாதானமும்' 'விடுதலை' அவரின் துணைவியார் அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்பன அவரின் அரசியல் பணி குறித்த மதிப்பீட்டிற்கும் பெரிதும் உதவத் தக்கவையாகும்.

மேற்கூறப்பட்ட மூன்று நூல்களும் தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் வரலாற்றுப் பதிவுகள் எனக் கூறுவது மிகையாகமாட்டாது. அதிலும் குறிப்பாகப் போரும் சமாதானமும் தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் வரலாற்று நூலாகவே கொள்ளத்தக்கதாகும்.

இந்த வகையில், 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஒரு வரலாற்று ஆசிரியனாகவும் தனது பணியைச் செய்துள்ளார் என்றே கூறுதல் முடியும். சுருக்கமாகச் சொல்வதெனில், இந்நூல்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் வரலாற்றைத் தெளிவாகவே



கொண்டு வந்துள்ள நூல்கள் எனலாம்.

இதேவேளை, இந்நூல்களில் இருந்து தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்களுடன் இணைந்து நின்றும் - தேசியத் தலைவரின் ஆலோசனை மற்றும் பணிப்பின் பேரிலும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய பணிகளையும் மதிப்பிடத்தக்கதான வாய்ப்புக்கள் அந்நூல்களில் உண்டு.

1979, 1981 ஆம் ஆண்டுகளில் லண்டனில் இருந்து தமிழகம் வந்து தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்களைச் சந்தித்து தமக்கு இடையிலான தொடர்பையும் இயக்கத்துடனான உறவையும் வலுப்படுத்திக்கொண்ட 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள், ஆரம்பத்தில், அரசியல் கோட்பாடுகள் பற்றியும் உலக நடைமுறை பற்றியதுமான அரசியல் வகுப்புக்களை நடத்துவதை முதற்பணியாகக் கொண்டிருந்தார்.

அத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் கொள்கையை கோட்பாட்டு ரீதியில் தெளிவாக வரையறை செய்வதில் பெரும் பங்காற்றிய அவர் விடுதலைப் புலிகளின் ஊடகங்களை அக்கொள்கைகளுக்கு ஏற்ப நெறிப்படுத்தும் பணியையும் ஆரம்பம் முதலே மேற்கொண்டிருந்தார். அவரின் தீவிரமானதும், முழுமையான செயற்பாடானது 1983 இல் இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஆரம்பித்ததெனலாம். இவ்இனக்கலவரத்தை அடுத்து தேசியத் தலைவரின் ஆலோசனையின் பிரகாரம் லண்டனில் இருந்து தமிழகம் வந்த 'தேசத்தின் குரல்' பாலசிங்கம் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு ஆயுதப் பயிற்சி வழங்குவதில் இருந்த தடைகளை அகற்றுவதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு அதில் முன்னேற்றம் கண்டார்.

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது நூல்களில் தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்கள் விடுதலை மீது கொண்டிருந்த பற்றுறுதி, அவரது உறுதியான கொள்கைப் பிடிப்பு, மிரட்டலுக்கோ, அச்சுறுத்தலுக்கோ பணிந்து போகாத தன்மை என்பன பற்றியும் பல தடவை குறிப்பிடுகின்றார். வேறு வகையில் கூறுவதானால், ஒவ்வொரு நெருக்கடியின் போதும் தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்கள் காட்டிய உருக்கை ஒத்த உறுதியை வியக்கின்றார்.

அத்தோடு, இவ்வேளைகளில் தேசியத் தலைவரின் பணிப்பிற்கேற்ப தான் எவ்வாறு செயற்பட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார். இதனைச் சுருக்கமாகச் சொல்லப்போனால் [illegible] 1985 யூலை மாதத்தில் தொட[illegible]தையில் இருந்து ஜெனிவாவில் 2006 இல் நடந்த முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை வரையிலும் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார்.

இப்பேச்சுக்களின் போது இந்தியாவுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில், குறிப்பாக பெங்களூர் பேச்சுவார்த்தை (1986) டில்லிப் பேச்சுவார்த்தை (1987) என்பனவற்றில் தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்களுடன் அவர் உடனிருந்தார்.

அதன் பின்னர் அதாவது, 1987 இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் பின்னர் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் இந்திய இராணுவத்தரப்புடனும், இராஜதந்திர மட்டத்திலும் (டிக்சித்துடனான சந்திப்பு) தேசியத் தலைவருடன் இருந்து பணியாற்றினார்.

இதேவேளை, தேசியத் தலைவர் பங்கேற்க முடியாத அன்றி அவர் கலந்து கொள்வதில் விரும்பம் கொள்ளாத சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் தேசியத் தலைவரின் ஆலோசனையின் பேரில் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பொறுப்பேற்று நடத்தியிருந்தார். இந்த வகையில், அவர் தலைமையேற்று சிறிலங்கா சனாதிபதி ஆர். பிரேமதாசவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் முக்கியமானவையாகும்.

ஏனெனில், இப்பேச்சுவார்த்தைகள் இலங்கையில் அரசியல் வரலாற்றில் திருப்புமுனைக்கு அடிப்படையானதொன்றாகும். அதாவது, விடுதலைப் புலிகளுடனான போரில் சலிப்புற்று வெறுத்துப்போயிருந்த இந்தியப் படைத்தரப்பை சிறிலங்கா அரசு - புலிகள் இடையிலான பேச்சுவார்த்தை வெறுப்பேற்றி வெளியேறச் செய்தது.

இதன் பின்னரான பேச்சுவார்த்தைகள், இராஜதந்திரச் செயற்பாடுகள் என்பனவற்றில் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் தவிர்ந்ததான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்றே சொல்லலாம். யாழ்ப்பாணத்தில் நடந்த சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை, வெளிநாட்டவர்களுடனான சந்திப்புக்கள் என்பனவற்றிலும், அதன் பின்னர் அவர் கடும் சுகவீனமுற்று தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேறும் வரையிலான வெளியாரின் சந்திப்புக்கள் வரையிலும் அவர் அரசியல் மற்றும் இராஜதந்திர பங்குபணி தொடரவே செய்தது.

1999 சனவரியில் அவர் கடும் சுகவீனமுற்று தாயகத்தை விட்டு வெளியேறி மீண்டும் அவர் அரசியல், இராஜதந்திரப் பணியாற்ற முன்வந்தமையானது ஒரு அதிசயமான நிகழ்வொன்றாகவே இருந்தது. ஆயினும், இக்காலப் பகுதியில் அவர் ஆற்றியதான அரசியல், இராஜதந்திரப் பணி மகத்தானது.

இக்காலப் பகுதியில் இராணுவ - அரசியல் சூழ்நிலை பெரிதும் மாற்றம் கண்டிருந்தது. இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளின் கை மேலோங்கியிருந்ததினால், சர்வதேசத்தின் கவனமும் அழுத்தமும் விடுதலைப் புலிகள் மீது அதிகரித்ததாகவும் திணிக்கப்படுவதாகவும் மாறியிருந்தது.

தேசியத் தலைவர் வேபிரபாகரன் அவர்களும் நல்லெண்ணத்துடன் கூடியதானதொரு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்குத் தயாரான நிலையில் இருந்தார். இத்தகையதொரு நிலையில் சர்வதேசத்தின் மேற்பார்வையில் யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இப்பேச்சுக்களிலும் தேசியத் தலைவருக்கும் சமாதான ஏற்பாட்டாளருக்கும் இடையிலான தொடர்பாளராகவும் யுத்த நிறுத்த உடன்பாட்டை உருவாக்குவதில் ஏற்பட்ட இடையூறுகளை நீக்கும் வகையிலான இராஜதந்திர செயற்பாட்டிற்கு உதவியாளராகவும் அவர் செயற்பட்டார்.

"

'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்து கொள்ளும் பேச்சுக்களில் சிறிலங்கா தரப்பில் கலந்து கொள்வது சவால் நிறைந்ததொன்று என்ற நிலைகூட ஏற்பட்டிருந்தது. இதன் வெளிப்பாடாகவே மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஜெனிவாவில் நடந்த முதற்கட்டப் பேச்சுக்களுக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பும்போது அவர்களுக்குக் கொழும்பில் பல கருத்தரங்குகளை நடத்த வேண்டியதாக இருந்தது.

அந்தளவிற்கு 'தேசத்தின் குரல்' இராஜதந்திர நகர்வுகளிலும் பேச்சு மேசையிலும் பட்டறிவைக் கொண்டிருந்தார். எதிர்த்தரப்பினர் அஞ்சும் அளவிற்கு அவரின் வாதத்திறமை இருந்தது.

"

இவ் யுத்த நிறுத்த உடன்பாடு தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையிலும் இது இலங்கையில் இராணுவ அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம்மிக்கதொன்றே. இவ்வுடன்பாடானது அடிப்படையில் விடுதலைப் புலிகள் தரப்பில் சில அனுகூலங்களைக் கொண்டிருந்தது. இதில் குறிப்பாக, இலங்கைத்தீவில் இரு இராணுவங்கள் உண்டு என்பதும் இவ்விரண்டிற்கும் வெவ்வேறு கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் இருக்கின்றன என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதானதாகியது. இதன் பிரகாரம் இலங்கைத்தீவின் இறைமையைச் சிறிலங்கா அரசு முற்றிலும் கொண்டிருக்கவில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டதாகியது.

இதன் பின்னர், இவ்யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரமான பேச்சுவார்த்தையின் தலைமைப் பேச்சாளராக 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் செயற்பட்டார். பேச்சுவார்த்தை மேசையில், அவரின் பேச்சுவன்மை, இராஜதந்திர செயற்பாடு, மிடுக்கு என்பன மூலம் புலிகள் தரப்பு வாதம் வெற்றிகரமாக வலியுறுத்தப்பட்டு இணக்கப்பாடுகள் காணப்பட்டதாயினும், சிறிலங்கா ஆட்சியாளர்களின் உடன்பாடுகளை/ இணக்கப்பாடுகளை மீறும் வழமையான செயற்பாடுகளால் அவை நடைமுறையில் சாத்தியமற்றவையாகின.

இதேவேளை, 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்து கொள்ளும் பேச்சுக்களில் சிறிலங்கா தரப்பில் கலந்து கொள்வது சவால் நிறைந்ததொ[illegible]ட்டிருந்தது. இதன் [illegible] மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஜெனிவாவில் நடந்த முதற்கட்டப் பேச்சுக்களுக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பும்போது அவர்களுக்குக் கொழும்பில் பல கருத்தரங்குகளை நடத்த வேண்டியதாக இருந்தது.

அந்தளவிற்கு 'தேசத்தின் குரல்' இராஜதந்திர நகர்வுகளிலும் பேச்சு மேசையிலும் பட்டறிவைக் கொண்டிருந்தார். எதிர்த்தரப்பினர் அஞ்சும் அளவிற்கு அவரின் வாதத்திறமை இருந்தது. இதனை சமாதான ஏற்பாட்டாளர்களும் நன்கே புரிந்து கொண்டிருந்தனர். இதனால் அவர்களால் ஒரு சிறந்த இராஜதந்திரியாகவும் மதிக்கப்பட்டார்.

இதேவேளை, பேச்சுவார்த்தை மேசையில் மட்டுமல்ல, மேடைப் பேச்சிலும் அவரின் ஆற்றல் மிகவும் அசாதாரணமானதாகவே வெளிப்பட்டது. நீண்ட நேரப் பேச்சை மிகவும் நகைச்சுவையுடனும் அதேசமயம் தாம் எடுத்துக் கொண்ட விடயத்தில் இருந்து விலகிச் செல்லாமலும் பேசும் ஆற்றல் அவரிடம் இருந்தது.

அதிலும், குறிப்பாக, தேசியத் தலைவர் அவர்கள் ஆண்டு தோறும் ஆற்றும் மாவீரர் தின உரை தொடர்பாக 'தேசத்தின் குரல்' ஆற்றும் விளக்கவுரைகளைக் கேட்பதற்கெனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவதே அவரின் பேச்சாற்றலின் திறனை வெளிப்படுத்தப் போதுமானதாகும். ஆனால், இவை அரசியல், இராஜதந்திர ரீதியில் அவர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றிய பங்கு பணியை மேலோட்டமாகத் தொட்டுச் செல்லும் கட்டுரையே ஆகும்.

'இந்தப் பணிகளில் அவர் எந்தளவிற்குத் தனது ஆழமான கரிசனையைக் கொண்டிருந்தார். அவற்றில் எத்தகைய அணுகு முறைகளை, நுணுக்கங்களைக் கைக்கொண்டார், அவர் கற்றிருந்த அரசியலும், தத்துவ ஞானமும் மனோவியலும் எந்தளவிற்கு உதவியாக இவற்றிற்கு இருந்தன என்பன பற்றியதான ஆய்வு என்பது மிகப் பெரியது. அதற்கான அறிவாற்றலும் பெரிதாக இருத்தல் வேண்டும்.

இவற்றிற்கும் அப்பால், அவரின் வாழ்வியல் குண இயல்பு, அவர் மானுடத்தின்பால் கொண்டிருந்த பற்று, பாசம், மனித நேயம், நட்புரிமை என்பனவற்றையும் இவை யாவற்றிற்கும் மேலாக தமிழீழத் தேசியத் தலைவர் மீது அவர் கொண்டிருந்த உயர்ந்த மதிப்பு, மரியாதை, தோழமை என்பவற்றை அறிதல் என்பதும் ஒரு நீண்டதொரு தேடலாகவே இருக்கும்.

■ நன்றி: வெளிச்சம்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# புன்னகை மொழியின் வி(பு)தைவு...

காலைச்சூரியன்
கறுப்பு ஒளியோடு - அன்று
கால்பதித்தது...
நெருப்போடு நின்று
சிரித்த
வரிப்புலியை
வாயடைத்துவிட்டு
வானேறியது வல்லூறு

சிரிப்புக்களின் சேமிப்பு
சிதறியதாக
அழுகிறது... அழுகை....
'புன்னகை மொழியொன்று'
வி(பு)தைந்ததாக...
புலம்புகின்றன
பூக்கள்...

தீயொன்று
தீர்ந்த சோகத்தில்
கருகிறது திரி... - உன்

கார்த்திகையில்
காணமல் போன
'தமிழரின் செல்வனை'
இழந்து
கண்ணீர் வடிக்கிறது
கண்ணீர்...

எங்கள் சுதிரவனின்
நிலவாக நின்ற
நித்திய சிரிப்பு
சத்திய வேள்வியில்
சரித்திரமானது...

காற்றின் கண்களிலும்
கவலையின் சாம்...
'கரிகாலன் இனத்தின்'
நெஞ்செங்கும் பாரம்...

இன்றைய இரவின் முடிவில்
புலரும் பொழுதில் - உன்
புன்னகைபோடு

அ.பிரியன்

# திசைகளைக் கிழிக்கும் அமைதிப்புறாக்களின் சிறகோசை

02.11.2007



எங்களுடைய காடுகளுக்கு மேலால் கடந்து
காகங்களும் வெண்புறாக்களும் பறந்து போகின்றன
பனை மரங்கள் நுங்குக் குலைகளோடு சரிகின்றன.
சூரியனின் முகத்தில் இரத்தச் சிதறல்கள்

சமாதானப் புறாவின் சிறகை அரிந்துகொள்ள
கழுகுகள் கூட்டம் கூட்டமாய் கீழிறங்குகின்றன.

சமாதானம் எப்படி வரும்
சமாதானம் எப்ப வரும்

02.11.07 வெள்ளிக்கிழமை
அதிகாலையின் ஆழ்ந்த பேரமைதியில் கீழிற
இயந்திரக் கழுகுகள்

சமாதானப் புறாவை வேட்டையாடின

அதன் முகத்தை சிதைத்தெறிந்த பிறகு
அது எப்படி வரும்

சமாதானத்தின் மீதான அக்கறையை
வெளிக்காட்டியாயிற்று
சமாதானத்தின் பெருவேட்கை எதுவெனவும்
விரித்துக்காட்டியாயிற்று

புறாவின் அலகில் இருந்த ஒலிவ் மரக்கிளை
தீராத தாகத்தோடு மண்ணுள் புதையுண்டு கிடக்கிறது
பறத்தல் முயற்சிகளை
வெற்றிகரமாக புதைகுழிக்குள் இட்டாயிற்று

Tamileelam Archive

வன்முறையற்ற போராட்டமற்ற கோபமற்ற
பயமற்ற ஆன்மாவின் அமைதியுடன்
பறந்த பறவையின் சிறகை அரிந்தாயிற்று

பனிவிழும் நாடுகள் எங்கும்
பயணித்து உண்மையை உரைக்கும் பொழுதினில்
வார்த்தைகளின் சாட்டை வலியை
எப்படி மறைத்தது அந்தச் சாதகப் பறவை

சுதந்திரத்தின் குறியீடாக தன்னை உயர்த்தி
உயர உயரப் பறந்ததை பற்றி
எங்கள் குழந்தைகளுக்கும் நண்பர்களுக்கும் சொல்வதற்காக
மண்டியிட்டு இருக்கின்றேன்

சிறகுகளைக் கிழித்த பின்னும் நிகழ்த்திய பறத்தலைப்பற்றி
அலகுகளைச் சிதைத்த பின்னும் நிகழ்த்திய பறத்தலைப் பற்றி
கால்களில் சிக்கிய கண்ணி வலைகளை
அறுத்து நிகழ்த்திய பறத்தலைப் பற்றி



அவர்களுக்கு சொல்லத் தொடங்கினேன்

எங்களைச் சுற்றி ஒலிக்கும் அதன் சிறகோசை
விடுதலைக்கான முழக்காக எப்படி எழும்பி விட்டது
பார்த்தீர்களா?
கழுகுகளை விரட்டி வெண்புறாக்களை
வானத்தில் வரவழைக்கும் வாழ்க்கை
எப்படி மேலுயர்கிறது பார்த்தீர்களா?

தேனில் குழைந்த புன்னகை சிந்தும் சொல்லில்
சமாதானம் பற்றி உரையாட இனியாருமில்லை
எங்களுக்கு அனேகமாக எல்லா வீரப்பறவைகளைப்
பற்றியும் தெரியும்
அவற்றினுடைய மொழி நடை கடினமானது

கிழக்கு வானத்தில் காடுகளுக்கு மேலால் பறந்து
கொண்டிருந்த
சமாதானப் பறவைகளின் சிறகை துடிக்கத் துடிக்க
அறுத்தார்கள்

வன்னிக் காடுகளுக்குள்
கண்ணி விரித்துக் காவு கொண்டார்கள்
'விடுதலைக்கப்பா'வில் சமாதான முயற்சிகளோடு கடலில்
சென்றுகொண்டிருந்த
சமாதானப் புறாக்களை வேட்டியாடினார்கள்

'விடுதலை புறா'வில் வைத்து எத்தனை சமாதானப்
பறவைகளைத் தொலைத்தார்கள்
நல்லூரில் சூரியனின் ஒளிச்சிறகு மார்பில் வீழ்ந்து கிடக்க
உன்னத சமாதானத்துக்காக உயிர் துறந்தது ஒரு உயிர்ப்பறவை
தாய்ப் பறவை தன் சிறகுகளுக்குள் பொத்திப் பொத்தி வளர்த்த
பறவைகள்
அழிக்கப்பட்ட வரலாறு இப்படித்தான் இருந்தது
சமாதானத்துக்கான சகல பறத்தல் முயற்சிகளையும்
அழித்தொழிப்பதே
கழுகுகளின் வேலையாக இருக்கிறது

எங்களுடைய எல்லாப் பறப்பு முயற்சிகளும்
சமாதானத்துக்கானவையே
கனவான்களே!



அடிமையினுடைய மொழி
உங்களுக்குப் புரிய நியாயமில்லைத்தான்
ஆனால் ஒரு கால் நூற்றாண்டில் நாங்கள் கனவான்களுடைய
மொழியை
இலக்கணச் சுத்தமாய் பேசுகிற பல்லாயிரம் குஞ்சுகளைப்
பெற்றிருக்கின்றோம்

அவர்கள் சொல்வதும்தான் உங்களுக்கு புரியவில்லை எனில்
எந்த மொழியில் நாமினி எடுத்துரைப்போம்

வசந்த காலத்தில் எமது கூடுகளுக்கு மேலால்
கருமுகில்கள் கடந்து போயின
பேரமைதி பொங்கும் நிலவு தூங்கியது

கழுகுகளின் வேட்டைகளின் போது
நாம் எங்கள் கூடுகளை இழந்து போனோம்
மீளவும் கூடுகளுக்குப் போகவேண்டும்
இது எங்களுடைய மிகப்பெரிய கனவு
உங்களுக்குத் தெரியும் கூட்டின் அருமை குறித்து
நீங்கள் உங்கள் கூடுகளில் தேசியப்பண்ணில்தான்
பாடுகிறீர்கள்
அழகாயிருக்கிறது பாடுங்கள்
அதைப் போன்றே நாமும் ஆசைப்படுதல் குற்றமா?

ஞாபகங்களில் மூண்டெரியும் கிராமங்களுக்கு
திரும்பப் பறந்து போகவேண்டும் என்ற கனவு நிறைவேறாமலேயே
சாவுவரப்போகிறது

எல்லோரும் கூடியிருந்து
வசந்தகாலப் பாடலை இசைக்கின்ற நாள் எப்போ வருமோ
அந்நிய நிலங்களில் அலைந்தபடியே இருக்க
வாழ்க்கை தொலைந்து போகப்போகிறது
வீசிய வலைகளில் மாட்டிய பறவைகளாய் கிடந்து துடிக்கிற
குரல்களை
நெரிக்கவென்றே ஒரு கூட்டமே வெளிக்கிட்டிருக்கு

எங்கட புல்வெளியில் எங்கட குஞ்சுகள் புராப் பட்டம் ஏத்தவேணும்
மீன் கூவவேண்டும்
எங்கட பனை மரத்தின்ர உச்சியில இருந்து நிலவைத் தொடவேணும்
கடற்கரையில இருக்க காத்து தலைகோத ஒரு காதல் தோய்ந்த
பாடல்
இசைக்கவேண்டும்

ஐநூறு நூற்றாண்டுகளுக்கு மேலாக நாம் இதை இழந்து போனோம்
எங்களுடைய பூர்வீக நிலத்தில்
நாங்கள் வேரோடித் தழைத்து விருட்சமெனக்
கிளைக்கவே போராடுகின்றோம்

இயந்திரக் கழுகுகள் கூட்டம் கூட்டமாய் பயங்கரமான குண்டுகளை
எங்கள் தலைக்கு மேலே கொட்டுகின்றன

பயங்கர கனவுகள் கண்டு குஞ்சுகள் வீரிட்டு அழுகின்றன
பயங்கரப் பிசாசு குரல் வளைகளைத் திருகி இரத்தம் குடிக்கிறது
பயங்கரப் பேய் பெண்களை இழுத்துக்கொண்டு போகிறது
பயங்கரம் பயங்கரம்
எல்லா இடங்களிலும் அதன் வீற்றிருப்பே

இருப்பு பயங்கரத்தின் பிடிக்குள் சிக்குண்டு போனது பற்றி
பேசியது பயங்கரவாதமா?
எழுதியது எதிர்த்தது உதவியது
உழைத்தது உருகியது பயங்கரவாதமா?

வெண்மலர்க்காடாய் சொரிகின்ற முகத்தோடு
இனி
எந்தக் காலத்திலுமே காணமுடியாத ஒரு அற்புதப் பறவை
எல்லோருடைய மனக்கூடுகளிலும் வந்தமர்கிறது
அது விடுதலைப் பயண வரலாற்றை மெல்லன சொல்கிறது

எல்லாப் பறவைகளும் வாழ்வை இழந்து போனது பற்றி
அது ஒப்பாரித்தது
அமைதியாக எடுத்துரைத்தது
அதிவார்ந்த தளத்தில் நின்று அளாவியது
எழிலார்ந்த துடிப்போடு இயம்பியது
எல்லா சூழ்ச்சி வலைகளையும் மெல்ல
தன் கூரலகால் விலக்கி விளக்கியது.

சமாதானத்துக்காகவே தனது சகல பறத்தல்களையும்
நிகழ்த்திய
பறவை இனி நிகழ்த்தப்போவதை எழுந்து பாருங்கள்

பொலிவியக் காடுகளில்
ஒலித்த அதே சிறகோசை இன்னும் பல புரட்சிக்காடுகளில்
ஒலித்த அதே சிறகோசை
எங்களுடைய வாழ்விருக்கும் நகரங்களிலும் கிராமங்களிலும்
ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும்

நிலவு கீழிறங்கி நடந்துபோகவேண்டும்
அமைதித் தேவதையே வா

விடுதலைக் குரலை இசைத்தபடி
பிரபஞ்ச ஊற்றை
எடுத்துச் செல்கிற பறவைகள் சிறகசைக்கும்
எங்கட நீல வானம் அழகியது

சிறக்கைகளுக்கு வலுவூட்டி நிகழ்த்திய
மாபெரும் வரலாற்றுப் பறப்பிது

ஒளியினுடைய குச்சிகளை அலகால் சேகரிக்கக்
கற்றுக்கொண்ட நாளிலிருந்து
அடிமை இருளோ மண்டியிட்டுக்கொண்டே இருக்கிறது
பறத்தலை விரும்பும் அனைத்துக் குஞ்சுகளிலும் பாயிப் பாயும்
சக்தியையும் வழங்கும் ஃபீனிக்ஸ் பறவையாயும் அவை சிறகு
விரிக்கின்றன

சுபாஸ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



■ க.வே.பாலகுமாரன்

# தமிழ்ச்செல்வம்

ஒடுக்குமுறைக்கு எதிரான மானிடத்தின் நெடு நீண்ட வரலாறு பலி யெடுப்புக்களால் நிரம்பியுள்ளது. இப்பலியெடுப்புக்கள் ஒருபோதும் போராட்டங்களைப் பல வீனப்படுத்தாது, மாறாக வலிமையான முன் னெடுப்புக்களாக மாறும் என்பதனைத் தனது சாவின் பின்னர் நூற் றுக்குநூறு விழுக்காடு நிரூபித்தது மட்டுமன்றி காலந்தோறும் தன் புகழைப் பன்மடங்காகப் பெருக்கும் 'சே'யின் மறைவின் நினைவினை உலகம் அண்மையில்தான் மலர்த்தி முடித்திருந்தது. இவ்வேளை யில் இப்பொழுது இன்னொரு பலியெடுப்பு. இன்னொரு கொடுங் கோன்மை அரசால் பொலிவியாவின் வலே கிரான்ட் பகுதியில் இருந்து தமிழீழத்தின் கிளிநொச்சி வரை நீளுகின்ற பலியெடுப்புக் களிவை ஆனால் ஒரு உயரிய போராளிக்குக் கிடைக்கக் கூடிய ஆகக்கூடிய மதிப்பு எதிரியால் கொல்லப்படுவதுதான். அத்தகைய போராளி யான பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் வாழ்வும், வரலாறும் பிற ருக்காக உழைத்து அவருக்காகவே மகிழ்வோடு மடிந்த வரலாற்று மனிதர்களின் வரலாற்றுத் தடங்களோடு இணைந்துவிட்டது. சர்வ தேச ரீதியிலான சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான குறியீடாக இன்று 'சே' பார்க்கப்படுகின்றார். தமிழின எழுச்சியின் வெளிப்பாடாக இன்று தமிழ்ச்செல்வன் கணிக்கப்படுகின்றார். இப்படிப்பட்டவர்கள் வர லாறுகளாலே ஒரு தேசிய விடுதலைப்போராட்டம் அதற்குரிய தகமை களைப் பெறுவதும் அதன்வழி இறுதியில் வெல்வதும் நிகழ்கின்றது. அந்த வகையில் , தான் வாழும் சூழலில் பாதிப்படைந்து போரா ளியாகி அத்தடைகளைத்தாண்டுவதின் மூலம் சிறப்பான ஆளு மையை வெளிப்படுத்தி இறுதியில் அப்போராட்டத்திற்கே உரமான தமிழ்செ ல்வன் தமிழ் கூறும் நல்லுலகின் மதிப்பைப் பெறுகின்றார்

1967இல் பரமு விசாலாட்சி இணைக்கு தமிழ்ச்செல்வனாகி, 1984இல் விடுதலைப்புலிகளுக்குத் தினேஸ் ஆகி, 2007இல் தமிழ்மக்களுக்கு தமிழ்ச்செல்வனாகிய கதைதான் இது. 1984 - 2007 வரை ... தன் இளமைப் பருவம் முழுவதையும் விடுதலை... கொடுத்த அவரது போராட்டம் முப்பரிமாணம் கொண்ட தளத்திலே ...

யமைப்பின் வளர்நிலையின்படி மலர்ச்சிப் பாதையோடு ஒத்தது. மூன்று கால கட்டங்கள், மூன்று வெவ்வேறு சூழல்கள் - இவற்றிற்கு முதலில் இசைவாக்கம் பெற்றும் பின்னர் ஈடு கொடுத்தும் அவர் செயற்பட்டதின் தடங்களே அவரது ஆளுமை பின் உருவமா கின்றன. எமது விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனை ஆண்டா கக் கருதப்படும் 1970களை அண்மித்து அவர் பிறப்பெடுக்கின்றார். பிற்காலத்தில் அறியப்பட்ட அவரது சிறந்த ஆளுமைக்குரிய பண்புகள் முற்போக்கு எண்ணங்கள் கொண்ட குடும்பப் பின்னணியாலும் விடுதலைப்புலிகளின் தொடர்புள்ள சூழலால்வளர்த்தெடுக்கப் படுகின்றன. இவை அவரை ஒரு வழமையான மனிதனாக மாறவிடாது போராளியாக்கி விடுகின்றது. அவருக்குப் பெற்றோரால் இடப்பட்ட பெயர் தமிழ்ச் செல்வன் என்பதும் அவரது புன்சிரிப்பும் , மலர்ந்த முகமும் இயல்பிலேயே உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. 'இள வயதிலும் சரி இப்போதும் சரி எதையும் தனக்கெனச் சேர்த்து வைக்கும் பழக்கமற்றவன்' என அவரது மூத்த சோதரரில் ஒருவர் கடைசியில் துயர் பகிர்வின் பொழுது நா தழுதழுக்கக் கூறினார். உண்மை யில் இப்போது எண்ணிடும் பொழுது அவரை பிற் காலங் களில் சந்தித்த எவரும் ஏதாவது பயன்களை அவரிடம் இருந்து பெறாமல் சென்றதில்லை என்பதும் எம் நெஞ்சின் நீங்காத பதிவு களாய் உள்ளது.

விடுதலைப் புலிகள் கரந்துறைப் போர் முறையினைக் கைக்கொண்ட வேளையில் அவர் இயக்கத்தில் இணைகின்றார். இயக்க மரபிற் கேற்ப தனியாகவும் , குழுவாகவும் வீர உணர்வுள்ள போராட்டச் செயற்பாடு களில் அவர் ஈடுபட்ட காலமது. அவரது சிறப்பு இயல்புகள் தேசியத் தலைவரை ஈர்த்தமையும், அதன் விளைவாகத் தேசியத் தலைவர் பிற்காலத்தில் தான் சந்திக்கப்போகும் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கத்தக்கதொரு நம்பகமான துணைவனைப் பெற்றதும் ...க்கது. 1987 - 1990 வரை இந்தியப்படை களுக்கு ...ரான, இடைவிடாத தாக்குதலை நடத்திய உணர்ச்சி கரமான போராளியாக அவர் அறியப்படுகின்றார். கரந்துறைப் போர் முறைக் காலகட்டத்திலே போராளிகளின் ...

மக்களின் கைகளிலேயே இருக்கும். 'சே' முன்பொருக்கால் எழுதி னார் . 'ஒரு புரட்சிக்காரனுக்குத் தேவையானவை எவை? வலிய கால் கள், பிச்சைக்காரன் வயிறு, எளிய சுமை'. தமிழ்ச்செல்வன் வெறும் கால்களுடன் தென்மராட்சி மண்ணிலே இந்தியப் படையோடு மோதிய காலத்தில் அலைந்துதிரிந்தார். தென்மராட்சி மக்களின் அபிமானம் பெற்ற 'செல்லப்பிள்ளையாக', 'எங்க வீட்டுப்பிள்ளையாக' அவர் ஆகிவிடுகின்றார். எத்தனை அன்னையர் அவருக்கு உண வூட்டியும், கண்போலக் காத்தும் நின்றனர். பிற்காலத்தில் எத்தனை உயர்நிலைக்குச் சென்றாலும் தனக்குதவிய மக்கள் நெருக்கடி களுக்கு உட்பட்டபொழுது முடிந்தளவு உதவிகளைச் செய்ய அவர் தயங்கவில்லை. அவரது நன்றி மறவா இப்பண்பு உயரியது. அவ்விளவயதில் கடடமற்ற மனதோடு தன்னோடொத்த தோழரோடு போராடிய காலம் அவர் வாழ்வின் பொற் காலமாக அவர் மனதில் பதிந்திருந்தது. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராக அவர் பதவியேற்ற பின் அடிக்கடி அவர் அசைபோடும் மலரும் நினைவு களாகவும் , மக்கள் உறவில் கவனமின்றி செயற்படும் போராளி களுக்கு அறிவுரையாகவும் இந்நினைவுகளை மீட்டுக் கொள்வார். அப்போது அவர் மலர்ந்த முகம் மேலும் மலரும்.

இப்போது இரண்டாம் காலகட்டம். இந் தியப்படை வெளியேற்றத்தின் பின் னான கட்டம். விடுதலைப்புலிகள் நகர் வுப் படையணியாகி மரபுவழிப் படைய ணியாகப்படி வளர்ச்சி கண்ட காலம். ஒருபுறம் பாரிய படைநடவடிக்கைகள் மறுபுறம் அரசியல் நிர்வாக அலகுகள் கட்டமைப்பு என இருவேறுபட்ட பணி களோடு மருத்துவத்துறையில் மறை வான ஆனால் நிறைவான வளர்ச்சிக் கான ஏற்பாடுகளை அவர் பணியாற் றினார். 1995இல் சந்திரிக்கா அரசோ டான பேச்சுக்களிலும் தலைமை தாங் கித் தனக்கான பட்டநிலையும் பெற்றுக் கொள்கின்றார். 1995 ஏப்பிரலின் பின் மீண்டும் போர் வெடித்தமை, இடப் பெயர்வு, வன்னிவாழ்வு, முல்லைச் சமர், ஜெயசிக்குறு, ஓயாத அலைகள் என வரலாற்று நிகழ்வுகளால் எம்வரலாறு நிரம்பிவழியும் போதெல்லாம் தமிழ்ச்செல்வன் தலைவர் அருகில் சிறப்புடனும் , சிரிப்புடனும் நின்றார். ஒரு மனிதனால் இத்தனை பணிகளையும் சுமந்திட முடியுமா என மற்றவர் ஏங்கிடு மளவு பளுச்சுமந்தார். தலைவன் முகமறிந்து - மனமறிந்து - விருப்பு வெறுப்பறிந்து - ஓயாத சிந்தனையின் பொழுது தலைவரிடமிருந்து வெளிப்படும் அறிவுறுத்தலறிந்து அவற்றினை நடை முறைச் செயற் பாடாகமாற்ற அவர்பட்டபாடு, தலைவரின் சுருக்கமான ஆனால் மிக அடர்த்தியான கூற்றுக்களை விரிவான பேச்சுகளாக மொழிபெயர்த்து அவர் பாரதி பாடிய கண்ணனின் (கண்ணன் என் தோழன் - என் சேவகன் , என் சீடன்) பல்வேறு அவதாரம் எடுத்தார். இக் கட்டத்திலே

எங்கிருந்தோ வந்தான்
இடைச்சாதி நானென்றான்
இங்கிவனையான் பெறவே என்னதவம்
செய்துவிட்டேன்
கண்ணன் என்னகத் தேகால் வைத்த
நாள் முதலாய்
எண்ணம் விசாரம் , எதுமவன் பொறுப்பாய் ,
என பாரதி பாடியபாடல் நினைவிற்கு வருகின்றது.

இப்போது மூன்றாம் கட்டம். புலிகளின் சருவதேச வருகை நிகழ்ந்த காலம். சருவதேச தொடர்பு பெருகிய காலம். நிலைமை ...



வைத்த நேரம். இங்கும் தமிழ்ச்செல்வன் பங்கேற்பு நிகழ்கின்றது. பாலா அண்ணையின் துணையுடன் இவ் வளவு சடுதியான மாற்றங் களுக்கெல்லாம் அவர் தன்னை உட்படுத்தினார். தன் முத்திரை பதித்து உலகத்தாரிடம் மிகப் பிரபலம் பெற்றார் . புலிகள் என்றால் அது தமிழ்ச் செல்வனின் பூ மலர்ந்த முகமே என சருவதேசமே உண ரும் பிம்பம் அவருடையதாகியது. இக்கட்டத்திலேயே ஒரு சிறப்பை இங்கே நாம் பதிவு செய்யவேண்டும் . சருவதேச உறவுகள் , சருவ தேச கற்கைநெறிகள் என பெருமெடுப்பில் இராசதந்திர உலகம் கட்டியெழுப்பப் பட்டுள்ள நிலையிலேயே கற்றுக்குட்டியாக தமிழ்ச் செல்வன் களமிறங்கினார் . அதற்கு முகம் கொடுக்கும் ஆற்றலையும் அவர் தன்னுள் வைத்திருந்தார். விடுதலைப் போராட்டத்தில் முழு மையான ஈடுபாட்டுடன் ஈடுபடும் போராளிகளுக்குள் ளே அளவற்ற ஆற்றல் வலிமை பெருகும் என்பது வரலாற்று விதி. எத்தகைய சிக்கல் களைக் கொண்டதாக இராசதந்திர உலகம் அமைந்தாலும் அங்கும் அடிப்படை மனித உறவுகளைச் சீராகப் பேணல் என்பதே. பாலா அண்ணையின் வழிகாட்டலோடு இதிலும் தமிழ்ச்செல்வன் தகுதி நிலை பெற்றார் என்பதற்கு போவர் அவர்களின் இரங்கலுரையே சான்று 'அவருக்கூடாகவே புலிகள் அமைப்பு தொடர்பான பிம்பம் சருவதேசத்தில் கட்டியெழுப்பப்பட் டது. அவரின் வழியே புலிகள் சரு வதேசத்தில் அறியப்பட்டார்கள்' என் கின்ற கருத்துப்பட போவர் பேசி னார்.

இப்பொழுது தன் கடன் முடித்து அவர் நிறை வெய்திவிட்டார். ஆனா ல் எம்பணி நிறைவெய்தவில்லை. அவரிடமிருந்து நாம் பெற்றதென் ன? கற்றதென்ன? வரலாறு எழுப்பும் வினாவிது. தன் ஒவ்வொரு வருகை யின் பொழுதும் மகிழ்வையும், கல கலப்பையும், பரபரப்பையும் கூடவே கொண்டு வரும் - பிறர் எவராயினும் எழுந்து நின்று மதிப்பளித்து நலம் விசாரிக்கும் போது குளிரவைக்கும் - அவரவர் மன அலைவரிசையில் அவரவர் குறைநிறைகளோடு ஏற்றுக்கொள்ளும் தன்மையை எம்மால் முற்றாகப் புரியமுடிந்ததா? நம்பமுடியாத பொறுமையுடனும் எவ ருக்கும் கிட்டாத இனிமையுடனும் ஆதிக்கம் காட்டாத - கோபிக் காமல் பாதிப்பேற்படுத்தும் நிருவாகம் அவரது நவீன முகாமையியல் கூறும் தலைவனாக்கிவிடு. ஆனால் அதிகாரியாகவிராதே - நல்லெண் ணத்தை நம்பு - அதிகாரத்தை நம்பாதே - நான் என்று சொல்லாதே நாம் என்று சொல் - மதிப்பை வேண்டிப்பெறாதே உன் தகுதியால் பெறு என்று நீளும் கூற்றுக்களோடு பிறரை உற்சாகப்படுத்தி, தூண்டி வேலைவாங்கும் தன்மையை அவர் கைக் கொண்டார். 'மதி உணர்ச்சி யோடு மன உணர்ச்சியையும் கொண்டிருந்தார்'.

அவரது மன ஆழத்தில் மக்களுறவே ஆழப்பதிந்திருந்தது. 'எம் மக் கள் எம் மக்கள் என்றும் மக்களிடம் போங்கோ மக்களிடம் போங்கோ' என்றும் எப்போதும் போராளிகளிடம் கூறிக்கொண்டிருப்பார். மக்களைப் பற்றிக் கதைப்பதோடு நில்லாமல் மக்களோடும் கதையுங்கள் என்றார். அவரது இலக்கினை நிறை வேற்றுவதே அதற்குரியவராக எம்மை உருவாக்கிக் கொள்வதே எமது பணி. அதுவே அவருக்கு நாம் செய்யும் உச்சமதிப்பு ஏனெனில் இறுதிக் காலத்தில் அவரது உள் மனதில் பெரும் கவலையாக இருந்தது மக்கள்படும் துயரே. அதை நாம் நீக்கமுற்படும் பொழுது பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் மீண்டும் எம்மிடம் தோன்றுவார். 'சே எந்த இடத் திற்கு உரியவரோ அந்த இடத்தில் அவரைக் காணமுடியும்' என்கின்ற ...க்குரியதாக்கி எமது ஆழ்ந்த அன்பையும் நன்றியையும் ...

"

# எந்தப் பலம் எப்போது பாவிக்கப்படவேண்டுமோ அப்போது பாவிக்கப்பட வேண்டும்

"

## கடற்புலிகளின் தளபதி சூசை

அவர்கள் எரிமலைக்கு வழங்கிய செவ்வி



தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு மிகப்பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தி வருவதாக சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து பெருமெடுப்பிலான பிரச்சாரங்களைச் செய்துவருகிறது. கடலிலே கடற்புலிகளது செயல்வலுவைத் தமது கடற்படை முடக்கியிருப்பதாகவும் கொழும்பு முழங்கி வருகிறது. இவ்வாறான தீவிர, தொடர்பரப்புரைகள் தமிழ்மக்கள் மத்தியில் சில குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. எனவே உண்மையான களநிலவரத்தை, மக்களுக்குத் தெளிவுபடுத்துமுகமாக விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களை அவரது அலுவலகத்திற் சந்தித்தோம். நாங்கள் அவரைச் சந்திக்கச் சென்றபோது அநுராதபுரம் விமானப் படைத்தளத்தைக் கரும்புலிகள் தாக்கியழித்தமை தொடர்பான செய்திகள் வந்துகொண்டிருந்தன. முகமலர வரவேற்று கேள்விகளை [illegible]ழுமாக உள்வாங்கி வெகு இயல்பாக அவருக்கேயுரிய அழுத்தமான பாணியில் பதிலளித்தார்.

"

**சிறிலங்காக் கடற்படையைப் பொறுத்தவரை நாலாங்கட்ட யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாங்கள் அவர்களைத் தாக்குவதற்குப் போகின்றபோது, அவர்கள் தூரத்தூர விலகிக்கொண்டே போகின்றார்கள்.**

"

**சிறிலங்காக் கடற்படையின் போரிடும் ஆற்றல் இப்போது எவ்வாறிருக்கிறது.**

சிறிலங்காக் கடற்படையைப் பொறுத்தவரை நாலாங்கட்ட யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாங்கள் அவர்களைத் தாக்குவதற்குப் போகின்றபோது, அவர்கள் தூரத்தூர விலகிக்கொண்டே போகின்றார்கள். கடந்த சில தாக்குதல்களை உன்னிப்பாக அவதானித்தபோது - அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலிருந்து போராளிகளை அழைத்துவரும் நடவடிக்கையின்போது, கடற்படையின் பலம் 15 டோறாக்களாக இருக்கும்போது எந்த விதமான வலிந்ததாக்குதலையும் தொடுக்காமல், டோறாக்களின் எண்ணிக்கையை 20ற்கு மேற்பட்டதாக அதிகரித்ததற்குப் பிற்பாடுதான் எமது விநியோக அணியை - அதாவது ஆளணியை ஏற்றிவரும் படகுத்தொகுதி மீது தாக்குதலைத் தொடுத்தார்கள். நாங்கள் திருப்பித்தாக்குவம். இது நீடித்த ஒரு சண்டையாக இருக்கும். இது விநியோக நடவடிக்கையின்போது ஏற்பட்ட சண்டை. வலிந்ததாக்குதலை நாங்கள் தொடுக்கும்போது - இப்போது இரண்டு, மூன்று தினங்களுக்கு முதல் நடந்தது - நாங்கள் தாக்கவென்று போகும்போது அவர்கள் தூரவிலகிக் கொண்டு போகிறார்கள். டோறாக்களை காங்கேசன் துறையிலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் முல்லைத்தீவு நோக்கி எடுத்து, மூன்று முனைகளால் வழிமறித்துத்தாக்கினார்கள். உடனடியாக சிறிலங்காக் கடற்படை சண்டையில் ஈடுபடமுடியாமல் தமது பலத்தை 20 டோறாவுக்கு மேலாக அதிகரித்த பிறகுதான் சண்டையில் ஈடுபடுகின்றனர். அதிலும் குறிப்பாக எந்தவொரு டோறாவையும் இழக்கக்கூடாதென்பதில் கூடுதலான கவனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். கரையோரங்களில் 10 -12 கிலோமீற்றர் தொலைவில் ரோந்தில் வருவார்கள். நாங்கள் ஒரு நான்கு ஐந்து படகுகளோடு இறங்கினால் உடனே மேலே 15,16 கிலோமீற்றர் என்று உயர்ந்துகொண்டே போவினம். (தூரத்துக்குப் போவார்கள்) இந்த நேரத்தில் இரண்டு பக்கமிருந்தும் டோறாக்களை அழைத்துத் தமது பலத்தை அதிகரித்துவிட்டுத்தான் எங்களோடு சண்டைக்கு இறங்குவார்கள். இதுதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது.



**அண்மை நாட்களாக வன்னியின் கிழக்கு கடற்கரைக் கிராமங்களை நோக்கி சிறிலங்கா கடற்படையினருடைய பீரங்கிப் படகுகள் அடுத்தடுத்து தாக்குதலை நடத்திவருகின்றன. சிலவேளைகளில் கரைக்கு மிக அண்மையாக 300மீற்றர் தூரத்திற்குக் கூட அவை வருகின்றன. இதனுடைய நோக்கம் என்னவாக இருக்கும்?**

300 மீற்றர் தூரத்துக்குள் வந்து தாக்குதல் நடத்தவில்லை. சிலவேளைகளில் 3 கிலோமீற்றர் தூரத்தில் வந்து தாக்குகிறார்கள் அதுவும் தொடர்ச்சியாக அப்படி நின்று தாக்குதல் நடத்துவதில்லை. நாங்கள் அவற்றை நோக்கி கடலிலே இறங்கினால் போறா மேலே போய்விடும். நாங்கள் எங்கள் படகுகளை கடலிலே நிறுத்தி வைப்பதில்லை. தேவைக்கேற்றமாதிரி இறக்கி ஏற்றி பாவிப்போம். எங்களுடைய படகுகள் கடலிலே இல்லையென்பதை அவதானித்த பின் ஒரு 5 கிலோமீற்றர் தூரத்துக்கு கரையை நோக்கிலிருந்து றொக்கற்றுக்களை வீசுவார்கள். றொக்கற்கள்தான் இவ்வாறு வீசப்படுகின்றன. 100, 106 மி.மீற்றர் றொக்கற்றுக்கள் போறாவில் பொருத்தப்பட்டுள்ளன. அவை கரைகள் மீது விழுகின்றன. இந்த றொக்கற் இப்போது புதிதாகப் பூட்டப்பட்டுள்ளது.

**கடற்புலிகளின் பலத்தை ஏறக்குறைய முடக்கிவிட்டதாக சிறிலங்கா கடற்படைத்தளபதி கொழும்பு ஊடகங்களிற்கு தொடர்ந்து பேட்டியளித்து வருகிறார். நிலைமையைத் தெளிவுபடுத்துவீர்களா?**

சிறிலங்கா கடற்படைத்தளபதி இவ்வாறு கூறியிருக்கிறார் என்பதோடு ஊடகங்களும் இதற்கு முன்னுரிமை கொடுக்கின்றன. திருமலை - மட்டக்களப்பிலிருந்து நாங்கள் எங்கள் அணிகளைப் பின்னகர்த்தினோம். இவ்வாறு 1000ற்கும் மேற்பட்ட போராளிகளைப் பின்னகர்த்தியிருப்போம். இது சிறிலங்கா கடற்படைக்குத் தெளிவாகத் தெரியும். கடற்புலிகளின் பலம் முடக்கப்பட்டுவிட்டதாக இருந்தால் இந்த கடல்வழிப் பயணத்தின்போது எம்மைத் தாக்கி அழித்திருக்கவேண்டும். நீங்கள் ஒன்றைக் கவனிக்கவேண்டும். 1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் எங்களால் தாக்கப்பட்டபோது ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது முல்லைத்தீவைப் பாதுகாக்கும் நோக்கோடு சிலாவத்தைப் பகுதியில் இறங்கினார்கள். அவர்கள் முன்னேற முடியாதவாறு தடுத்து நிறுத்தினோம். இறங்கிய துருப்புகளை விட்டுவிட்டு ஓடவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் வான்படைப்பலம், ஆட்டிலறிகள், மல்ரிபரல்கள் என்று எதிரி கொண்டிருக்கும் பெரும் ஆயுதபலத்துக்குள்தான் நாங்கள் எங்கள் போராளிகளை ஏற்றிவருகிறோம். அதைத்தடுக்க அவர்களால் முடியவில்லை என்பது கவனிக்கவேண்டியது. அண்மைக்காலத்தில் எங்களது சண்டைப்படகு ஒன்றை நாங்கள் இழந்தது உண்மைதான் (2007 மே 19ம் திகதி மாமுனைக் கடற்பரப்பில் 'இந்துமதி' என்ற படகு) இதைவிட எமது வேறு படகுகள் எவையும் சிறிலங்காப் படைகளால் அழிக்கப்படவுமில்லை, எங்களை அவர்கள் வெற்றிகொள்ளவுமில்லை.

**ஆனால் கடந்த 2வருடங்களில் உங்களின் 500படகுகளை அழித்துள்ளதாக சிறிலங்கா அரசு உத்தியோக பூர்வமாக வெளியிட்ட தகவல்களின்படி தெரிவித்துள்ளதே?**

எங்களிடம் 500 படகுகள் இல்லை. எங்களிடம் எத்தனை படகுகள் உள்ளன என்று, என்னென்ன பேரில் எத்தனை சண்டைப் படகுகள் வைத்திருக்கிறோம் என்று எங்களுடைய மக்கள் அறிவார்கள். நாங்கள் 'ஒளிச்சு மறைச்சுக் கொண்டுபோய்'

அவை மிகவும் வளம்பொருந்திய படகுகளாகவும் இல்லை. தலைவர் ஊட்டிய ஓர்மத்துக்குள்ளாக வளர்க்கப்பட்டதே எங்களின் பலம். இப்படியான பிரச்சாரத்தை சிறிலங்கா அரசு இன்று நேற்றல்ல காலங்காலமாகவே செய்துவருகின்றது. சிங்கள மக்களையும், ஊடகங்களையும் வெளிநாடுகளையும் திருப்திப்படுத்தவும்? இராணுவரீதியாக நாங்கள் மேலாண்மை செலுத்துவதான தோற்றத்தை ஏற்படுத்தவும் இப்படியான ஊடகப்போரை இந்த அரசாங்கம் மட்டுமல்ல கடந்துபோன அரசாங்கங்களும் தொடர்ச்சியாகச் செய்துவந்தன. வருகின்றன.

**கிழக்கில் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து விட்டதாக சிறிலங்கா அரசு கூறுகின்றமை குறித்து?**

பிரதேசங்கள் கைமாறுவது வழமை. மட்டக்களப்பு, திருமலையில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் வரையறுக்கப்பட்டு எமது நிர்வாகப் பிரதேசங்களாக இருந்தன. அந்த நிர்வாகப் பிரதேசங்கள் கைமாறியிருக்கிறதேயொழிய எங்களது இராணுவ மேலாண்மையை நாங்கள் கைவிடவில்லை. சென்றவாரம் அம்பாறை மாவட்டப் போராளிகள் மகிந்தராஜபக்சவின் தொகுதிக்கேபோய் ஒரு இராணுவ முகாமை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றியிருந்தனர். யால வனவிலங்குச் சரணாலயம் இவ்வாரம் திறக்கப்படுவதாக இருந்தது. அதன்மூலம் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து பெரும் வருமானத்தை ஈட்ட அரசு முயற்சித்துக் கொண்டிருந்தது. இந்தநிலையில் நடந்த யால தாக்குதலே காட்டியிருக்கும் கிழக்கின் இராணுவ நிலவரம் எப்படியிருக்கிறது என்பதை. நாங்கள் மட்டக்களப்பு, திருமலையில் நிர்வாகரீதியான ஆளுகையை இழந்திருக்கிறோமென்பது உண்மை. அதில் எந்தமாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறையிலிருந்து விடுதலைப்புலிகளை முழுமையாக அழித்ததாகவோ துரத்தியடித்ததாகவோ என்றைக்கும் இல்லை.

**சிறிலங்கா வான்படை வன்னிமீதான தனது குண்டுவீச்சுக்களை அதிகரித்துள்ளது. விடுதலைப்புலிகளின் களஞ்சியங்களையும் முக்கியமுகாம்களையும் தாக்கியழிப்பதன்மூலம் வன்னிமீதான தமது நடவடிக்கைக்கு முன்பாக புலிகளைப் பலவீனப்படுத்துவதே நோக்கமென சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. இது குறித்து உங்களுடைய கருத்து என்ன?**

வன்னிமீது சிறிலங்கா விமானப்படை தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திக் கொண்டுதான் இருக்கிறது. நடத்தப்படும் தாக்குதல்கள் எல்லாம் எங்களுடைய களஞ்சியங்களையும் முகாம்களையும் அழித்ததாகத்தான் கொழும்பு ஊடகங்கள் சொல்லிக்கொண்டே இருக்கும். இங்கே அடித்துவிட்டு உடனே போய்ச் சொல்லுவார்கள், இந்தப் படையணி முகாம் அழிக்கப்பட்டிருக்கிறது - இம்ரான் பாண்டியன் படையணியின் தலைமைச் செயலகம் அழிக்கப்பட்டிருக்கிறது, விடுதலைப்புலிகளின் வெடிபொருட் களஞ்சியம் அழிக்கப்பட்டிருக்கிறது - என. இந்தப் பிரச்சாரங்களையும் இங்கே போடப்படும் குண்டுகள் எல்லாம் அப்பாவி மக்களையே சென்று தாக்குகின்றன. இவற்றில் - வான்தாக்குதல்களில் - கொல்லப்பட்டவர்களின் பட்டியலை எடுத்துப்பார்த்தால் பெண்கள், பாடசாலை மாணவர்கள், பிள்ளைகள், குடிமக்கள், குடிமனைகள் பாதிக்கப்பட்டதுதான் அதிகம், ஏராளம். அண்மையில் விசுவமடுவில் இருந்த எங்களது முகாம் ஒன்றுக்கு குண்டுவீசியபோது மக்களது குடியிருப்புக்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இப்படித் தொடராக விமானத்தாக்குதல் நடத்தப்படுவதன் நோக்கம் மக்களைக் கிலிகொள்ள



> **"** தலைவரது பாணியென்னவென்றால், கதைப்பதல்ல - அதற்குச் செயல்வடிவம் கொடுப்பது. **"**

எங்களுக்கு எதிராகப் படையெடுத்தபோது மணலாற்றுக் காட்டுக்குள் தலைவரோடு இருந்தபோராளிகள் மீது, படையணிகள் மீது தொடராக ஆட்டிலறித் தாக்குதல்களையும் தொடராக விமானக்குண்டுத்தாக்குதல்களையும் நடத்திக்கொண்டுதான் இருந்தது. 500கிலோ நிறையுடைய குண்டுகளெல்லாம் போடப்பட்டதுதான். அது ஒரு சிறியபிரதேசம். அதற்குள்ளே கூட இந்தியப்படைகளால் எங்களை அடிபணியவைக்க முடியவில்லை. மாறாக அவர்கள்தான் இங்கிருந்துவிலகிச் செல்லுமளவுக்கு நாங்கள் எங்கள் பலத்தைப் பிரயோகித்திருந்தோம். அப்போது இல்லாத பலத்தை இப்போது நாங்கள் கொண்டிருக்கிறோம் தலைவரது பாணியென்னவென்றால், கதைப்பதல்ல - அதற்குச்செயல்வடிவம் கொடுப்பது.


**சிறிலங்காப் படைகள் புலிகளை ஒரு சிறியபகுதிக்குள் முடக்கி அவர்களது கடல்வழி விநியோகங்களைத் தடுத்து அவர்களின் போரிடும் வலுவை அழித்துவருவதாக கொழும்பு கூறிவருகிறது. இதற்கெதிரான புலிகளது பிரதிபலிப்பு என்ன?**

சரி. அவர்கள் கூறுவதுபோலவே வைத்துக்கொள்ளுவோம். கிழக்கிலிருந்து புலிகளை விரட்டியாயிற்று. மன்னாருக்கும் மணலாற்றுக்கும் ஓமந்தைக்கும் முகமாலைக்குமிடையேயான நிலப்பரப்புக்குள் புலிகளை ஒடுக்கியாயிற்று. எங்களது பலத்தை அழித்து விநியோகங்களை முடக்கியாயிற்று என்றால் இந்தப் பகுதிமீது படையெடுக்க வேண்டியதுதானே! ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? ஏன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்? நாங்கள் ஏன் அமைதியாக இருக்கிறோமென்றால், எது எது.

போது பிரயோகிக்கப்படும். (இதனை அவர் வெகு அழுத்தத்தோடும் நம்பிக்கையோடும் அவருக்கேயுரிய சிரிப்போடும் குறிப்பிடுகிறார். அந்நேரம் - அநுராதபுரம் விமானப்படைத்தளம் முற்றாக அழிக்கப்பட்ட செய்தி உலகமெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது.)

**நீண்டகாலமாக எமது விடுதலைப்போராட்டத்தில் பங்கெடுப்பவர் நீங்கள். பல்வேறு நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டவர். இன்றைய காலத்தில் போராட்டம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் சவால்களை வெல்ல எவ்வகையான செயற்பாடுகளை முன்னெடுக்கிறீர்கள்?**

அன்றைய காலங்களில் எதிர்கொண்டதைவிட இப்போது எதிர்கொள்வது எங்களுக்கு நெருக்கடியாகத் தெரியவில்லை. 1987ம் ஆண்டு ஒரு நெருக்கடியை நாங்கள் சந்தித்தோம். அப்போது எங்களிடம் ஒருமுழுமையான பலம்பொருந்திய இராணுவக் கட்டமைப்பு இருக்கவில்லை. ஆனால், முப்படைகளும் கூட்டாக வடமராட்சி மீது போர்தொடுத்து வடமராட்சியைக் கைப்பற்றியபோது நாங்கள் ஒரு நாலைந்து நாட்களுக்குப் பிறகு விலகுகிறோம். கிட்டத்தட்ட 800இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் அதே விலகிய நாங்கள் திரும்பவும் நாலைந்து தினங்களுக்குள் அப்பகுதிக்குள் மீளச் சென்று ஒரு கரும்புலித்தாக்குதலையும் நடத்தி வடமராட்சியை ஆட்டங்காணச் செய்தோம். இந்தியத் தலையீடு இல்லாமலிருந்தால் தாக்குதல்கள் மேலும் தொடர்ந்திருக்கும். திரும்பவும் இந்திய இராணுவத்துடனான மோதலின்போது ஒரு நெருக்கடி



"கிழக்கிலிருந்து புலிகளை விரட்டியாயிற்று. மன்னாருக்கும் மணலாற்றுக்கும் ஓமந்தைக்கும் முகமாலைக்குமிடையேயான நிலப் பரப்புக்குள் புலிகளை ஒடுக்கியாயிற்று. எங்களது பலத்தை அழித்து விநியோகங்களை முடக்கியாயிற்று என்றால் இந்தப் பகுதி மீது படையெடுக்க வேண்டியதுதானே! ஏன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்? ஏன் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்? நாங்கள் ஏன் அமைதியாக இருக்கிறோமென்றால், எது எது, எந்தப் பலம் எப்போது பாவிக்கப்படவேண்டுமோ, அது அப்போது பிரயோகிக்கப்படும்."

சிறிலங்காப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள். இரண்டு படைகளும் கூட்டாக நிற்கின்றன. இரண்டும் சேர்ந்து எங்களை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்கின்றன. அப்போது புலிகளின் எண்ணிக்கை 2000ற்கும் குறைவானது. அப்போது இப்படியான இராணுவக் கட்டமைப்புகள் இல்லை. கடற்புலிகள், கிட்டு பீரங்கிப்படையணி, குட்டிசிறி மோட்டார் படையணி, வான் புலிகள், சாள்ஸ்அன்ரனி, இம்ரான் பாண்டியன், ஜெயந்தன், சோதியா, மாலதி, எனப் படைப்பிரிவுகளைக் கொண்டிருக்கவில்லை. இப்படி எதையும் கொண்டிருக்காமலேயே மணலாற்றுக்குள் ஒரு சிறிய பகுதிக்குள் தலைவர் இருக்கிறார் அவரோடு குறிப்பிட்டளவான போராளிகள் இருக்கின்றார்கள். அந்தக்காட்டுக்குள் 500கிலோ நிறையுள்ள குண்டுகள் தொடர்ந்து வீசப்படுகின்றன. ஆட்டிலறிகள் எறிகணைகளை இடைவெளியின்றி வீசுகின்றன. பெருமெண்ணிக்கையிலான இந்தியத் துருப்புக்கள் சூழ்ந்து நிற்கின்றன. நெருக்கடியான நிலை. அந்த நெருக்கடியையே நாங்கள் இராணுவ ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் உடைத்து முன்னேறினோம். அதோடு ஒப்பிடும்போது இது ஒரு சின்னப்பிரச்சினை.

**புலம்பெயர்ந்திருக்கின்ற எங்களுடைய மக்கள் தாயகத்தில் தினமும் தங்களுடைய உறவுகள் சிறிலங்கா அரசின் கட்டமைப்புக்களால் பலியெடுக்கப்படுவது குறித்து மிகுந்த துயரத்தோடும் விசனத்தோடும் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். புலம்பெயர்ந்த எமது சமூகத்தின் இளைய தலைமுறைக்கும் நீங்கள் விடுக்கின்ற செய்தி என்ன?**

புலம்பெயர்ந்திருக்கும் எங்கள் மக்களுக்கு, அதிலும் அங்குள்ள இளையதலைமுறைக்கு கருத்துக்களைச் சொல்லவேண்டிய பாரிய பணி இருக்கிறது. 1987ம் ஆண்டு இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர்தான், முன் பின்னாகத்தான், பெருமளவு இளைஞர் யுவதிகள், பெரியோர்களும் நிறையப் போராளிகளும் வெளிநாடுகளுக்குச் சென்றார்கள். அப்போது விடுதலைப் புலிகளின் பலமென்பது குறைவு. அதனை அரசு தன்னுடைய இராணுவ மேலாண்மைக்கூடாக அழித்திருக்கலாம். அழிக்கப் படுவோமென்று தெரிந்துதான் எங்களுடைய உறவுகள் இங்கிருந்து வெளியேறிச்சென்றார்கள். ஆனால் நாங்கள் அதிலே வெற்றிபெற்று இராணுவ முதுகெலும்பை உடைத்தபோதுதான், இயலாத நிலையில் இந்தியாவிடம் சிறிலங்கா மண்டியிட்டது. அந்நிலையில் ஏற்பட்டதுதான் இந்திய இலங்கை உடன்

எப்படி முறியடித்தோம்? என்பதை புலம்பெயர்ந்திருக்கின்ற எனது வயதையொத்தவர்கள் நன்கு அறிவார்கள். அவர்களுக்கு இவையெல்லாம் தெரியும். இப்போதிருக்கின்ற இளைய தலைமுறைக்குத்தான் இவைதெரியாது. அவர்களுக்குத்தான் இதெல்லாம் எடுத்துச்சொல்லப்படவேண்டும். முன்பு எதிர்கொள்ளப்பட்ட நெருக்கடிகளோடு ஒப்பிடுகையில் இப்போதிருப்பது ஒரு சின்னப்பிரச்சினையென்பது புலம்பெயர்ந்துள்ள பெரியவர்களுக்கு நன்கு தெரியும். புரியும். அதை அவர்கள் தமது அடுத்த தலைமுறைக்குத் தெளிவுபடுத்தவேண்டும். இன்று சிறிலங்காவின் முப்படைகளுக்கும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் போர்த்தளபாடங்களையும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. புலம்பெயர்ந்த மக்கள் நினைக்கிறார்கள், சமாதானகாலத்துக்குள் நாங்கள் பெருமளவு நிதியை அள்ளிக்கொடுத்திருக்கிறோம். அதை வைத்துக் கொண்டு புலிகள் தமது பலத்தைப் பெருக்கி ஒரு பெரிய நிலமீட்பை செய்யவேண்டுமென்று. உண்மையில் ஒன்றை நன்றாக விளங்கவேண்டும். நாங்கள் கட்டுநாயக்காவில் போய்த் தாக்கினால் நாடுகள் போட்டிபோட்டுக்கொண்டு ராடரைக் கொடுக்கின்றன. விமானங்களை வழங்குகிறார்கள். போர் முனைகளிலே நாளாந்தம் எண்ணுக்கணக்கின்றி எறிகணைகள் வீசப்படுகின்றன. இவற்றுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாது சிறிலங்காவின் பொருளாதாரம் கீழ்நோக்கிக்கொண்டிருக்கிறது. எங்களுக்குப் பின்புலமாக இருப்பது எங்கள் உறவுகள். இங்கே தொழில்முயற்சியை மேற்கொள்ளமுடியாதவாறு எதிரியின் தாக்குதல் நடைபெறுகிறது. இத்தனைக்கும் மத்தியில் தாயகத்தில் மக்கள் எமது போரிடும் ஆற்றலுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் விளங்கிக்கொண்டும் புரிந்துகொண்டும் புலம்பெயர்ந்த மக்களும் இளையதலைமுறையும் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்பரீதியாகவும் ஆளணி ரீதியாகவும் தலைவரின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும். 1983ம் ஆண்டு எங்களுடைய தாக்குதல் தளபதி லெப்.சீலன் வீரச்சாவடைந்த போது அதற்கான பதிலடியை ஒரு வாரத்திற்குள் தலைவர் கொடுக்கிறார். இராணுவ சீருடைதரித்து நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் சீலனினுடைய மேற்சட்டையை உள்ளே அணிந்தபடி தலைவர் பங்குகொண்டார். 13இராணுவத்தினர் கொல்லப்பட்டு அந்த உடல்கள் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டபோது பாரிய இனக்கலவரம் வெடித்தது. அந்தக் கலவரத்தை நடத்தியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாதான். அந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், எங்கெல்லாம் தமிழ்பேசுபவர்கள் இருந்தார்களோ அங்கிருந்தெல்லாம் புறப்பட்டுவந்தார்கள். ஆனால் அவ்வளவுபேரையும் உள்வாங்கும் நிலையில் விடுதலைப்புலிகள் இருக்கவில்லை. அப்படியுள்வாங்க ஒரு பிரதேசம், பொருளாதாரம் என்பவை இருக்கவேண்டும் ஆனபடியால் அந்தச் சூழலில் அதைச் செய்யமுடியவில்லை. அதேவேளை வெளிநாடுகளிலிருந்தும் - அப்போது வெளிநாடுகளில் தமிழ் இளைஞர்கள் குறைவு - இளைஞர்கள் வந்தார்கள். குறிப்பாக 78, 80ஆம் ஆண்டு காலங்களில் போராடி, பின்னர் வெளிநாடு சென்ற குமரப்பா கூட 83ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் திரும்பவந்து களம் புகுந்தார். சிறிலங்கா போர்தான் என இறுதிமுடிவு எடுத்து வரிந்துகட்டிக்கொண்டு வரும்போது புலம்பெயர்ந்த எமது இளைஞர்களும் யுவதிகளும் இராணுவரீதியாக தலைவரின் கையைப் பலப்படுத்தவேண்டும்.



"கோத்தபாய ராஜபக்ச சிலமாதங்களுக்கு முன் அநுராதபுரத்தில் வைத்து ஒரு பெரிய பிரசங்கமே செய்தார். போர் என்றால் போர். சமாதானத்துக்கும் போருக்கும் நாங்கள் தயார். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் புலிகளுக்கு அழிவு நிச்சயம் என்று. அநுராதபுரத்துக்குள் இன்று கரும்புலிகள் புகுந்துள்ளார்கள். வான் புலிகள் சென்று குண்டுகளை வீசியுள்ளார்கள்."

**விடுதலைப் புலிகளைப் போர்மூலம் தோற்கடித்துவிடமுடியாது என பயங்கரவாதத்திற்கு எதிரான பன்னாட்டு அமைப்பின் முன்னாள் இயக்குனர் கூறியதை கனிலவரம் தெரியாமல் முன்வைக்கப்பட்ட கூற்று என சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச விமர்சித்திருக்கிறாரே**

கோத்தபாய ராஜபக்ச சிலமாதங்களுக்கு முன் அநுராதபுரத்தில் வைத்து ஒரு பெரிய பிரசங்கமே செய்தார். போர் என்றால் போர். சமாதானத்துக்கும் போருக்கும் நாங்கள் தயார். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் புலிகளுக்கு அழிவு நிச்சயம் என்று. அநுராதபுரத்துக்குள் இன்று கரும்புலிகள் புகுந்துள்ளார்கள். வான் புலிகள் சென்று குண்டுகளை வீசியுள்ளார்கள். அந்தச் செய்தி இன்று சர்வதேசத்துக்கும் போய்க்கொண்டிருக்கிறது. இப்படியான கூற்றுக்கள் புதிதல்ல. 1977ல் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் இவ்வாறு பேசினார். அப்படி அவர் பேசியபோது புலிகள் இயக்கத்தில் இருந்தது 30பேருக்கும் குறைவு. அதுக்குப் பிறகு ஆட்சியாளர்கள் மாறியிருக்கிறார்கள். அவர்கள் கதிரையிலே வந்து அமர்கின்றபோது இவ்வாறுதான் பேசுவார்கள். அதை சர்வதேச சமூகமும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அவற்றுக்கெல்லாம் நாங்கள் பதிலளித்துக் கொண்டிருக்கமுடியாது. புலிகள் இதற்கெல்லாம் எப்படிப் பதிலளித்திருக்கிறார்களென்றால் செயல் மூலம். புலிகள் பலவீனப்பட்டோ, பிரதேசங்களை இழந்த நிலையிலோ, எந்தவொரு காலத்திலும் பேசப்போவதில்லை. பேசப் போனதாக வரலாறும் இல்லை.



# எல்லாளன் நடவடிக்கை



# ஒரு வரலாற்று அதிர்ச்சி





வான்தளத்தில் அழிக்கப்பட்ட வான்கலங்கள்



சிறிலங்கா அரசு தொடர்ச்சியாகப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக வலிந்த தாக்குதல்களை மேற்கொண்ட போதிலும் அதற்கெதிரான தற்காப்புச் சமர்களில் மட்டுமே படையணிகளை ஈடுபடுத்தி வந்த புலிகளின் மௌனமும், பதுங்கலும் ஏன் என்ற கேள்வி அநுராதபுரம் வான்படைத்தள தாக்குதலுக்கு முன்வரை சர்வதேச அளவில் வியாபித்து நின்றது. புலிப்படையின் இத்தகைய போக்கிற்கு பல்வேறு காரணங்களும், வியாக்கியானங்களும் சிறிலங்கா அரசினாலும் விமர்சகர்களினாலும் முன்வைக்கப்பட்டன. பொதுவாக முன் வைக்கப்பட்ட அனுமானங்களில் அதிகமானவை புலிப்படை மிகவும் பலவீனப்பட்டு விட்டது எனவும் புலிப்படையால் பெரும் நடவடிக்கையில் ஈடுபடமுடியாது எனவும் கூறின. இதனை நிறுவுவதற்கே பல்வேறு எடுகோள்களை பல விமர்சகர்கள் முன்வைக்க முயன்றனர்.


"

எல்லாளன் நடவடிக்கை
மூலமாக தமிழர் தம்
வரலாற்றை மீளநிறுவ
முனைகிறார்கள் என்ற
செய்தி இனிச்
சிங்களதேசத்தை நிம்மதியாக
உறங்க விடாது. மழைகால
அதிர்ச்சி மட்டுமல்லாது
வரலாற்று அதிர்ச்சியாகவும்
அமைந்துவிட்ட அநுராதபுரம்
வான்படைத்
தளம் மீதான கரும்புலிகளின்
இத்தாக்குதல்
சிங்களதேசத்தின் தோல்வி
முகத்தையே
வெளிப்படுத்துகிறது.

"

கிழக்கை இழந்ததன் மூலம் புலிப்படை தனது பலத்தின் பெரும் பகுதியை இழந்துவிட்டது. சர்வதேச ரீதியாகப் புலிப்படைக்கு எதிராக எடுக்கப்படும் நிலைப்பாடுகள் புலிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கி வருகின்றது. சிறிலங்கா அரசு தனது முப்படைகளை முழுஅளவில் பலம் பொருந்திய சக்தியாக மாற்றியுள்ளமையால் புலிகள் அதனை எதிர்கொள்ளத் திணறுகின்றனர் போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. சிறிலங்கா அரசு அமைதிவழி நிகழ்ச்சி நிரலை நிராகரித்து முழு அளவில் போர் வரைபொன்றை தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக முதன்மைப்படுத்தி வரும் நிலையில் சிறிலங்கா அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு எதிராக எத்தகைய எதிர்விளைவுகளைப் புலிகள் காட்டப்போகிறார்கள் என்ற கேள்வி எழுப்பப்பட்டு வந்தது. இந்தவகையில் சிறிலங்காவிலும் சர்வதேசத்திலும் புலிகள் இயக்கம் மிகவும் பலவீனப்பட்ட நிலையிலுள்ளது என்ற என்ற சக்தி மிக்கப் பரப்புரை சிறிலங்கா அரசால் வலிமையாக மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் எல்லா வியாக்கியானங்களுக்கும் அனுமானங்களுக்கும் எதிர்படும் மழைகாலத்தில் புலிகள் விடை பகர முயல்வார்கள் என்ற சமாதானமும் கூறப்பட்டே வந்தது. காரணம் இக்காலப்பகுதி சிறிலங்கா படைகளுக்கு எதிராகப் புலிகள் பெரும் வலிந்த தாக்குதலைத் தொடுப்பதற்கு ஏதுவான ஒரு காலப்பகுதி எனக் கூறப்பட்டது. அடுத்து இக்காலப்பகுதியில் சிறப்புக்குரிய மாவீரர் நாள் நெருங்கி வருகின்ற நிலையில் எதிர்பார்ப்பு மிக்க மாவீரர்நாள் உரைக்கு முன்பாக புலிகள் ஒரு பெரும் தாக்குதலில் ஈடுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.





ஆக சிறிலங்கா அரசிற்கு எதிராக மழைகால அதிர்ச்சியொன்றைப் புலிகள் எப்படியும் நிகழ்த்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு சிறிலங்கா அரசிற்கும் இராணுவ ஆய்வாளர் களுக்கும் இருக்கவே செய்தது.

* * * * *

உள்ளது. இந்த நிலையில் எல்லாளன் நடவடிக்கை மூலமாக தமிழர் தம் வரலாற்றை மீளநிறுவ முனைகிறார்கள் என்ற செய்தி இனிச் சிங்களதேசத்தை நிம்மதியாக உறங்க விடாது. மழைகால அதிர்ச்சி மட்டுமல்லாது வரலாற்று அதிர்ச்சியாகவும் அமைந்து விட்ட அநுராதபுரம் வான்படைத்தளம் மீதான கரும்புலிகளின் இத்தாக்குதல் சிங்களதேசத்தின் தோல்வி முகத்தையே வெளிப் படுத்துகிறது.

* * * * *



தேசியத்தலைவருடன் சிறப்புக்கரும்புலிகள்

## எல்லாளன் நடவடிக்கை ஒரு வரலாற்று அதிர்ச்சி

மழைகால அதிர்ச்சி எந்தவேளையிலும் நிகழலாம் எனக் குழம்பிக் கிடந்த சிங்கள தேசத்துக்கு வெறுமனே ஒரு அதிர்ச் சியை மட்டும் கொடுத்துவிடாது கூடவே ஒரு வரலாற்று அதிர்ச்சி யையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் அநுராதபுரம் படைத்தளம் மீது தாக்குதலைத் தொடுத்த புலிப்படை சிங்களமக்களால் புனிதநகரம் என்றும், பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்கத்தளம் என்று கூறப்படும் பெருமைபூத்த அநுராதபுரத்தில் அமைந்துள்ள சிறிலங்கா வான்படைத்தளம் புலிகளின் பாய்ச்சலுக்கு இலக்காகி யுள்ளது. இந்தப்பாய்ச்சல் சிங்களபடைக் கட்டுமானத்தின் ஒரு பகுதியான அதன் வான்படைத்தளம் மீது நடத்தப்பட்ட ஒரு தாக்குதலாகவோ அல்லது வடபகுதி நோக்கி முடுக்கிவிடப் பட்டிருக்கும் சிறிலங்கா படைகளின் முக்கியதளம் மீது நடத்தப் பட்ட ஒரு தாக்குதலாகவோ மட்டும் மட்டுப்படுத்திப் பார்க்க முடியாதளவிற்கு இத்தாக்குதலின் பரிமாணம் விரிந்து செல் கின்றது. காரணம் தாக்குதல் நடத்தப்பட்ட விதம், அதனால் ஏற் பட்ட இழப்பின் பொருளாதாரப் பெறுமதி என்பவற்றோடு அந்தத் தாக்குதலுக்கு புலிகள் சூட்டிய பெயர் சிங்கள தேசத்திற்கு ஒரு வரலாற்றுப் பயத்தை ஏற்படுத்த வல்லதாக இருக்கிறது. பறக்கும் சிங்கங்களை வேட்டையாடும் இந்த நடவடிக்கைக்கு 'எல்லாளன் நடவடிக்கை' எனப் புலிகள் பெயர் சூட்டியிருப்பதானது சிங்கள தேசத்தின் வரலாற்று வஞ்சனைகளை மீளவும் அவர்களுக்கு நினைவூட்டுவதாகவும் அதனை எண்ணி அவர்கள் அஞ்சவேண்டி யதாகவும் உள்ளது. துட்டகைமுனுவால் வீழ்த்தப்பட்ட எல்லா ளன்கள் மீண்டும் பிரபாவால் உயிர்ப்பிக்கப்[illegible] பது அவர்களிடையே பெரும் மனக்கிலேசத்[illegible]த்துவதாக



தேசியத்தலைவருடன் தாக்குதலில் பங்கேற்ற வான்புலிகள்



தேசியத்தலைவருடன் தாக்குதலில் பங்கேற்ற வான்புலிகள்

## தொடரும் புலிகளின் சிறப்பு நடவடிக்கைகள்

அநுராதபுரம் விமானப்படைத்தளம் மீதான 'எல்லாளன் நடவடிக்கை' யை ஒரு சிறப்புப்படை நடவடிக்கையாகவே புலிகள் நடத்தியிருக்கின்றனர். இத்தாக்குதலுக்காக ஒழுங்கமைப்பு - பயிற்சி - நகர்வு என்பவை சிறப்புமிக்கவையாக இருப்பதுடன் இந்தத் தாக்குதலுக்கு சிறப்புக் கரும்புலிகள் அணியைப் புலிகள் ஈடுபடுத்தியதோடு வான்புலிகளை இணைத்துத் தாக்குதல் நடத்தியமையானது ஈழப்போர் வரலாற்றில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்துள்ளது. இத்தாக்குதலானது நான்காம்கட்ட ஈழப் போரில் புலிப்படை கரும்புலிகளைக் கொண்டு நிகழ்த்திய மிகப்பெரும் நடவடிக்கையாக உள்ளதுடன் மிகப்பெரும் சிறப்பு நடவடிக்கையாகவும் உள்ளது. இது நான்காம் கட்ட ஈழப்போரில் புலிப்படை கடைப்பிடிக்க முயலும் புதிய அணுகுமுறையை வெளிப்படுத்துவதாக உள்ளது. ஏனெனில் இந்தத் தாக்குதலுக்கு முன்னதாக புலிப்படை நெடுந்தீவு முகாம்மீது நிகழ்த்திய தாக்கு தலில் தமது ஈருடகப்பணியை ஈடுபடுத்தி சிறிலங்காப் படைக்கு மிக அதிகளவான இழப்பை ஏற்படுத்தியிருந்தனர். இதன்போது புலிகளின் ஈருடகப்பணியினர் பதினாறு கடல் மைல்களுக் கப்பால் அமைந்திருந்த நெடுந்தீவுத் தளத்தை வெற்றிகரமாக அடைந்து தமது நடவடிக்கையை நிறைவு செய்திருந்தனர். இந்தத் தாக்குதல் காரணமாக சிறிலங்கா அரசின் கரையோரப் படைத்தளங்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகி இருந்ததுடன் புலிப்படையின் ஈருடகப்பணியின் வலிமையை நிரூபிப்பதாகவும் அமைந்திருந்தது. இந்தத் தாக்குதலானது உள்ளூர் மற்றும் சர்வ தேச படை நிபுணர்களின் கவனத்தை மிகவும் ஈர்த்திருந்தது. இதேபோன்றே மிக அண்மை வாரங்களில் சிறிலங்காவின் முக் கிய சரணாலயங்களில் ஒன்றான அம்பாந்தோட்டைப் பகுதியில் அமைந்திருந்த யால சரணாலயப்பகுதியில் சிறிலங்காப் படையி னரின் முகாம் ஒன்றின் மீது புலிப்படை நிகழ்த்திய தாக்குதல் கவ னத்தை ஈர்க்கும் தாக்குதலான அமைந்திருந்தது. இத்தாக்குதல் பிரதேசமானது புலிகளின் பிரதேசத்தில் இருந்து தொலை தூரத்தில் இருக்கும் ஒரு பகுதியாகையால் புலிகள் எவ்வாறு தளத்தை நெருங்கினர். அவர்கள் எவ்வாறு மீளவும் திரும்பினர் என்பது சிறிலங்காப் படைத்தரப்பைக் குழப்பத்தில் ஆழ்த்தி யுள்ளது. அத்தோடு புலிகளின் பகுதிக்கு வெளியே தேர்ந்தெடுக் கப்பட்ட இலக்காக இது அமைந்திருந்தது. இந்த நிலையில் இந்த நான்காம்கட்ட ஈழப்போரில் ஒரு புதிய அணுகுமுறையாகப் புலிப் படை சிறப்பு நடவடிக்கையில் கவனம் செலுத்தி வருவதானது அரசியல் - இராணுவ - பொருளாதார நிலையில் முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது. அநுராதபுரம் மீதான தாக்குதல், யால சரணாலயம் மீதான தாக்குதல் என்பன சிறிலங்காவின் சுற்றுலாத் துறையில் பெரும் சரிவை ஏற்படுத்தக்கூடிய தாக்கு தல்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே புலிகளின் இந் தச் சிறப்பு நடவடிக்கைகளானது பல்பரிமாண வகையில் சிறிலங் காவிற்குத் தாக்கம் செலுத்தக் கூடியதாகையால் இது சிறிலங்கா அரசிற்குப் பெரும் தலையிடியாக மாறப்போகிறது.

* * * * *

## சிங்களத்தின் உளமுறிவுக்கு யார் மருந்து கட்டுவது


மிக அண்மையில் தான் அந்தத் தகவல் வெளியாகியிருந்தது. அதாவது பல்வேறு நடவடிக்கையின் போதும் [illegible] இருந்து சிறிலங்கா அரசு கைப்பற்றியிருந்த பல[illegible] சில ஊர்திகளில் ஏற்றி சிங்களக்கிராமங்கள் தோறும் கொண்டு சென்று மக்களின் பார்வைக்கு வைக்கப்பட இருப்பதாகச் செய்தி வெளியாகி இருந்தது. இது முற்றிலும் மகிந்த ராஜபக்ச அரசிற்கு ஒரு அரசியல் இலாபம்தேடும் வகையிலான ஒரு நடவடிக்கையாக இருந்தபோதும் இன்னொரு வகையில் அரசு முன்னெடுக்கும் போருக்கு சிங்களமக்களின் மனநிலையைப் புடம்போடும் நடவடிக்கைக்கான ஏற்பாடாகவும் அமைந்திருந்தது. அத்தோடு இது மூன்றாம் கட்ட ஈழப்போரின் இறுதிவரை தொய்ந்துபோயி ருந்த படையினரின் மனநிலையை மேம்படுத்தும் நோக்கினையும் கொண்டிருந்தது. படையினரின் மனவலிமையை மேம்படுத்து வதில் சிறிலங்கா அரசு மிக்க உயர்வான கவனத்தைச் செலுத்தி வந்ததுடன் இதற்காக சில நடவடிக்கைகளைக் கூட மேற்கொண் டிருந்தது. ஆனால் இத்தகைய பெரும் பிரயத்தனத்தின் மத்தி யில் கட்டியெழுப்பிய படையினரின் மனவலிமையானது புலிப் படையின் ஒரு சிறப்பு நடவடிக்கை சிங்கள தேசத்தின் பெரும் முறிவை ஏற்படுத்திவிட்டது. இதன் கனகாத்திரத்தைப் புரிந்து

> "தன்னை நவீன துட்டகாமினி எனக் கற்பிதம் செய்துகொண்டு தமிழர் தேசத்துக்கு எதிராகச் செய்யும் போர்க்கர்ஜனை தமிழர் நன்கறிந்தது. ஏறுமுகத்தில் தனது போர்ப்பரவி சிட்டாய்ப் பறக்கிறது என்ற கனவில் மிதந்த மகிந்தருக்கு அநுராதபுரத் தாக்குதல் பெரும் பேரிடியாக மாறிவிட்டது. சிங்களத்தின் மடியிலே அடுத்தடுத்து நிகழ்ந்துவிட்ட இத்தாக்குதல்க ளானது சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் தமது புனிதநகரத்தின் மேல் கவிழ்ந்த துயராகவே தென்படும். இது துட்டகைமுனுவின் மைந்தன் இழந்துவிட்ட ஆபத்தின் அடையாளமாகவே அவர்களால் நோக்கப்படும். எவ்வே துட்டகைமுனுவின் மைந்தன் தமது நகரத்தின் புனிதத்தை கெடுக்கத் தலைப்படுகிறார் என்ற மனவோட்டம் நிச்சயம் அவர்களிடையே எழவே செய்யும்."

கொண்ட சிறிலங்கா அரசு கெஞ்சியும் வெருட்டியும் சிங்கள தேசத்தின் மனமுறிவைத் தடுக்கப் பகிரதப்பிரயத்தனத்தில் ஈடு பட்டுள்ளது. குறிப்பாக புலிப்படையின் இத்தாக்குதலை அரசியல் இலாபமாக்க வேண்டாம் என எதிர்க்கட்சிகளைக் கோரியி ருப்பதுடன் அவ்வாறு அரசியல் இலாபமாக்க முயல்வது ஒரு தேசத்துரோகக் குற்றமெனவும் குறிப்பிட்டுள்ளது. ஆயினும் அநுராதபுரத்தாக்குதல் சிறிலங்காப் படையினரிடையே மட்டுமன்றி சிங்களமக்களிடையேயும் பெரும் மனமுறிவை ஏற்படுத்தி உள் ளது என்பதே உண்மை. இதனை அரசின் நடவடிக்கைகள் அம் பலப்படுத்துகின்றன. இது ஊதிப்பெருப்பிக்கும் சிறிலங்காவின் ஆட்பல அதிகரிப்பில் கூட எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்த வல்லதாக மாறிவிடும் எனச் சிங்களதேசம் அஞ்சுகிறது. தப்பி யோடிகளின் எண்ணிக்கை அதிகமாகச் சிறிலங்காப் படைத் துறையில் சிறிலங்காப் படைகளுக்கு எதிராகப் புலிகள் பெரியள விலான தாக்குதல்களைத் தொடுக்காததன் காரணமாக தப்பி யோடிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக சிறி லங்கா அரசு ஆறுதல் கொண்டிருந்தது. இந்நிலையில் அநு[illegible] தாக்குதலானது இதற்குக் கேடு விளைவிக்கும் ஒரு தாக்குதலாக அமைந்துவிட்டது.

* * * * *

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தேசியத்தலைவருடன் வான்புலிகள்

## புனிதத்தைக் கெடுக்கும் ருகுணுவின் மைந்தன்

அநுராதபுரத்தில் புனிதம்மிக்க வெள்ளரசக் கிளையும் துட்டகை முனுவின் நினைவுகளும் நிமிர்ந்து நிற்பதாக சிங்களதேசம் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு. தமது வரலாற்று நாமங்களூடாக தென்னிலங்கையிலும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள முயலும் சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் தம்மை சப்புமல் குமாரர்களாகவும், நவீன துட்ட கைமுனுக்களாகவும் அடையாளப் படுத்திக்கொள்ள முயல்வதுண்டு. இது சிறிலங்காவில் எல்லா அரசியல் தலைவர்களிடையேயும் நீடித்துவரும் ஒரு வரலாற்றுத் தொற்றுநோய். இதற்காக சிங்களத்தின் பெருந்தொகை நிதியும் உயிர்களும் இந்தப் பெருமைக்காகப் பலியிடப்படுவதுண்டு. இதனை நாம் மூன்றாம் ஈழப் போர்க்காலத்தில் அரசியலில் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையின் நடவடிக்கைகளுக்கூடாகக் கண்ணுறக் கூடியதாக இருந்தது. இதன் நீட்சி ருகுணுவின் மைந்தரான மகிந்தராஜபக்சவையும் விட்டுவைக்கவில்லை. தன்னை நவீன துட்டகாமினி எனக் கற்பிதம் செய்துகொண்டு தமிழர் தேசத்துக்கு எதிராகச் செய்யும் போர்க்காலனை தமிழர் நன் கறிந்தது. ஏறுமுகத்தில் தனது போர்ப்புரவி சிட்டாய்ப் பறக்கிறது என்ற கனவில் மிதந்த மகிந்தருக்கு அநுராதபுரத் தாக்குதல் பெரும் பேரிடியாக மாறிவிட்டது. சிங்களத்தின் மடியிலே அடுத்தடுத்து நிகழ்ந்துவிட்ட இத்தாக்குதல்களானது சிங்கள மக்களைப் பொறுத்த வரையில் தமது புனிதநகரத்தின் மேல் கவிழ்ந்த துயரமாகவே தென்படும். இது ருகுணுவின் மைந்தன் இழுத்துவிட்ட ஆபத்தின் அடையாளமாகவே [illegible] நோக்கப்படும். எனவே ருகுணுவின் மைந்தன் [illegible]

> அமைதி தழுவிக்கிடந்த முன்னணி நிலைகள் சூடுபறக்க தனது படை மூலோபாயத்தை முன்நகர்த்தும் முடிவையெடுத்து தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு இந்த அரசின் தீர்வு இராணுவத்தீர்வே என்ற தனது திட்டத்தை வெளிப்படுத்தியது. அதிலும் குறிப்பாக இந்த அரசு வகுத்த மூலோபாயமானது கிழக்கை ஆக்கிரமித்த பின்னர் படிப்படியாக வடக்கை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டது என்பதை சிறிலங்கா அரசு வெளிப்படுத்தும் வரை பொறுத்திருந்த புலிகள் இயக்கம் இப்பொழுது அதன் மூலோபாயத்தைச் சிதைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

புனிதத்தை கெடுக்கத் தலைப்படுகிறார் என்ற மனவோட்டம் நிச்சயம் அவர்களிடையே எழவே செய்யும்.

* * * * *

## நிலம் பிடிக்கும் கனவும் பலம் சிதைக்கும் உறுதியும்

மகிந்த அரசு தமிழர்நிலம் பிடிக்கும் முயற்சிக்கு தனது படைப்பலத்தின் பெரும் வளத்தைச் செலவிட்டு வருகிறது. மகிந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு மண் ணாசை மிக்க அரசாகத் திகழ்ந்துவருகிறது. இதற்காக சிங்களப் படைவளத்தின் ஏறத்தாழ தொண்ணூறு விழுக்காட்டுப் படை வளத்தை தமிழர்தாயகப் பகுதிகளில் விஸ்தரித்துள்ளது. கிழக்கிலிருந்து தந்திரோபாய ரீதியில் புலிகள் இயக்கம் பின்னகர்ந்துவிட்ட சூழலில் அங்கு வன்பறிப்புச் செய்த தமிழர் நிலத்தைப் போன்று வடக்கிலும் ஒரு பெரும் வன்பறிப்பைச் செய்யலாம் என்ற முனைப்பில் மகிந்த அரசு கடுபட்டு வருகிறது. வடக்கில் மணலாறு தொடக்கம் மன்னார் வரையான முன்னணி நிலைகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காவின் பல டிவிசன்களின் படைகளும் பூநகரி தொடக்கம் நாகர்கோவில் வரையான முன்னணி நிலைகளில் நிலைகொண்டிருக்கும் படையினரும் உடைப்பெடுக்க முனையும் குளத்து நீரைப்போல சதா தமிழர் நிலம் விழுங்க முயன்று வருகின்றது. இத்தகைய படைமுனைப்புக்கு எதிராக புலிப்படை எத்தகைய தீர்வை முன்வைக்கப் போகின்றது என்ற வினாவுக்கு இப்போது விடை கிடைத்திருக்கிறது. அதாவது அநுராதபுரம் வான்படைத்தளம் மீதான தாக்குதலைப் புலிகள் நிகழ்த்தியிருப்பதன் மூலம் அவன் நிலம் பிடிக்கும் கனவைச் சிதைக்கலாம் [illegible] கொண்டாடு நிறுவப்பட்டுள்ளது. ஏனெனில் பலமிழந்தவன் [illegible]

மிதக்கும் மகிந்தராஜபக்ச அரசுக்கு அநுராதபுரத்தில் புலிகளின் தாக்குதலில் வான்படை சந்தித்த இழப்பானது பேரிழப்பாகும். இது ஏறத்தாழ 4000 கோடி ரூபாவைத் தாண்டும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அத்தோடு அது போரில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு படைத் தரப்பின் படைவலுவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் பின்னடைவாகும். சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் இந்த இழப்பை ஈடுசெய்வதற்கு அது பெரும் தியாகங்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகவே உள்ளது. இது சிங்கள மக்களின் வாழ்வியலில் நேரடியாகவே தாக்கம் செலுத்தவல்லதாகவும் இருக்கும். இந்த இடர்பாடானது சிறிலங்காவில் போரை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும்.

* * * * *

## வெற்றிக்கு மட்டுமல்ல தோல்விகளுக்கும் தான்

சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை இது முன்னெடுத்துவரும் போரில் வெற்றிகளுக்கு அதிக உரிமையோடு உரிமை கொண்டாடியிருக்கிறது. ஆனால் இப்போது வெற்றிகளுக்கு மட்டுமல்ல தோல்விகளுக்கும் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தத்துள் அரசைப் புலிகள் தள்ளியுள்ளனர். எனவே படை வெற்றிகளைக் காட்டி தென்னிலங்கையில் அரசியல் வெற்றிகளை அடைய முயன்ற மகிந்தவுக்கு இந்தத் தோல்வி பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. கிழக்கின் வெற்றியை ஒரு தேசியவிழாவாகக் கொண்டாடியதன் மூலம் மகிந்தஅரசு அடைய முயன்ற அரசியல் இலக்கு தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு கூட அச்சமூட்டத்தக்கவையாக இருந்தது. அத்தோடு மகிந்தராஜபக்ச அரசின் போர் வெற்றிப் பரப்புரையின் வீச்சு பிரதான எதிர்க்கட்சியை நிலைதடுமாற வைக்கும் அளவுக்கு கனதியாக இருந்தது. அதாவது இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது நிலைப்பாடுகளை மாற்றிவிட்டதாகவும் மாறிவிட்டதாகவும் கூட அதனை கூறவைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது அநுராதபுரத் தாக்குதலானது நிலைமையைத் தலைகீழாக மாற்றி உள்ளது. மகிந்த ராஜபக்ச அரசு போர்வெற்றிகளுக்கு மட்டுமல்ல தோல்விகளுக்கும் கூடப் பொறுப்பேற்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கூச்சலிடத் தொடங்கிவிட்டன. நாட்டைத் தவறான பாதையில் இந்த அரசு முன்னெடுத்துக் கொண்டு செல்வதாக குற்றம் சாட்டும் எதிர்க்கட்சிகள் மகிந்த மீது பெருவாரியாக கண்டனத்தை தொடுத்து வருகின்றன. எதிர்க்கட்சிகளின் இந்தத் தாக்குதல்களுக்கு முகம்கொடுப்பதில் சிரமப்படும் மகிந்த அரசு தோல்வியின் வலிகளை இப்போது உணரத் தொடங்கியிருக்கிறது. இது போர்வெற்றி என்ற போதையையூட்டி சிங்களமக்களை இருண்மை நிலைக்குள் வைத்திருந்த மகிந்த சிந்தனைக்கு கிடைத்த தோல்வியாகும்.

* * * * *

## மூலோபாயத்தை குறிவைத்துவிட்ட புலிகள்

இதுவரை சிறிலங்கா அரசிற்கு எதிரான பெரும் எதிர்நடவடிக்கைகளில் ஈடுபடாத புலிகள் மகிந்தராஜபக்ச அரசின் இனப்பிரச்சினைக்கான மூலோபாயம் என்ன என்பதை நன்கு வெளிப்படுத்த வாய்ப்புக்களை வழங்கியிருந்தனர். புலிகளின் இப்போக்கை தவறாக மதிப்பிட்ட சிறிலங்கா அர[illegible] கள் இயக்கத்தின் பலவீனமான கருதிக் கொண்[illegible]

கள் சூடுபறக்க தனது படைமூலோபாயத்தை முன்நகர்த்தும் முடிவையெடுத்து தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு இந்த அரசின் தீர்வு இராணுவத்தீர்வே என்ற தனது திட்டத்தை வெளிப்படுத்தியது. அதிலும் குறிப்பாக இந்த அரசு வகுத்த மூலோபாயமானது கிழக்கை ஆக்கிரமித்த பின்னர் படிப்படியாக வடக்கை ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டது என்பதை சிறிலங்கா அரசு வெளிப்படுத்தும் வரை பொறுத்திருந்த புலிகள் இயக்கம் இப்பொழுது அதன் மூலோபாயத்தைச் சிதைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதனைப் பல சர்வதேச ஊடகங்களும் இராணுவ மற்றும் அரசியல் அவதானிகளும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அநுராதபுரம் வான்படைத்தளம் மீதான தாக்குதல் குறித்து லண்டனிலிருந்து வெளிவரும் டெலிக்கிராப் வெளியிட்ட செய்தியில் அநுராதபுரம் வான்படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதலானது இராணுவத்தீர்வை மேற்கொள்ள முயலும் அரசின் உள்நாட்டுப் போருக்கு விழுந்த பலத்த அடியாகும் என வர்ணித்துள்ளது. இது புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசின் மூலோபாயத்தைக் குறிவைத்து தாக்கி விட்டதையே காட்டி நிற்கின்றது. இதேவேளை வடக்கின் மீதான போருக்கு அரசு தயாராகிவிட்ட நிலையில் அண்மையில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம பரந்துபட்ட அளவிலான நடவடிக்கைகளுக்கு உகந்த தருணம் இது எனக் கூறியுள்ளார். இந்த நிலையில் அரசு வடக்கில் முன்னெடுக்கப் போகும் போரில் வடக்கின் வடமுனையில் பலாலி கூட்டுப் படைத்தளமும் தென்முனையில் அநுராதபுரம் வான்படைத் தளமும் முக்கிய இரண்டு மையப்புள்ளிகள் ஆகும். இதில் பலாலிப் படைத்தளமானது ஏற்கனவே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதுடன் அத்தளமானது புலிகளின் தொடர்ச்சியான ஆட்லெறி வீச்செல்லைக்குள்ளே இருந்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. பலாலிப்படைத்தளத்திற்கு புலிகள் இயக்கம் கொடுத்துவரும் அழுத்தமானது அத்தளத்தைக் காரைநகருக்கு மற்றும் மாற்றுவழிகளுக்கு கூட சிங்களப் படைத்தரப்பைத் தூண்டியுள்ளது. இந்நிலையானது வடபோர்க்களத்தில் சிறிலங்காப் படைத்தரப்பு வடமுனையைப் பெரும் நெருக்கடிக்கு மத்தியிலேயே நிர்வகிக்கவேண்டியுள்ளதைக் காட்டிநிற்கின்றது. சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் பெரும் சிக்கலுக்குரிய ஆபத்தான நிலையாகும். இந்த நிலையில் தென்முனையில் மன்னார், வவுனியா, மணலாறு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நிலைகொண்டிருக்கும் சிறிலங்காப் படைத்தரப்பு நிலையான பாதுகாப்பை வழங்கக்கூடிய தளமாக அநுராதபுரத்தளமே உள்ளது. இத்தளமானது வெறுமனே வழங்கல்களை மேற்கொள்ளும் தளம் மட்டுமல்ல. இது வவுனியா படைக்கட்டளைப்பீடம் நெருக்கடிக்குள்ளாகும் பட்சத்தில் சிலிர்த்தெழக்கூடிய ஒரு முக்கிய தளமாக விளங்கிவருகிறது. இத்தளத்தின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படுவதிலேயே மன்னார், வவுனியா, மணலாறு மாவட்டங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படுவதுடன் வடக்கு நோக்கிய அரசின் எந்தப் படைநடவடிக்கையையும் உறுதிசெய்ய முடியும். ஆனால் இப்போது இத்தளம் புலிகளின் துல்லியமான தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது. இது சிறிலங்காவின் வடபோர்க்களத்தின் தென்முனையை மட்டும் ஆட்டம் காண செய்வதுடன் ஒட்டுமொத்தமாக வடபோர்க்களத்தில் அத்தனை போர் ஏற்பாடுகளையும் படைநடவடிக்கைகளையும் பாதிப்புக்குள்ளாக்கத் தக்கதாயுள்ளது. இந்நிலையில் வடக்கே பலாலிப் படைத் தளமும் தெற்கே அநுராதபுரப் படைத்தளமும் புலிகளின் இலக்காகிய நிலையில் சிறிலங்கா அரசின் போர் மூலோபாயத்தைத் [illegible] புலிகள் தயாராகிவிட்டார்கள் என்பதை தெளிவாக [illegible]




■ பு.சத்தியமூர்த்தி

# சூத்திரம்

Results Justify the means என்பார்கள். கொழும்பினதும் அதனைப் பின்னின்றியக்கும் பன்னாட்டுச் சமூகத்தினதும் தற்போதைய போக்கும் அதனை விமர்சிக்கும் புத்திஜீவிகள், சிந்தனையாளர்கள் எனப்படுவோரது நோக்கும் இதனையே அவர்கள் மனதிற்கொண்டு இயங்குகிறார்களோ என எண்ணத் தூண்டுகின்றன. இரண்டு கூட்டணிகளும் ஒரு துண்டுமாகச் சூழலும் கொழும்புக் கட்சி அரசியலின் அடிநாதம் 'கைப்பற்றுதலும் காப்பாற்றுதலும்' என்பதற்குள் அடங்குகிறது. திரு.மகிந்த ராஜபக்சவால் தலைமை தாங்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தனது வசமுள்ள பாராளுமன்றப் பெரும்பான்மையையும் அதன்வழியான அரசாங்க அதிகாரத்தையும் எவ்வகையிலேனும் தக்கவைத்துக் கொள்வதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் அதனோடு தற்போது கைகோர்த்துக்கொண்டுள்ள ஆளுங்கட்சியிலிருந்து பிரிந்துவந்த திரு.மங்கள சமரவீர, திரு.சிறிபதி சூரியாராச்சி ஆகியோரின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவுக்கும், எவ்வகையிலேனும் பாராளுமன்றச் சமன்பாட்டைக் குழப்பி ஆட்சியைக் கவிழ்த்துப் பொதுத்தேர்தல் ஒன்றைக் கொண்டுவந்துவிடவேண்டுமென்பதுமே தலையாய விடயங்களாகும். இவ்வாறு ஒருதேர்தல் வருமாயின் அரசின் ஊழல்கள், களத்திலே ஏற்படக்கூடிய யுத்தத்தோல்விகள் (வெளிப்படையாக திரு.ரணிலும் அவரது கூட்டாளிகளும் இராணுவத்தின் வெற்றிகளைப் பாராட்டினாலும் உண்மையிலேயே இராணுவம் பெரும் இழப்புகளைச் சந்திக்க வேண்டுமென்பதே அவர்களது பெருவிருப்பாகும்.) வாழ்க்கைச் செலவு உயர்வு, இன்ன பிற பிரச்சினைகளை முன்வைத்துத் தென்னிலங்கை வாக்குகளை அறுவடை செய்து ஆட்சியைப் பிடித்துவிட முடியுமென அவர்கள் நம்புகின்றனர். இதற்காகப்போரை நோக்கி திரு.மகிந்தவின் அரசாங்கத்தை மேலும் மேலும் உந்தியபடி மறுபுறம் மக்கள் மத்தியில் வாழ்க்கைச்செலவு உயர்வு - அரசின் தேவையற்ற செலவுகள் - அதிகாரத் துஸ்பிரயோகங்கள் - ஊழல்கள் குறித்து மிகவும் அடிமட்டத்தில் பிரச்சாரங்களையும் மேற்கொண்டுவருகின்றனர். இரண்டு கூட்டணிகளோடும் தன்னைத் தொட்டுக்கொள்ளாது ஒரு தனிவழியில் தான் இயங்குவதாகக் காட்டிக்கொள்ளும்

அது பேசிய விடயங்களை இப்போது திரு.ரணிலின் கூட்டணி பேசத்தொடங்கிவிட்டது. அது விதித்த நிபந்தனைகளை அவர் ஏற்றுக்கொள்வதான சமிக்ஞைகளை மிகப் பகிரங்கமாகவே காட்டிவிட, ஜே.வி.பி உண்மையிலேயே திகைத்துத்தான் போய்விட்டது. (அதனது இந்தப் போக்கிடமற்ற தன்மையை மட்டுப்படுவிட்ட திரு.மகிந்த திரும்பவும் அதைநோக்கிக் கைநீட்டுகிறார்.) திரு.மங்கள சமரவீர தேர்தல் வெற்றியைக் குறிவைத்து மக்களின் வாக்குகளை அறுவடை செய்வதற்கான வெற்றிகரமான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதில் வல்லவர். அவரதும், திரு.எஸ்.பி.திசாநாயக்காவினதும் வெற்றிகரமான தேர்தல் வேலைகளாலேயே 1994இல் திருமதி.சந்திரிக்காவின் மக்கள் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடிக்க முடிந்தது. மட்டுமன்றி திரு.மகிந்த கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கான காய்நகர்த்தல்களைச் செய்தவர் திரு.மங்களவே என்பது கொழும்பு அரசியற்களத்தின் பகிரங்க இரகசியம். இந்த மங்கள இப்போது, தானே பதவியிலேற்றிய மகிந்தவால் தூக்கியெறியப்பட்ட நிலையில் அவர் மீதான வெஞ்சினத்தோடு ரணிலோடு கூட்டு வைத்துக்கொண்டிருக்கிறார். 'மகிந்தவைக் கீழிறக்கி ரணிலை மேலேற்றுவேன்' என்பது அவரது இப்போதைய சபதம். இதனை நிறைவேற்றக் குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார் அவர். யாரெவர் என்றில்லாமல் எவரோடும் கூட்டுச்சேரலாம், எவரோடும் கைகுலுக்கலாம், எவரையும் பிரித்தெடுக்கலாம்... விளைவாக ஆட்சியதிகாரம் கைக்குவரவேண்டும் என்பதே மங்களவின் தாரக மந்திரம். இதன்படி சிறிலங்காவின் பாராளுமன்றில் மூன்றாவது பெரியகட்சியாகவும் கொழும்பு அரசியலில் ஒற்றைத் துண்டாக அல்லது மாற்றுச் சக்தியாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஜே.வி.பியோடு அரசியல் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு தீவிர பிரயத்தனங்களில் ஈடுபட்டிருக்கிறார் திரு.மங்கள. 'ஜே.வி.பிக்கு மனங்குளிரும்படியான நிலைப்பாட்டை ஐ.தே.கட்சி எடுக்கவேண்டும்' என்பது அவரது இதற்கான உத்தி. அதன்படி சில சுற்றுப்பேச்சுக்கள், பல பல சந்திப்புக்களை இருதரப்பிடையேயும் நடாத்தி முடித்துவிட்டார் திரு.மங்கள. ஐ.தே.கட்சியும் இந்தப்பாதையில் ஜே.வி.பியை நோக்கிச் சில அடிகளை எடுத்துவைத்து

'இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு சமஸ்டிமுறைமை தேவையற்றது. அதிகாரப்பரவலாக்கலே போதுமானது' என்பதாகும். ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்ட, 'யுத்தம் மற்றும் பொருளாதாரம் ஆகிய விடயங்களில் ஐ.தே.கட்சி தனது கொள்கையை மாற்றிக்கொண்டால் அதனோடு சேர்ந்து செயற்படுவது குறித்து ஆலோசிக்கலாம்' என்ற கருத்துக்கான ஐ.தே.கட்சியின் பிரதிபலிப்புத்தான் 'சமஸ்டி முறைமையைக் கைவிடுதல்' என்பதாகும். அதாவது ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படவேண்டும், அதனூடாக திரு.மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்டதே இந்த நிலைப்பாடாகும். இதை இன்னுமொரு கோணத்திற் பார்த்தால், தாம் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக திரு.ரணிலும் ஐ.தே.கட்சியும் உதறித் தள்ளியது எதையென்றால் இனப்பிரச்சினையில் தாம் கொண்டிருந்ததாகக் காட்டி வந்த ஒப்பீட்டளவில் முன்னேற்றமான நிலைப்பாட்டையே என்பது புலப்படும். ஜே.வி.பி குறிப்பிட்டதன்படி, 'யுத்தம் மூலம் பயங்கரவாதத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டும்' என அறிவிப்பதிலும் திரு.ரணிலுக்கும் அவரது கட்சிக்கும் எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. மட்டுமன்றி 'களநிலவரம் மாறிவிட்டதனால் போர்நிறுத்த ஒப்பந்தம் திருத்தப்படவேண்டும்' என்று கூறவும் அவர்கள் பின்னிற்கவில்லை. திரு.ரணிலின் இந்தக் குத்துக்கரணம் தொடர்பாக பன்னாட்டுத்தளத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் வெளியான பிரதிபலிப்புக்கள் மிகுந்த கவனத்துக்குரியவை. பன்னாட்டுச் சமூகம் இலங்கை இனப்பிரச்சினையில் ஏதோவொரு முடிவையோ, நியாயமான தீர்வையோ பாதிக்கப்பட்ட ஈழத்தமிழருக்குக் கிடைப்பதற்குத் தூண்டுகோலாக இருக்குமென நம்பும் தரப்புகள், தனிநபர்களுக்கு இந்தப் பிரதிபலிப்புகள் ஆழமான கசப்பைத் தந்திருக்கக்கூடும். உண்மையில் திரு.ரணிலின் இந்தப் பின்வலித்துக்கொள்ளுதலுக்குப் பின்னே நின்று இயக்கியது அமெரிக்காவின் கொழும்புக்கான தூதுவரே என்று கொழும்பில் ஒரு அரசியல் ஊகம் பலமாக நிலவுகிறது. ஜே.வி.பியுடன் அடுத்தடுத்து அவர் நிகழ்த்திய சந்திப்புக்கள் ஐ.தே.கட்சியுடன் கைகோர்த்துக்கொள்ளுமாறு அதனைத் தூண்டும் நோக்கிலானவை என நோக்கப்படுகிறது. இதன் ஒரு அங்கமாகவும் சிங்கள வாக்காளர் மத்தியில் செல்வாக்குப் பெறுவதற்கு திரு.மகிந்தவால் பாவிக்கப்படும் இனவாத உள்ளுடன் பொதிந்த அணுகுமுறையை திரு.ரணில் தாண்டிப் பாயவேண்டுமானால் அவரும் அதே கருவியைக் கையிலேந்தாமல் முடியாது என்னும் மனப்போக்கு அவரது மேற்குல நண்பர்களின் மனதிலே தெளிவாக உருவாகிவிட்டதால் திரு.ரணிலை தென்னிலங்கையின் தீவிர சிங்கள மனப்போக்குக்கு



> **Results Justify the means**
> என்பது
> எங்களுக்குமானதே.
> நாங்கள் வெல்லவேண்டும்.
> அதற்காக நாங்கள் பலமாக
> இருக்கவேண்டும்.

இந்த 'சமஸ்டியைக் கைவிடுதல்' என்ற நிலைப்பாட்டை அறிவிக்கும்படி திரு.ரணில் தூண்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திரு.ரணிலும் அவரது பரிவாரங்களும் இந்த அறிவிப்பை வெளியிட்ட பின்னர் 2002, 2003இல் சமஸ்டியை நோக்கி அப்போதைய ரணில் அரசை வழிநடத்தியதாகக் கருதப்பட்ட மேற்குலகம் எவ்வித அசௌகரியங்களையும் வெளிக்காட்டவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஒரு கிழிந்த சட்டை கழற்றி வீசப்பட்டதான போக்கையே அவர்களின் நடவடிக்கைகள் பிரதிபலித்தன. இதன் அர்த்தம், ஐ.தே.கட்சி கூறியதுபோல அப்போது நிலவிய சூழலில் அவ்வாறு ஒரு நிலைப்பாடு தேவைப்பட்டது இப்போது அது தேவைப்படவில்லை. ஏனெனில் களநிலவரம் மாறிவிட்டது என்பதுதான் பன்னாட்டுச்சமூகம் எனப்படும் மேற்கின் நிலைப்பாடு அல்லது உத்தி எனக்கொண்டால் அதில் தவறில்லை என்றே படுகிறது. இதிலே இன்னுமொரு வேடிக்கை ... ஐ.தே.கட்சியின் இந்த அ... Think Tank ... ஒருவரான பேராசிரியர்

லங்கைச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள ஐ.தே.கட்சிக்கு இப்படியொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய தேவை இருக்கிறது'. அதாவது ஆட்சியமைப்பதற்கு எப்படியான குத்துக்கரணங்களை அடித்தாலும் அது ஏற்கத்தக்கதே என்பதாக அந்தப் பேராசிரியரது கருத்து அமைகிறது. இவ்வாறுதான் இருக்கிறது கொழும்பினதும் உலகினதும் நிலைமை. அவர்களுக்கு ஆட்சியைப்பிடிக்கவேண்டும். பிடித்ததைக் காப்பாற்றவேண்டும். தங்களுக்கு நெருக்கமானவர்கள் ஆட்சியிலிருக்கவேண்டும். அவ்வாறல்லாதவர்களின் ஆட்சிகவிழ்க்கப்படவேண்டும். அவ்வாறான கவிழ்ப்பு முயற்சிகளைப் புறங்காண இனவாதத்தீயை மேலும் முளாசியெரிக்கவேண்டும். அதற்காக மேலும் மேலும் யுத்தத்தைத் தமிழ்மக்கள் மீது ஏவவேண்டும்... ஆக, கொழும்பில் யார் ஆட்சியில் அமரவேண்டுமானாலும் அதற்கான பலிப்பொருளாக அமைவது ஈழத்தமிழரின் உரிமைகளும் உயிரும்தான், தமிழர் நிலந்தான். இது பன்னாட்டுச் சமூகத்தாலும் புத்திஜீவிகளாலும் ஏற்கப்படத்தக்கதொன்றே தவிர அரசியற் பித்தலாட்டமோ, ஆதிக்கவெறியோ, அரசியல் நயவஞ்சகமோ அல்ல! அப்படியென்றால் தமிழ் மக்கள் என்ன செய்யவேண்டும்? Results Justify the means என்பது எங்களுக்குமானதே. நாங்கள் வெல்லவேண்டும். அதற்காக நாங்கள் பலமாக இருக்கவேண்டும். 'கடந்த ஐந்து ஆண்டுகளிற் களநிலவரம் மாறிவிட்டதால் புரிந்துணர்வு உடன்படிக்கை திருத்தப்படவேண்டும்' என எப்படி அவர்களால் துணிந்து கூறமுடிந்ததென்றால், தமிழர்கள் பலவீனமாகிவருகிறார்கள் என அவர்கள் எண்ணிவிட்டதுதான் அதற்குக் காரணம். இந்த அரசியற் திமிர்த்தனம் - நயவஞ்சகம் என்பவற்றின் தாடைகள் சுழன்று விழும்படியாக ஓங்கித் தமிழினம் விடுகின்ற அறைகள்தான், அந்த அறைகளாற் பொறி கலங்கி அவர்களின் கண்களிலே பூச்சி பறக்கும் போதுதான் அவர்கள் நிலத்துக்கு வருவார்கள். அவர்களை நிலத்துக்குக் கொண்டுவரவும் வேண்டும். மட்டுமன்றி மற்றுமொரு தடவை இவ்வாறு அவர்கள்



# தமிழரின் தேட்டமும்
## சிறிலங்காவின் முதலீடும்

மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காக உழைக்கின்றான். அவனது வருமானத்தில் நிகழ்கால நுகர்வுத் தேவைக்கான செலவு போக மீதியைத் தன்னுடைய எதிர்காலத் தேவை கருதி சேமிக்கின்றான். இந்த சேமிப்புப் பழக்கமானது மனித சமூகத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. பணம் என்ற ஊடகம் பண்பாட்டுக்கு வரமுன்பே தனது உற்பத்தியில் ஒருபகுதியைத் தனது எதிர்காலத் தேவை கருதி சேமித்து வைத்தான். இந்தச் சேமிப்பின் ஒருபகுதியைக் குறித்த பொருள் தேவைப்படும் ஒருவருக்குக் கடனாகக் கொடுக்கின்றான். சிறிதுகாலத்தின் பின் கடனாகக் கொடுத்த தொகையுடன் சேர்த்து மேலதிகமாக ஒரு சிறிய தொகையைச் சன்மானமாகப் பெறுகின்றான். இத்தகைய முறையே இன்று வளர்ச்சியடைந்து தனித்துவமான ஒருநிறுவன ரீதியான அமைப்பாகச் சேமித்து வளர்ச்சியடையக் காரணமாக இருந்தது.

மக்களுக்கு வைப்பகங்களில் இருந்த நம்பிக்கை காரணமாக தம்மிடமுள்ள பணத்தை வைப்பகங்களில் நிலையான வைப்பு, சேமிப்பு வைப்புப் போன்ற வைப்புக்களில் வைப்பிலிட்டு வட்டி வருமானத்தைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான வைப்பகங்களும் இலங்கை அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக இயங்கும் தனியார் வைப்பகங்களும் இங்கு செயற்பட்டு வருகின்றன. இவ்வைப்பகங்களில் வைப்பிலிடும் சேமிப்புக்கள் ஒன்று திரட்டப்பட்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக அவை முதலீடு செய்யப்பட வேண்டும்.

இலங்கையில் இயங்குகின்ற வைப்பகங்களில் உள்ள வைப்புக்களில் கணிசமான வைப்புக்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவை. தமிழர்கள் சேமிக்கும் பண்புடையவர்கள். நிதானமான முதலீடுகளை மேற்கொள்ளும் இயல்புடையவர்கள். எனவேதான் அவர்கள் கணிசமான வைப்புக்கு உடமையாளராக இருக்கின்றனர். இலங்கை அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாக இயங்கும் வைப்பகங்களில் பணத்தை சிறிலங்கா அரசு கடனாகப் பெற்று தமிழ் இனத்தை அழிப்பதற்கு பயன்படுத்துவது மிகவும் வேதனை தரும் செய்தியாக உள்ளது. அதாவது தமிழ்மக்களின் கணிசமான வைப்புக்கள் தமிழ்மக்களாகிய எங்களை அழிக்க பயன்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இதை தடுக்க உடனடியாகத் தமிழ்மக்களாகிய நாம் விழிப்புணர்வு பெற்றுச் செயற்பட வேண்டும்.

### தமிழ் இனத்தை அழிக்க பயன்படுத்தப்படும் பாதுகாப்புச் செலவீனம்

ஒருநாடு தனது அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், இறைமை உடைய நாடாக விளங்கவும் மக்களிடையே பொது ஒழுங்கு சட்டம் என்பவற்றை பேணுவதற்கும் என 'பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் அமைச்சு' என்ற அமைச்சுக்கு வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பணம் ஒதுக்கப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் 1983 இற்குப் பின்னர் இவ் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் பணம் முழுவதும் தமிழ் இன அழிப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறெனில் மக்கள்மீது விமானக் குண்டுவீச்சு, ஆட்டிலறி, தரைப்படை, தாக்குதல்கள், சட்டவிரோதப்படுத்...

பத்திரிகையாளர்கள் தமிழ்பாராளுமன்ற உறுப்பினர் கொலை, மக்களைத் துன்புறுத்தல், கால்நடைகள் கொல்லப்படுதல், மக்களின் வீடுகள், பெறுமதியான பொருட்கள், ஆலயங்கள், கட்டடங்கள், குடிசைக் கைத்தொழில்கள், தொழிற்சாலைகள், வியாபாரத் தாபனங்கள், வணக்கத்தலங்கள், மீன்பிடிக் கிராமங்கள், மீன் படகுகள், மீன்பிடி உபகரணங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், பொறிகள், கருவிகள், பயன்தருமரங்கள், விளைநிலங்கள் என்பன அழிக்கப்பட்டு மீண்டும் தமிழ்மக்கள் மீது பொருளாதாரத்தடை, மருந்துப் பொருள்தடை, நோயாளர்களின் மருத்துவ சிகிச்சைக்கு உரிய இடங்களுக்கு கொண்டு சென்று சிகிச்சையளிக்கத் தடை, சுதந்திரமாக நடமாடத்தடை, எரிபொருள்தடை, விவசாய உள்ளீட்டுத் தடை, கட்டடப்பொருள் தடை, மக்களுக்கு அத்தியாவசியப் பொருள் கொண்டு வருவதற்கான கட்டுப்பாடு, உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தத் தடை, பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், ஆய்கூட உபகரணங்கள் கொண்டு செல்லத்தடை காரணமாகக் கல்வியைத் தொடர முடியாத நிலை இத்தனை இன்னல்களையும் தமிழ் மக்கள் அனுபவிக்கின்றார்கள். அதற்கு சிறிலங்கா அரசுக்கு பக்கபலமாக தமிழர்களின் சேமிப்பு இருப்பதை தமிழ் மக்களாகிய நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

### அதிகரித்த யுத்தச் செலவு இலங்கை மக்கள் அனைவரையும் பாதிக்கும்

அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு வேண்டிய நிதியை வரவு செலவுத் திட்டத்திலிருந்தே பாதுகாப்புத் தேவைக்கென ஒதுக்குவது...

புதியபொருட்கள் சேவைகள் எதையும் உருவாக்கப் போவதில்லை. அதாவது யுத்த தளவாடங்களை கொள்வனவு செய்து அதனைப் பயன்படுத்துகின்ற போது அது சொத்துக்களை அழிவடையவே செய்யும். அதாவது மெய்ச்சொத்துக்கள் மற்றும் வளங்களை நாசப்படுத்துவனவாகவே காணப்படும். அதுமாத்திரமின்றி பாதுகாப்புச் செலவினத்துக்காக வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற போது ஏனைய துறைகளின் மீதான முதலீட்டின் அளவு வீழ்ச்சியடையும். இதனால் உற்பத்தி பொருளாதார வளர்ச்சி வருமானம் என்பன பாதிப்படையும். அதுமட்டுமன்றி தேசிய சேமிப்பு வீதமும் வீழ்ச்சியடையும். யுத்தத்தின் மீதான நிதி ஒதுக்கீடு அதிகரித்து செல்கின்ற போது அச்செலவினை நாட்டு மக்கள் அனைவருமே தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. யுத்தத்தினால் தமிழ்மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் யுத்தத்தின் விளைவுகளும் அதன் எதிரொலிகளையும் சிங்கள மக்கள் வெகு விரைவில் உணருவார்கள்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் உயர்ந்த பாதுகாப்பு செலவீனம் காரணமாக அதன் ஒருபகுதியை ஈடுசெய்வதற்காக பொருட்கள் சேவைகள் மீது வரிகளை உயர்த்தி வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறது. எரிபொருட்களுக்கு சர்வதேச சந்தை விலை உயர்வுக்கு ஏற்ப இலங்கையில் மானியத்தை கொடுத்து விலை உயர்வுகளை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும். ஆனால் பாதுகாப்புக்கு கூடிய பணம் ஒதுக்கப்படுவதால் மானியத்தை வழங்க முடியாதுள்ளது. அத்துடன் பால்மா, பருப்பு, வெங்காயம்,சீனி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நுகர்வு அதிகமாக இருப்பதால் இவற்றின் மீதான வரி அதிகவருவாயை அரசுக்கு பெற்றுக் கொடுக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் மீது மறைமுக வரியை விதிப்பதனால் அவற்றின் விலைகள் அதிகரிக்கின்றன. நேர் வரிகளையும் அரசு தனது பாதுகாப்புத் தேவைகளுக்காக அதிகரிக்கின்றது. இதன் காரணமாக தனியார் துறையின் சேமிப்பு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு நாட்டின் முதலீடு குறைக்கப்பட்டு அபிவிருத்தி பாதிக்கப்படும். இலங்கை போன்ற சிறிய நாடுகளின்

| சிறிலங்காவின் யுத்தச் செலவின் வளர்ச்சிப் போக்கு | மொத்தப்பாதுகாப்புச் செலவு (மில்லியன் ரூபாய்) |
|---|---|
| 1982 | 1,100 |
| 1990 | 13,339 |
| 1995 | 43,110 |
| 2001 | 68,154 |
| 2006 | 110,938 |
| 2007 | 139,557 |
| 2008 | 166,447 |

இயலளவுக்கு மிஞ்சிய வகையில் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து கூடிய பணம் ஒதுக்கப்படுவதால் கிட்டத்தட்ட இரண்டு கோடி மக்களால் செலுத்தப்படும் இறைகளை விட செலவு கூடுதலாக இருப்பதனால் பாதீட்டுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியை உள்நாட்டு வெளிநாட்டுக் கடன் பெறுவ...





அனைத்து
சமூக அபிவிருத்திக்கான செலவுத்
தொகையைக் கூட்டிப் பார்த்தாலும்
பாதுகாப்புச் செலவினத்திற்கு
கிட்டக் கூடச் செல்ல முடியவில்லை.
இதுவே மக்களைச் சிந்திக்க
வைக்கப் போதுமான சான்றாகும்.

### அரசு பெற்றுக் கொள்ளும் உள்நாட்டுக் கடன்கள்

அரசாங்கம் பாதீட்டுப் பற்றாக்குறைக்கு திறைசேரி உண்டியல்கள், மத்திய வங்கி முற்பணங்கள், ரூபாய்ப் பிணைகள், வரி ஒதுக்கச் சான்றிதழ்கள், நிர்வாகக் கடன்கள், திறைசேரி முறிகள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ஊடாகக் குறுங்கால, நீண்டகாலக் கடன்களை மத்தியவங்கி, வணிக வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, எச்.எஸ்.பி.சி. வங்கி, இந்தியன் வங்கி, யூனியன் வங்கி, சம்பத் வங்கி, சிற்றி வங்கி போன்ற 23ற்கும் மேற்பட்ட வங்கிகளிடமிருந்தும் கடன்களைப் பெற்றுக்கொள்கின்றது. வங்கியில்லாத் துறைகளான ஊழியர் சேமலாப நிதியம், தேசிய சேமிப்பு வங்கி, காப்புறுதி நிறுவனங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், போன்றவற்றிலிருந்து கடன்களைப் பெற்று தீவிர யுத்தத்துக்கான பணம் திரட்டப்படுகின்றது.

வங்கித் துறைகளில் அரசு கடன் பெற்று யுத்தத்தை மேற்கொள்வதனால் மக்களின் வைப்புப்பணம் வங்கிகளால் முதலீட்டாளர்களின் முயற்சிகளுக்கு கடன் வழங்குவது தடுக்கப்படுகின்றது. இதனால் உற்பத்தி பொருளாதார வளர்ச்சி பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்பட்டு பொருட்கள் சேவைகளின் விலை உயர்வடைந்து பணவீக்கம் ஏற்பட்டு மக்களை வறுமை நிலைக்கே இட்டுச் செல்கின்றது. இதை நாட்டுமக்கள் அனைவரும் உணர்ந்து அரசின் இச்செயற்பாட்டைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டியது கட்டாயமாகும்.

### யுத்த முனைப்பில் 2008 ற்கான பாதீடு வெளிவருகின்றது

2007 ஆண்டுக்கு 13,955 கோடி உரூபா பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட போதும் 2008 ஆம் ஆண்டு 16,644 கோடி உரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்த செலவினம் 92,505 கோடி உரூபா ஆகும். 2007ஆம் ஆண்டை விட 2008ம் ஆண்டுக்கு 2,689 கோடி உரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட இத்தொகை மொத்த செலவினத்தில் 18% ஐ விழுங்கப் போகின்றது. இலங்கையின் வரலாற்றிலே பாதுகாப்புச் செலவினங்களுக்காக உத்தேசிக்கப்பட்ட மிகப்பெரிய தொகை இது வெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் கிட்டத்தட்ட 27 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் பல்வேறு இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கையுடன் சீண்டுவதற்கு 2008ஆம் ஆண்டுப் பாதீட்டில் யுத்தத்திற்கு 16,644 கோடி உரூபா ஒதுக்கிய நிலையில் யுத்த முனைப்புக் கொண்டு வெளிவருகின்றது. அண்மையில் அமெரிக்கா சென்ற மகிந்த ராஜபக்ச தங்கிய அறையின் ஒருநாள் இரவு அறை வாடகை 500,000 உரூபா ஆகும். ஆனால் தமிழீழத்தில் ஒரு இறாத்தல் பாண் 34 உரூபாவிற்கு வாங்கி உண்ணவும், நிம்மதியாகப் படுத்துறங்கவும் முடியாத நிலை உள்ளது. 2008 ஆம் ஆண்டு பாதீட்டில் சனாதிபதி மகிந்த ராஜ பக்ச அவர்களது நிர்வாகத் தேவைக்கு மட்டும் 578 கோடி உரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நிமிடத்திற்கு கிட்டத்தட்ட 10,000 உரூபா செலவு செய்யப் போகின்றார். இது ஒரு தே ~ ற்ற செலவாகும். தமிழ்மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும், அவர்களைக் கொல்லவும், இடம்பெயரச் செய்வதற்குமான சிந்தனைக்கான செலவாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. ஒருநிமிடச் செலவை ஒரு இடம் பெயர்ந்த தமிழ் குடும்பத்திற்கு 10,000 உரூபா செலவில் ஒரு தற்காலிக குடிசையைக் கட்டிக் கொடுக்க முடியும்.

டொலர் பெறுமதியில் கிட்டத்தட்ட இலங்கை உரூபாவில் 412 கோடி உரூபா பெறுமதியில் 25 யுத்த டாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டது. அத்துடன் நவீன டாங்கிகளும் யுத்தக் கப்பல்களும் நவீன வசதிகளுடன் கூடிய யுத்த தளபாடங்களும் இலட்சக்கணக்கான எறிகணைகளும், கொள்வனவு செய்து தமிழ் மக்களின் நிலங்கள், வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றின் மீது வீசப்பட்ட தமிழ் மக்களைக் கொன்றொழிக்க அரசுக்குத் தேவையான நிதியை உள்நாட்டு வங்கிகளே கடனாக வழங்கி உதவப்போகின்றன.

மீள்குடியேற்றம், அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுக்கு 436 கோடி உரூபாவும், சமூக சேவைகள் சமூக நலநோம்புகை அமைச்சுக்கு 83 கோடி உரூபாவும், இலங்கையிலுள்ள 50 இலட்சம் மாணவர்களின் கல்விக்கு 4,635 கோடி உரூபாவும், கிட்டத்தட்ட இரண்டு கோடி மக்களின் சுகாதாரத்திற்கு 5,779 கோடி உரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து சமூக அபிவிருத்திக்கான செலவுத் தொகையைக் கூட்டிப் பார்த்தாலும் பாதுகாப்புச் செலவினத்திற்கு கிட்டக் கூடச் செல்ல முடியவில்லை. இதுவே மக்களைச் சிந்திக்க வைக்கப் போதுமான சான்றாகும்.

### தமிழ்மக்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும்.

இலங்கை அரசு தமிழ்மக்கள் மீது முழுமையாக யுத்தத்தை திணித்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் தீவிரப்படுத்துவதற்கு தேவையான நிதியைத் தேடி அலைகின்றது. இந்நிலையில் அவர்களுக்கு ஓரளவுக்கு கைகொடுப்பது அத்தியாவசியப் பொருட்கள் சேவைகள் மீது விதித்துப் பெறப்படும் தொகையாகும். இத்தொகையைக் கொண்டு ஒருபகுதியை ஈடுசெய்வார்கள். பொய்ப் பரப்புரைகள் செய்து வெளிநாடுகளை ஏமாற்றி வெளிநாட்டுக் கடன்களைப் பெற முயற்சிப்பார்கள். ஆயினும் இவை ஓரளவு கைகொடுத்தாலும் இறுதியாக அரசுக்கு பெரியளவில் கைகொடுப்பது உள்நாட்டு வங்கிக் கடன்களாகும். எனவே தமிழ்மக்களாகிய நாம் சிறிலங்கா அரசின் ஆளுகையிலுள்ள வைப்பகங்களிலுள்ள எமது வைப்புக்களை மீளப்பெறுவதுடன், அங்கு தொடர்ச்சியாக வைப்பிடுவதனைத் தவிர்த்து தேசத்தின் அழிவுக்கு துணைபோகாது எமது தமிழீழ ஆளுகைக்குட்பட்ட வைப்பகங்களில் வைப்பிடுவதன் ஊடாக தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு கைகொடுப்போமாக.

பாலகிருஷ்ணன்
பொருளாதார ஆய்வாளர்,
தமிழீழம்

# அவளது கேள்விகளும் நான் முயலும் பதில்களும்

ந.அழகன்



முன்னிரவு பிறை நுதல்
எள்ளுப்பூ நாசி
விடைத்த பெருங்காது - சிரிக்கும்
குவளை விழிகள்
பஞ்சுப் பொதி போல
உள்ளங்கை
மாதுளை முத்துப் பல்வரிசை
அலங்கரித்தால்
அவள் ஒரு குட்டித் தேவதை.
பார்த்த சிறு கணத்தில்
ஒட்டிக் கொண்டு விடும் பிணைப்பு.

முன்னொரு நாள் புத்தகப்பையோடு
வீதியில் கண்டேன்.
மறுநாள் நாளிதழ் வாங்கும்
கடையில் கண்டேன்.

"பிள்ளைக்குப் பெயரென்ன?"
"பூங்குழலி"
"வகுப்பென்ன?"
"தரம் ஒன்று"
"எங்கே உன் வீடு?"
"பக்கத்துக் குடியிருப்பு"
ஒற்றைவரிப் பதிலுறுப்பு
யாரோ ஒரு சிறுமி
அழைப்பு விடச்
சிட்டாய் ஓடிப் பறந்தாள்.

மறுமுறை கண்ட பொழுது
மீதிக் கணை விடுத்தேன்.
"அப்பா பெயரென்ன?"
"வேலையென்ன?"
"எத்தனை சோதரர்கள்?"
கேள்வி பல பதில் சில
முல்லைப் புன்னகையால்

"ஒரு நாள் வீட்டுக்கு வாருங்கள்"
அழைப்பு விடுத்தாள்.
களத்துக் காயம் மெல்ல ஆறிய
ஒரு பொழுது
குட்டித் தேவதையின்
மாளிகைக்கு சென்றேன்.
சிறியதெனினும் சீராய் இருந்தது.
எளிமை யென்றாலும்
அழகாய் மிளிர்ந்தது.
ஓடி வரவேற்று உபசரித்துப்
பாட்டுப் பாடி
நாட்டியமாடி - அவள்
மகிழ்வுற்ற பின் கேட்டேன்,
"அப்பா எங்கே?"

உள்ளறைக்குள் கூட்டிச் சென்றாள்
காட்டினாள்
கடவுள் படத்துக்கருகே
சிரித்துக் கொண்டு இருந்தார்
அவள் அப்பா.
கீழே 'வீரவணக்கம்'

மீதிக் கேள்விகள் பயனற்றுப் போயின.
இப்போது அவள் தொடங்கினாள்,
தாய் சொல்லாமல் மறைத்த பலவற்றை
என்னிடமிருந்து பெயர்க்க முற்பட்டாள்.
எப்படி மடிந்தார்?
காயம் எங்கெங்கே?
எப்போது எழுவார்?
எப்போது வருவார்?
பதில் சொல்ல மறுத்தேன்.
பேச மறந்தேன்.
கொண்டு சென்ற இனிப்புப் பொதியை
திசை திருப்பி அவளிடம் கொடுத்தேன்.
பேச்சை மாற்றினேன்.

வெளியே பனித்த விழியோடு
தாய் நின்றாள்.
கனத்த மனத்தோடு வெளிவந்தேன்.
இன்னமும் தீர்க்கப்படாத
பலப்பல கேள்விகளோடு
வாசலில் அவள் நின்றாள்.
பதில்கள் தேடிவர - நான்
புறப்பட்டு விட்டேன்.
தோளில் கனக்கவில்லை துப்பாக்கி
கனத்த மனத்தோடு களம் நோக்கி...

கடுகிப் பெற வேண்டும் விடுதலை - நான்
... வந்து








ஒளியின் கண்ணீரும்








சிங்களத்தின் கோழைத்தனமான
வான்குண்டுத் தாக்குதலில் தாக்கியழிக்கப்பட்ட
புலிகளின் குரல் வானொலி நிலையம்




சிறி. இந்திரகுமார்

## ஓயாத அலைகள் - 02 இல் வீழ்ந்த - கிளிநொச்சிப் படைத்தளம்


# ஒரு நவீனகால கோட்டை

கிளிநொச்சிப் படைத்தளம் 1998 இல் புலிகள் இயக்கம் மேற்கொண்ட ஓயாத அலைகள்- 02 நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது. சிறிலங்காப் படைத்துறையின் 54ஆவது டிவிசன் படையணியின் 543 ஆவது பிரிகேட் இங்கு அப்போது நிலை கொண்டிருந்தது. இந்தக் கிளிநொச்சிப் படைத்தளமானது கிளிநொச்சி - பரந்தன் - ஆனையிறவு - வெற்றிலைக்கேணி படைக் கூட்டுத்தளமாக அகல விரிந்து கிடந்தது. யாழ்ப்பாணம் முதல் கிளிநொச்சி வரை கால்களை நீட்ட முடிகிறது என்ற மமதையில் சிங்களப் படைத்துறை அதன் படைத்துறைத் தேவை கருதி அதனை நன்கு பலப்படுத்தியும் வைத்திருந்தது. இந்த நிலையில் ஓயாத அலைகள் - 02 நடவடிக்கை மூலம் புலிப் பாய்ச்சலுக்குள்ளான கிளிநொச்சிப் படைத்தளத்தின் கட்டமைப்பையும் அதன் படை நிலைப்படுத்தலையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இப்போது நோக்கினால் கிளிநொச்சிப் படைத்தளம் எந்தளவு தூரம் சிறிலங்காப் படைத்துறையின் பலமான படைத்தளமாக இருந்ததென்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்தக் கிளிநொச்சி படைத்தளத்தின் இருப்பாகச் சிங்களப்படைத்துறை மேலாளர்கள் அதன் பெரும் வளத்தை இங்கு முதலீடு செய்திருந்தனர். ஏறத்தாள கிளிநொச்சிப் படைத்தளத்தின் அமைப்பு முறையானது ஒரு நவீன கோட்டை போன்றே உருவாக்கப்பட்டிருந்தது. ஆரம்பகால பாதுகாப்புக் கோட்டைகளின் அமைப்பில் நான்கு அடிப்படை அம்சங்கள் செல்வாக்குச் செலுத்தும். கோட்டையின் அமைவிடம், கோட்டையின் பாதுகாப்பு, கோட்டையின் காவல் ஏற்பாடு, கோட்டையின் கொடி என்ற வகையில் அதன் அடிப்படை அம்சங்கள் காணப்படும். இந்தப் பழங்காலக் கோட்டையிலிருந்து மாறுபட்டு அதேவேளை அந்தப் பழைய கோட்டைகளின் அடிப்படை அம்சங்களை மேலும் விரிவுபடுத்தியும், நவீன மயப்படுத்தியும் தற்காலப் பாதுகாப்பு அரண்களைக் கவனத்திற் கொண்டு கிளிநொச்சிப் படைத்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

அதாவது பழங்காலக் கோட்டையின் அமைவிடமானது கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்க்கக்கூடிய ஒரு மேட்டு நிலப்பரப்பொன்றில் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். ஆனால் கிளிநொச்சிப் படைத்தளத்தின் அமைவிடமானது வன்னியின் இயற்கையான புவியியல் அமைப்பின் அத்தனை சாதகமான அம்சங்களையும் கொண்ட ஒரு பெரும் நிலத்தொடரிலே அமைக்கப்பட்டிருந்தது. அதாவது கிளிநொச்சியைச் சூழவிருந்த வயல்களும் - குளங்களும் - கட்டடங்களும் அதன் அமைவிடத்திற்குப் பெரும் சாதகமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி படைத்தளத்திலிருந்து கொண்டு அதன் சூழலை நன்கு அவதானிக்கத் தக்க வகையில் அந்தப் படைத்தளம் அமைக்கப்பட்டிருந்தது. இதே போன்று பழங்காலக் கோட்டைகளின் பாதுகாப்பானது வலுவான சுவர்கள் மூலம் அதாவது முன்னணித் தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையிலான வலுவான சுவர்கள் மூலம் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கே கிளிநொச்சிப் படைத்தளத்தின் பாதுகாப்பானது மிக அதிகளவான படையினரைக் கொண்டு அகப்புறமும் வெளிப்புறமுமாக அடுக்கடுக்காக நான்கு வலயங்களைக் கொண்டதாகத் தற்காப்பு ஏற்பாடுகளைச் சிங்களப்படைத்துறை மேலாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. முதலாவது ஏற்பாடாக வெளித்தெரியாத வகையில் ஒரு கண்காணிப்பு ஏற்பாட்டை அன்று மேற்கொண்டிருந்தனர். இந்த ஏற்பாட்டுக்குள் கண்காணிப்பு நிலைகள் காவற்கோபுரங்கள் (இவை கண்ணுக்குத் தெரியாத வகையில் உருமறைப்புச் செய்யப்பட்டிருக்கும்.) நகரும் பதுங்கித் தாக்கும் அணிகள் - இவற்றோடு விதைக்கப்பட்ட எண்ணற்ற கண்ணிவெடிகள், பொறி வெடிகள் என்பன இந்த முதலாவது ஏற்பாட்டுக்குள் சிங்களப் படையினர் செய்து வைத்திருந்தனர். உண்மையில் இதன் நோக்கம் கிளிநொச்சிப்படைத்தளத்தின் முதன்மையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கூடப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படாமல் முறியடித்து விடுவதுடன் தளத்தை முன்னணியில் வைத்தே சிதைத்தெற வைத்து புலிகள் மீது சிங்களங்களை பாய்வைப்பதற்கான ஏற்பாடாகும். இவற்றைத் தாண்டினால் இரண்டாவது பாதுகாப்பு ஏற்பாட்டில் எத்துப்பட வேண்டும். இந்த இரண்டாவது பாதுகாப்பு ஏற்பாடு என்பது சுமார் இருபது சதுரகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட கிளிநொச்சி படைத்தளத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியாகும். அதாவது இராணுவச் செலவீனத்தில் கற்பனையாகாத செலவீனம் எனச் சுட்டப்படும் கம்பிவேலிகளே இவையாகும். இவற்றோடு அங்கு அமைக்கப்பட்டிருக்கும் முன்னணி பாதுகாப்பு காவலரண்களாகும். இந்தக் காவலரண்களானது 25 - 30 மீற்றருக்கு ஒன்று என்ற வகையில் தளத்தைச் சூழ 500க்கும் மேற்பட்ட காவலரண்களைக் கொண்டும் இந்தக் காவலரண்களுக்குப் பாதுகாப்பாக மண்ணணைகளும் முட்கம்பிச் சுருள்களாலும் கண்ணி வெடிகளாலும் பாதுகாக்கப்பட்டது. அடுத்த மூன்றாவது ஏற்பாடாகப் பலமான நிலைகளையும் வலிமையான ஏற்பாடுகளையும் கொண்ட உசார் நிலையில் இருக்கும் ஒருபகுதியாக இந்த மூன்றாவது ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த இதற்குள் தளத்தின் மினிமுகாம்கள் காணப்படும். இவ்வாறு கிளிநொச்சிப் படைத்தளத்தில் மொத்தமாக பதினாறுக்கும் மேற்பட்ட மினிமுகாம்கள் இருந்தன. இந்த மினிமுகாம்கள் சிறப்பு கொமாண்டோ அணிகளினதும் கொமாண்டோக்களினதும் தலைமையகங்களாக வேறு செயற்பட்டன. அடுத்து நான்காவது ஏற்பாடாக ஆழமான நிலைகளை அமைத்து கிளிநொச்சித் தளத்தின் பிரதான முகாம்கள் பாதுகாக்கப்பட்டன. அத்துடன் பற்றாலியன் தலைமையகம், கட்டளைமையம், ஆயுதக் களஞ்சியம், மோட்டார் ஏவுதளம், என்பவற்றைக் கொண்டதாக இந்த நான்காவது ஏற்பாடு இருந்தது. இவற்றைவிட தளத்திற்கு மேலதிக பாதுகாப்பு வகைதொகையின்றி ஏவக்கூடிய 120மி.மீ, 81 மி. மீ மோட்டார்களைக் கொண்டிருக்கும். அத்தோடு அப்போது இருந்த ஆனையிறவு இயக்கச்சித்தளப்பகுதியில் அமைந்திருந்த ஆட்லறித்தளத்திலிருந்து கிளிநொச்சி படைத்தளத்தில் நிலை கொண்டிருக்கும் சிங்களச் சிப்பாய்கள் விரும்பும் இடத்தில் விழுந்து வெடிக்கும் வகையில் ஆட்லறிச்சூட்டுவலுவும் தளத்தின உள்ளேயிருந்தும் பரந்தன் கிளிநொச்சிப் படைத்தளங்களிலிருந்து உறுமிக் கொண்டு வெளிவரக் கூடியதாக டாங்கி மற்றும் கவசவாகனங்களைக் கொண்ட கவசப்படையணியின் பாதுகாப்பும் கிளிநொச்சிப் படைத்தளத்திற்கு நம்பிக்கையூட்டும் சக்தியாக இருந்தது. அத்தோடு கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சில நிமிட நேரங்களில் கிளிநொச்சி படைத்தளத்தைச் சூழவுள்ள வான்பரப்பில் கிபிர் விமானங்கள் நுழைந்து தாக்கக்கூடியவசதி என்பனவும் கிளிநொச்சிப் படைத்தளத்திற்குள் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பாகவும் இருந்தது. இந்த வகையிலேயே கிளிநொச்சி படைத்தளத்தின் வலுவான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது நாம் மேற்கொண்ட பழங்காலக் கோட்டைகளில் கடைப்பிடிக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் போன்ற ஏற்பாட்டோடு ஒப்பீடு செய்ய முயல்வது உண்மையில் கிளிநொச்சி படைத்தளத்தின் பலத்தை குறைத்து மதிப்பிடுவதாகக் கூட அமைந்து விடலாம். ஆனால் படையப் பாதுகாப்பு ஏற்பாடு என்ற அடிப்படை அம்சத்தைத் தழுவிச் செய்யப்பட்ட நவீன ஏற்பாடாக இது அமைந்திருந்தது என்பது இதில் இருக்கும் ஒரு ஒற்றுமை. அடுத்து மூன்றாவதாகக் கோட்டைகளை பாதுகாப்பதில் ஈடுபடும் அரண்காவல் படையினரைப் போன்று கிளிநொச்சிப் படைத்தளத்தைப் பாதுகாப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட சிங்களப் படையணிகளும் அதிலடங்கிய படை வீரர்களுமாகும். சதா புலிவீரர்களை மட்டுமல்ல அப்பாவி ஏழை மக்களையும் கொல்வதில் பெரும் விருப்பம் கொண்டு விசை வில்லில் கைவிரலும் தேடும் விழிகளோடும் நிலைகொண்டிருந்த சிங்களப் படைச் சிப்பாய்கள். இதில் கிளிநொச்சிப் படைத்தளத்தை அரண்காவல் செய்வதற்காகச் சிங்களப் படைத்துறையில் நன்கு சண்டையனுபவம் கொண்ட நான்கு பற்றாலியன் துருப்புக்களைக் கொண்ட ஒரு பிரிகேட் படையினர் பயன்படுத்தப்பட்டனர். ஒருபற்றாலியன் என்கின்ற போது ஒருபிரிகேடியர் தலைமையில் அதாவது கிளிநொச்சிப் படைத்தளம் பிரிகேடியர் உடாலி எதிரிசிங்க தலைமையில் நிர்வகிக்கப்பட்டது. இவரின் பணிப்பின் கீழ் சிறிலங்காவில் 10 ஆவது சிங்றெஜிமென்ற் ஆறாம் வாய்க்கால் பகுதியை மையமாகக் கொண்டும் நான்காவது சிங்றெஜிமென்ற் கணேசபுரம் பகுதியை மையமாகக்கொண்டும் ஆறாவது கெமுனுவோச் நெடுஞ்சாலைப்பகுதியிலும், ஏழாவது கெமுனுவோச் திருவையாற்றுப்பகுதியை மையமாகக் கொண்டும் நிலை நிறுத்தப்பட்டிருந்தது. கிளிநொச்சி படைத்தளத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட இந்த நான்கு பற்றாலியன்களாகவே காணப்பட்டன. இத்தகைய ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்ததோடு யாராலும் நெருங்கவே முடியாது என்ற இறுமாப்போடு இந்த நவீனகால கோட்டையாகக் கிளிநொச்சிப்படைத்தளத்தின் மையப்பகுதியில் தனது சிங்கக் கொடியை காற்றில் பறக்கவிட்டிருந்தது சிறிலங்கா அரசு. சிங்களத்தின் ராஜாக்களை வீழ்த்தி கொடி குடி பறித்தவர் கொடி அறுத்துப்புலிக்கொடி ஏற்றும் தந்திரத்தைத் தலைவர் பிரபாகரன் வகுத்தார். சிங்களத்துப்படைகளுக்கு எதிராகப் புலிப்படையின் படையணிகளை எதிர்வியூகமிட்டு நகர்த்தினார். கிளிநொச்சி படைத்தளத்தை ஏறத்தாழ பதின்மூன்று பாதைகளால் உடைத்தெறிந்து உள்நுழையும் ஒரு வியூகத்தை வரைந்து படைகளை நகர்த்தினார் தலைவர். அத்தோடு ஒரு அதிர்ச்சியூட்டும் ஊடறுப்புத் தாக்குதல்கள் ஒன்றையும் நிகழ்த்தினார். சுமார் முப்பத்தொன்பது மணிநேரக்கடும் சமர் எதிரியின் ஒவ்வொரு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தகர்த்தெறிந்து உள்நுழைந்தன தமிழர் படையணிகள். இறுதியில் தளத்தின் ஒவ்வொரு பகுதியும் புலிகளின் துல்லியப் பாய்ச்சலுக்குள் வீழ்ந்தன நவீனகாலக் கோட்டையையும் கைவிட்டுத் தனது கொடியையும் கைவிட்டு பிச்சை வேண்டாம் நாயைப்பிடியென எடுத்தன சிங்களத்தின் படைகள் ஓட்டம். சுமார் இரண்டாயிரம் படையினர் வரை நிலை கொண்டிருந்த இந்தப் படைத்தளத்திலிருந்த 1250க்கும் மேற்பட்ட படைச்சிப்பாய்களைக் கொன்று பலகோடி பெறுமதியான ஆயுத தளபாடத்தையும் புலிப்படை கைப்பற்றிக் கொண்டது நவீனகாலக் கோட்டைகளை வீழ்த்தும் நவீன போர்த்திட்டத்தைத் திறம்பட வகுத்த தலைவர் சிங்களத்தின் சிங்கக்கொடியைச் சிறைப்பிடித்து தமிழர் புலிக்கொடியை வானில்

**நவீனகாலக் கோட்டைகளை வீழ்த்தும் நவீன போர்த்திட்டத்தைத் திறம்பட வகுத்த தலைவர் சிங்களத்தின் சிங்கக்கொடியைச் சிறைப்பிடித்து தமிழர் புலிக்கொடியை வானில் சுதந்திரமாய் பறக்கவிட்டார்.**





நினைவுப்பதிவு

# எதிரிக்கு மரண பயத்தைக் கொடுத்த அடி

கிளிநொச்சி படைத்தளத்தை வீழ்த்தும் வியூகத்தை அமைத்திருந்த தேசியத்தலைவர் அவர்கள் முன்பொருபோதும் இல்லாத வகையில் அத்தாக்குதலின் போது 'ஒரு ஊடறுப்புத் தாக்குதல்' உத்தியொன்றை வகுத்திருந்தார். புலிகள் இயக்கத்தின் பல்வேறு படையணிகளும் கிளிநொச்சி படைத்தளத்தை வீழ்த்த பொருதிக் கொண்டிருக்கும் அதேவேளை அன்று புலிகள் கிளிநொச்சி படைத்தளத்தை 'வெட்டிபெடுக்கப்பட்ட கேக்துண்டு' என வர்ணித்தது போல அந்தக் கிளிநொச்சி படைத்தளக் கேக் துண்டை ஆனையிறவு பரந்தன் படைத்

குவி நிலை கொண்டதன மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே அது.

கிளிநொச்சி படைத்தள வெற்றிக்கு பெரும்பாலும் வலுச்சேர்த்த அந்த ஊடறுப்புத் தாக்குதல் குறித்து அதில் பங்குபற்றிய போராளிகள் பின்வருமாறு நினைவு கூறுகின்றனர். ஓயாத அலைகள் 02 இல் கிளிநொச்சிப் படைத்தளத்தை வீழ்த்த தலைவர் அவர்கள் வகுத்த மிகச் சிறப்பானதொரு உத்தி அது. ஏனெனில் இவ்வுத்தியானது ஊடறுத்து எதிரிக்கு ஒரு மின்னல் வேகத் தாக்குதலை மேற்கொள்வது மட்டுமல்ல பணி

தளத்தை வேறாகவும் ஆனையிறவு - பரந்தன் படைத்தளத்தை இன்னொரு துண்டாகவும் பேணும் நடவடிக்கை. இதற்காக நாம் எதிரியின் பகுதிக்குள்ளே ஊடுருவித் தாக்குதலை மேற்கொள்வதோடு அங்கு ஒருபலமான நிலையை அமைக்க எதிரிக்கு எதிராக ஒரு தற்காப்புத் தாக்குதலையும் நடத்த வேண்டுமென்பதே அந்த உத்தி.

இதன்படி பரந்தன் தளத்திலிருந்து கிளிநொச்சி படைத்தளத்துக்கான சகல வளங்களையும் தடுத்து அவனை அநாதரவாக்குவதன் மூலம் எதிரிக்கு மரணபயத்தை ஏற்படுத்தும் உத்தியைத் தலைவர் வகுத்திருந்



டித் தெளிவுபடுத்திய போதுகூடத் தெரியவில்லை. ஆனால் சண்டை தொடங்கி எதிரியோடு சண்டை செய்து கொண்டிருந்த போதும் கிளிநொச்சித் தளத்திலிருக்கும் பெரும் தொகையினர் ஓடிவர வர நாங்கள் வீழ்த்தியபோதும் மிகச்சிறந்ததொரு சண்டைக் களத்தை அங்கு அவர் ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை நாம புரிந்து கொண்டோம். நாங்கள் சண்டை பிடிக்கும் போது உணர்ந்த தாற்பரியத்தை அவர் எம்மைச் சண்டைக்கு அனுப்பும் போதே உணர்ந்திருந்தார் என்பதை நாம் அங்கு உணர்ந்து கொண்டோம். தப்பி ஓடிவந்த படையினரை மிக அதிகளவில் கொன்று குவித்த போதும் நாம் அதனைப்புரிந்து கொண்டோம். இந்தத் தாக்குதலுக்காக தலைவர், தளபதி பால்ராஜ் தலைமையில் குறிப்பிட்டளவு போராளிகளை ஈடுபடுத்தினார். 27 ஆம் திகதி எதிரியின் பகுதியை ஊடறுத்து நிலைகொண்டிருந்த எமது அணிகளை நோக்கி காலையில் சிறியளவில் பரந்தனிலிருந்து எந்த படையி

மேற்கொண்டான். அந்த முயற்சியும் முறியடிக்கப்படவே 28 ஆம் திகதி காலையில் ஒரு பெரும் நகர்வு முயற்சியை மேற்கொண்டான். காலையில் தொடங்கிய சண்டை பிற்பகல் தாண்டியும் தொடர்ந்தது. அந்த மோதலில் ஒரு துருப்புக்காவி எமது போராளிகளின் தாக்குதலில் தீப்பற்றி எரிய தாக்குதலுக்குள்ளான இன்னுமொரு டாங்கியை இழுத்துக் கொண்டு எதிரி ஓடித் தப்பினான். இந்தத்தாக்குதலில் எதிரியின் ஏராளமான உடல்கள் அங்கு சிதறிக் கிடந்தன. அதன் பின்னர் இரவு ஒரு தாக்குதல் நடந்தது. அதற்குப் பின்னர் 29 ஆம் திகதி பரந்தனிலிருந்து எந்த விலைகொடுத்

> எந்தவொரு பலத்துக்குள்ளும் ஒருபலவீனம் இருக்கும். தேடிக் கண்டு பிடித்து அதன் மூலம் தாக்குதலை மேற்கொண்டால் வெற்றி நிச்சயம் எண்டு தலைவர் சொன்னதோட மட்டும் நிற்கேயில்ல அதை ஓயாத அலைகள் - 02 நடவடிக்கையில் தலைவர் ஒவ்வொரு போராளியும் கள அனுபவமாகக் கற்றுக்கொள்ள ஒரு போரியல் பாடத்தையே அங்கு எமக்கு கற்க ஏற்பாடு செய்திருந்தார்.

தேனும் கிளிநொச்சிப் படைத்தளத்தோடு இணைப்பை ஏற்படுத்திவிட எதிரி ஒரு பெரும் சண்டையைத் தனது முழுப்பலத்தையும் திரட்டி எமக்கெதிராகத் தொடுத்தான். எமது கிட்டுப் பீரங்கிப் படையணியின் துல்லியமான எறிகணைத்தாக்குதலின் துணையோடு நாம் எதிர்த்தாக்குதலைத் தொடுத்த போது இனிமுடியவே முடியாது என எதிரி தனது முயற்சியைக் கைவிட்டான். அந்தத் தோல்வியோடு கிளிநொச்சிப் படைத்தளத்திற்கு எந்த உதவிகளையும் செய்ய முடியாது என்பதைப் பரந்தன் படைத்தலைமையும் - எந்த உதவிகளும் வந்து சேரப் போவதில்லை என்பதைக் கிளிநொச்சிப் படைத்தளத்தில் நிலைகொண்டிருந்த படையினரும் உணர்ந்து கொண்டனர். அத்தோடு எல்லா முனைகளாலும் எமது அணிகள் முன்னேறி கிளிநொச்சிப் படைத்தளத்தின் பிரதான முகாமின் கழுத்தை நெருங்கத் தொடங்கத் தப்பி ஓடுவதைத் தவிர வேறு எந்த வழியும் கிளிநொச்சிப்

பின்னேரம் பார்த்திருக்கோணும் சிங்களப் படைகள் பட்ட பாட்டை. கிளிநொச்சிப் படைத்தளத்திலிருந்து ஓடவெளிக் கிட்டவர்கள் பிரதான வீதிக்கு இடதுபக்கமாகப் பிரதான பாதைக்கும் றெயில் றோட்டுக்கும் இடையே ஓடிவந்த பெரும்படை முட்டிமோதி விழுந்து ஓடிவந்த காட்சியை இருந்த இடத்திலையும் அடி, கிளிநொச்சித் தளத்தின் வெளிப்புறத்திலும் அடி, பரந்தனுக்கு நுழைய வேண்டிய அதாவது நாங்கள் ஊடறுத்து நின்ற பகுதியிலும் அடியென அவன் படாதபாடு அத்தனையையும் பட்டான். சுடச்சுட அவங்களும் ஓடிவாறாங்கள். எவ்வளவு பேர் ஐயோ அதை வார்த்தைகளால வர்ணிக்க முடியாது. அனல்பறக்கும் சண்டையது. ஓடிவந்தவர்கள் வந்தபாதை நீளத்துக்கும் பிணங்களாக விழுந்து கிடக்க எஞ்சினவங்கள் ஓடிவரச் சண்டை ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒவ்வொரு வடிவத்தை எடுத்தது. முதலில் துப்பாக்கிச் சண்டை, சிலமணிநேரமும் அடுத்தடுத்து கைக்குண்டுத் தாக்குதலும் கைகலப்புச் சண்டையும் என சண்டையின் உக்கிரம் மாறிக் கொண்டிருந்தது. அதோட அவங்களுக்கு மேலேயே கிட்டுப் பீரங்கிப் படையணியின்ர எறிகணை வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தது. அதுபார்க்க போராடுவதற்காகப் படையினர் சாவது என்றில்லாமல் தப்பிஓடுவதற்காக சாவதாகவே இருந்தது. சண்டை முடிய அவன் ஓடிவந்த இடத்தை நாங்கள் பார்க்க வழிநெடுகிலும் படையினரின் சடலங்கள் நிறைந்து போய்க்கிடந்தது என்கிறார்கள் அந்த வீரர்கள். நாங்கள் அந்தச் சண்டைக்கு முதலும் பல சண்டைகளைப் பார்த்திருக்கிறம். அதுக்குப் பிறகும் நாங்கள் நிறையச் சண்டைகளைப் பார்த்திருக்கிறம். ஆனால் அந்தச் சண்டைகளைப் போல ஒரு சண்டையை இன்னும் நாங்கள் காணேல்ல என்றுதான் நினைக்கிறன். ஏனென்டா அந்தச் சண்டையில எதிரிக்கு மரணபயம் என்றால் என்ன என்பதைப் புகட்டிய தலைவர் எங்களுக்கு எதிரிக்குள் இருக்கும் பலவீனம் எப்படியானது என்பதை எங்களுக்கும் புரிய வைத்தார். எந்தவொரு பலத்துக்குள்ளும் ஒருபலவீனம் இருக்கும். தேடிக் கண்டு பிடித்து அதன் மூலம் தாக்குதலை மேற்கொண்டால் வெற்றி நிச்சயம் என்று தலைவர் சொன்னதோட மட்டும் நிற்கேயில்ல அதை ஓயாத அலைகள் - 02 நடவடிக்கையில் தலைவர் ஒவ்வொரு போராளியும் கள அனுபவமாகக் கற்றுக்கொள்ள ஒரு போரியல் பாடத்தையே அங்கு எமக்கு கற்க ஏற்பாடு செய்திருந்தார் என்றுதான் நாங்கள் சொல்லுவம் என்கிறார்கள் அந்தப் போராளிகள். அந்தக் களமுனையில் நிறையச் சாதித்த பெருமிதத்தோடு அந்தப் போராளிகள்.

■

வேழினி

# வென்றவர் நினைவு
# மெய்சிலிர்க்கும் காவியம்! ...

# வரச்சொன்னோம் ஆனால் வரமறுத்தான் ...

'விலைகொடுத்து வாங்குவதல்ல
விடுதலை விலை மதிப்பில்லாத
உயிர் கொடுத்து வாங்குவதே
விடுதலை'

என்று களத்தில் என்றோ விழ்ந்துவிட்ட ஒரு போராளி தன்னுடைய நாட்குறிப்பில் எழுதிவிட்டுப் போனது எத்தனை நியமானது. தமிழீழ விடுதலைக்காக ஒவ்வொரு களத்திலும் வீழும் வீரர்களின்... வீராங்கனைகளின் உயிர்கள் எத்தனை பெறமதியானவை... சுற்றிவளைத்து கிளிநொச்சியை முற்றுகையிட்டு இறுமாந்திருந்த சிங்களத்தின் நான்கு பற்றாலியன் துருப்புக்களை விரட்டியடித்த ஓயாத அலைகள் - 02 இராணுவ நடவடிக்கையின் போது எண்ணற்ற வீரகாவியங்களைத் தங்கள் குருதிகளால் கிளிநொச்சியில் வரைந்து விட்ட தோழர்களின்... தோழிகளின் மெய்சிலிர்க்க வைக்கும் தியாகங்களிருக்கிறதே அவை ஒவ்வொன்றுமே கிளிநொச்சிக்காக நாம் கொடுத்த விலையைச் சொல்லும். 'விலைகொடுத்து வாங்குவதல்ல விடுதலை விலை மதிப்பில்லாத உயிர் கொடுத்து வாங்குவதே விடுதலை' என்பதை மீண்டும் மீண்டும் சொல்லும் 'டெல்ட்டாவன்' என்ற படையச் சங்கேதப் பெயரிட்டு போராளிகள் அன்ற அழைத்த உருத்திரபுரம் வீதியை உற்று நோக்கினால் அங்கே கிளிநொச்சி மீட்புச் சமரில் பெண் போராளிகள் எழுதிய மெய்சிலிர்க்கும் வீரகாவியம் மனதை புல்லரிக்க வைக்கும். டிங் டிங் என மணியொலிக்க கொள்ளைச் சிரிப்புடன் துள்ளிப்பாய்ந்து வரும் டிசெவன் பள்ளிக்கூட வெள்ளைச் சீருடை சிறுசுகளின் பாதங்களின் கீழே ஒரு வீரக்கதை புதைந்து கிடக்கிறது.

பாதிக்கறுப்பும் மீதி சிவப்புமாய் உருத்திரபுரத்திலிருந்து கரடிப்போக்குச் சந்திவரை நீண்டு கிடக்கிறதே அந்த வீதி. அதற்குள் எத்தனை வித்துக்கள் அன்று விழ்ந்து போயின அப்படியே இடதும் வலதுமாய் இன்று உழுது கிடக்கிறதே அந்த விதைக்க வேண்டிய வயல்கள். அந்த வரம்புகளிடையேதான் தங்கள் குருதி நீரை அள்ளித் தெளித்தார்கள் அன்று. இங்கே கையளைந்து தேடிப்பாருங்கள் அங்கே ஊறிக்கிடக்கும் வீரம் தெரியும். எல்லாம் எதற்காக? எல்லாம் யாருக்காக? அதோ டிங் டிங் என மணியடிக்க முண்டியடித்து ஓடி வருகிறார்களே அந்த கிளிநொச்சி இந்துக்கல்லூரிச் சிறுசுகளின் இந்தச் சிரிப்புக்கும் அதோ வயலுக்குப் போகும் சோதியண்ணரும் சந்தைக்குப் போகும் மீனாட்சியக்காவும் அலுவலகத்துக்குப் போகும் சாந்தினியும் கோவிலுக்குப் போறதாய்ச் சொல்லிவிட்டு கள்ளுக்கடைப் பக்கம் எட்டிப்பார்க்கும் பரஞ்சோதி அண்ணரும் இப்படிச் சுதந்திரமாய் போவதற்காகவே.... ஆனால் அந்தப் பாதை வழியே விரையும் எங்கள் போராளிகளின் முகம் பாருங்கள் அது இறுகிக் கிடக்கும்.... உங்களைக் கடந்து போகும் பெண் போராளிகளைக் கேளுங்கள் விழி வழியும் நீர் துடைத்து ஒரு கணம் நெஞ்சார தங்கள் தோழிகளை அவர்கள் நினைத்தபடி நிற்பார்கள். ஏன் ? ஏன்? எதற்காக? அவர்களுக்குத் தெரியும் இந்த வீதியைப் பிடிக்க எத்தனை பிள்ளைகள் இங்கே விழ்ந்தார்கள் என்பது. அவர்களுக்குத் தெரியும் தாங்கள் பிடிப்பதும் பின்னர் அவன் பறிப்பதுமாய் எத்தனை தடவை [illegible]ாம் என்பது

எல்லாவற்றிற்கும் மேலாய் அவர்களுக்குத் தெரியும் இங்கே தான் கடைசி வரை வரச்சொல்லியும் வரமாட்டேன் எனச் சொல்லியபடியே அடுக்கடுக்காய் கனிபாவும் அவள் தோழிகளும் தங்கள் உயிர் கொடுத்து விழ்ந்துபோனார்கள் என்பது. அது எத்தனை பெரியமோதல் இங்கே எத்தனை பெரிய முயற்சி இங்கே எத்தனை பெரியதியாகம் அன்று நிகழ்ந்தது. இன்று எல்லாமே மாறிவிட்டது பகைவன் விதைத்து விட்டிருந்த கண்ணிவெடிகளையும் பொறி வெடிகளையும் எடுத்தாயிற்று தடுத்து நிறுத்தும் கம்பி வேலிகள் அகற்றியாச்சு முன்னே போகமுடியாது தடுக்கும் மண்அணைகள் இடித்தாயிற்று ஆனால் இன்னமும் அவர்களின் மனங்களில் அப்படியே அழியாது இருக்கிறது அந்த இனிய தோழிகளின்.... தோழர்களின் நினைவுகள் மட்டும். ஆம் 1998 செப்ரெம்பர் 26 நள்ளிரவு லெப்.கேணல் கனிபாவின் தலைமையிலான அணி தாக்குதலுக்காய் இவ்வழியே நகர்ந்தது கொண்டிருந்தது அடிக்கடி இரையும் வோக்கியில் தளபதி விதுஷா, கனிபாவினதும் அவள் தோழிகளினதும் நகர்வை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார். எல்லாம் சரி ஒழுங்காக நடந்து கொண்டிருப்பது மனதுக்கு திருப்தியாய் இருந்தது நீண்ட வயல்வெளியில் பின்னலாய் நெளியும் அந்த முட்கம்பி வேலிகளை அந்தத் தோழிகள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். எந்தப்பிசகும் இல்லை. கம்பி வேலினை நெருங்கும் வேளை கும் கும் என வந்து விழ்ந்து வெடித்தன எதிரி ஏவிய கணைகள் கண்டு விட்டானோ எனமனம் ஒருகணம் நினைத்தபோதும் பலர்



காயமடைந்த போதும் சீ.... இருக்காது என நினைத்தபடி எழுந்திருக்காமலே முன்னேறினர் அத்தோழிகள். முன்னேறியவர்கள் முன்னிருந்த தடைகளைத் தகர்த்து மோதத்தொடங்க சூடு கிளம்பியது அந்தக்களம். எல்லாம் நல்லபடியாய் நடக்கிறது என்ற உற்சாகமான கனிபாவின் குரல் கணீரென வந்து வந்து மோதியது வானலையில். வலது பக்கமாய் அடுக்கடுக்காய்க் காவலரண்களையும் பகைவர்களையும் வீழ்த்தி முன்னேறினர் கனிபாவும் தோழிகளும் பகைவனின் முன்னணித் தளமொன்றின் மீதே எங்கள் தோழிகள் மோதிக் கொண்டிருந்தனர். அதனால் பகைவனும் மூர்க்கமாகவே மோதிக் கொண்டிருந்தான். ஆயினும் அந்தப் பகுதியில் முழுமைபெறாத வேவு நடவடிக்கையால் அன்று கண்ணுக்குப் புலப்படாத பல பாதுகாப்பான அரண்களிலிருந்து பகைவன் கடுமையாக மோதிக் கொண்டிருந்தான். கனிபாவும் , தோழிகளும் அரண்களைப் பிடிப்பதும் அதை எதிர்த்து பகைவன் பொருதுவதுமாய் அந்தக களம் பெருங்களமாகியது அதை மீளவும் பிடித்து விடுவதற்காக தோழிகள் மோதிக்கொண்டும் விழ்ந்துகொண்டுமிருந்ததால் களம் இடறிகொண்டிருந்தது. ஆயினும் கனிபாவும் தோழிகளும் நம்பிக்கை இழக்கவேயில்லை. உருத்திரபுரம் ஒரு உறுதியான போர்க்களமாகி நின்றது. அந்த நள்ளிரவு பிடிக்க வேண்டிய அரண்களும் முன்னேற வேண்டிய தூரமும் கண்முன்னே நீண்டு கிடக்க கனிபாவின் தோழிகள் பலர் அந்த வயல் வெளிகளில் விதையாகிக் கிடந்தனர். பிடித்த அரண்களைத் தக்க வைக்கவும் பிடிக்க வேண்டிய அரண்களைப் பிடிக்கவும் அணிகள் விரைந்த போதும் அந்தக்களம் கைநழுவியே நின்றது. நேரம் செல்லச் செல்ல அக்களம் எங்கள் இனியதோழிகளின் உயிர்களை விழுங்கியபடி விழமறுத்தது. கனிபாவையும் சில போராளிகளையும் தவிர எல்லோரையுமே அந்தக் களம்



ஓயாத அலைகள் - 02
நடவடிக்கையின் போது புலிகள்

கனிபாவும் அவள் தோழிகளும் மோதினர் களத்தின் நிலையறிந்து தளபதி விதுசா கனிபாவைப் பின்னுக்கு வருமாறு பணித்தபோதும் அவள் வரமறுத்தாள். விழமறுக்கும் களம் விழ்ந்துவிட தன்னினிய தோழிகள் தன்னை நம்பி ஒப்படைத்த கடமை கனிபாவின் கண்முன்னே விரித்து [illegible] அவள் மறுத்தாள். இறுதிவரை [illegible]

மோதியவள் தன்னை நெருங்கிக் கொண்டிருந்த பகைவர்களைத் தாக்கியபடியே உறுதியோடு இறுதிவிடை பெற்றாள் அந்தக் களத்திலே. டிங் டிங் கொள்ளைச் சிரிப்பொலியும் கிணு கிணுக்கும் காற்சிலம்பொலியும் பள்ளிப்பையோடு வருகிறார்களே அந்தச்சின்னஞ்சிறுசுகள் அவர்களுக்காகவே அவர்கள் இங்கே [illegible]

# உயிரை எடுக்காதவன் காலைப்பறித்தான்

## தப்பி வந்தவரின் சாட்சியம்



கிளிநொச்சியில் ஆமி நிக்கேக்க அதுவொரு கொலை வலயம். ஏதோ நாங்கள் தப்பிப் பிழைச்சிட்டம். ஆனால் எத்தின பேரை வெட்டியெறிஞ்சவங்கள். சுட்டுக் கொண்டவங்கள். நினைச்சுப் பார்க்கவே மனசெல்லாம் நடுங்குது என்கிறார் கரடிப்போக்கு உபதபாலதிபர் இராஜரட்ணம். திருவையாறில் இருக்கும் அவரது வீட்டைப் பார்ப்பதற்குச் சென்ற போது சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட அவர் அந்தத் திகில் அனுபவத்தை இப்படி விபரிக்கிறார்.

அதுவொரு சனிக்கிழமை. அத்தோடு அதுவொரு ஆடி அமாவாசை விரதக் கடைசிநாள்.

கிளிநொச்சியை ஆமி பிடிச்சதால திருவையாற்றிலிருந்த எங்கட காணியை வீட்டைக் கைவிட்டு வன்னேரியில குடிசையில் அப்ப வாழ்ந்து வந்தம். சம்பவம் நடந்த அன்று அமாவாசை விரதநாளும் அன்று ஒரு யுத்தநிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டதாலும் ஏற்பட்ட துணிவில நானும் சாம்பசிவம் அண்ணையும் எங்கட காணியைப் பார்த்து அங்க இருக்கிற தேங்காயையும் முருங்கக்காயும் பிடுங்கிக் கொண்டு வருவம் என்டு வெளிக்கிட்டம். அப்ப அந்த நேரம் வன்னேரியில ஒருதேங்காய் நாற்பது ரூபா. சரியான கஸ்ரம். சரியென்டு வெளிக்கிட்டால் வன்னேரியிலிருந்து வெளிக்கிட்டு அப்படியே முறிகண்டிக்கு வந்து பிள்ளையாரைக் கும்பிட்டுப் போட்டு இரணைமடுச் சந்திக்கு வந்து சேர்ந்தம். அங்கேயிருந்து அப்படியே கனகாம்பிகைக் கோவிலடிக்குப் போனம். ஏனென்றால் அங்கதான் வீடுகள் காணிகள் பார்க்க வாறாக்கள் எல்லாம் நிப்பினம். ஆனால் நாங்கள் வாறதுக்கு கொஞ்ச நேரம் சென்டுபோட்டு ஒரு பத்து பத்தரை மணியிருக்கும் ஒருத்தரையும் காணேல்ல. சரி எதற்கும் ஒருக்காப் போய்பார்ப்பம் என்டு நானும் சாம்பசிவமண்ணையும் உங்கால திருவையாற்றுப்பக்கம் சைக்கில்ல வெளிக்கிட்டு வந்தம். எந்தவித அசுமாத்தமும் கிடையாது சனமில்லாத சுடுகாடு மாதிரிக் கிடந்தது ஊர். அப்படியே கோவிந்தன் கடையடிக்கு வந்தம். அங்கேயும் ஒருத்தருமில்லை. மெதுவாக இறங்கி றோட்டில போகேக்க சாம்பசிவமண்ணையின்ர காணிப்பக்கமிருந்து ஒரு நாலைந்து பேர் ஓடிவாறது தெரியுது. அப்ப நின்டு பாத்தம். அவங்கள் ஓடிவந்து ஒரு காணிக்குள்ள புகுந்திட்டாங்கள்.

சரியென்டு அவங்கள் நின்ட இடத்திற்குப் போய் என்னடாப்பா ஏதும் எங்கால பிரச்சினையே என்டு கேட்டம். அப்பிடி ஒன்டும் இல்லையண்ண என்டாங்கள். அப்ப உங்கால போகலாமே எனக் கேட்டம். ஓமோம் ஒன்டும் அப்பிடி ஒரு சிக்கலும் இல்லை போய்ப்பார்க்கிறதென்டா போய்ப் பாருங்கோ என்டாங்கள். மெதுவா வெளிக்கிட்டு சாம்பசிவம் அண்ணையின்ர காணிக்க போய் வீட்டு முற்றத்தில சைக்கிள விட்டிட்டு காணியைச் சுத்திப் பார்த்தம். ஓடிவந்தவங்களோ அல்லது வேறுயாரோ அங்க தேங்காய் பிடுங்கி உரிச்சிருக்கினம் ரெண்டு தேங்காய் உரிச்சுக் கிடந்தது. வேற தேங்காயன் கீழே கிடந்தது. யாரோ நாங்கள் வாறமென்டு சொல்லப் பிடுங்கின தேங்காயப் போட்டுட்டு ஓடிட்டாங்கள். எனச்சொல்லிப் போட்டு அப்படியே சாம்பசிவம் அண்ணையின்ர காணியின்ர பின் வேலிக்கால வெளிக்கிட்டு பின் றோட்டால நடந்தம். அவ்விடத்திலதான் என்ர காணி இருந்தது. நாங்கள் ரெண்டு பேருமா நடந்துவந்து கொண்டிருக்கிறம் அங்கே யாரையுமே





காற்றுக்கு அசையிற சத்தத்தையும் தவிர வேறெந்தச் சத்தமும் இல்லை. அந்தச் சூழலே ஒருவித அச்சம் தரும் சூழல்தான். என்ன செய்ய வந்திட்டம் ஒருக்காப் பாத்திட்டுபோவமென்ட நப்பாசை. கையில வைச்சிருந்த உமல்பாக்கை ஆட்டி ஆட்டிக்கொண்டு ரெண்டு பேருமா நடந்து போறம். ஊர் ஊர்மாதிரியே இல்ல. றோட்டெல்லாம் பத்தை வளர்ந்து கவனிப்பாரற்றுக் கிடந்தது. வீடுகளையும், தோட்டங்களையுமே கவனிக்க ஆட்கள் இல்ல. யார் பின்ன றோட்டக் கவனிக்கிறது என நினைச்சுக் கொண்டு நடந்தன். இப்பிடியே நடந்து ஐந்தாம் நம்பர் காணிதான் என்ர. நாங்கள் நாலாம் நம்பர் காணியடிக்கு வந்திட்டம். நான் ஒரு எச்சரிக்கையா சுத்தி சுத்திச் சூழலைப் பார்த்துக் கொண்டு வர நாலாம் நம்பர் காணியடியில ஒரு தென்னமரத்துக்குக் கீழ துவக்க மேல் நோக்கிப் பிடிச்சபடி ஒரு ஆமிக்காறன் எங்களையே பார்த்துக்கொண்டிருக்கிறான். நெஞ்சு படபடக்க உடம்பு மயிரெல்லாம் குத்திக் கொண்டுவர நான் நடந்து கொண்டே திரும்பவும் பார்த்தன். சீ அப்பிடியேதும் இருக்கக்கூடாது என நினைத்துக்கொண்டு ஒரு நப்பாசையோடு பார்த்தன். அது ஆமியேதான். அப்பவும் அப்பிடியே இருந்து கொண்டு எங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறான். என்னுடைய கால்கள் என்னையறியாமலே என்ன செய்யுது என்டு தெரியாமலே நடந்து கொண்டிருந்தன். அப்ப எனக்குப் பக்கத்தில நடந்து கொண்டிருந்த சாம்பசிவமண்ணையின்ர கையைப் பிடிச்சு மெதுவா அண்ணை பயப்படாதேயுங்கோ ஆமிக்காறங்கள் நிக்கிறாங்கள் தேவையில்லாமல் வந்து மாட்டுப்பட்டுப்போனம் என்ன நடக்கப் போகுதோ என நான் பயந்தபடி சொல்லிப் போட்டுத் திரும்பவும் அவனை ஒருக்காப்பார்த்தன். அவன் அப்பிடியே இருக்கிறான். திரும்பவும் அத சாம்பசிவம் அண்ணைக்குச் சொல்ல நான் வாயெடுக்க அவன்ர கைவிரலால் வாயில வைச்சுக் கதையாத என்ட மாதிரிக் காட்டினான். அப்பதான் நான் வடிவா எல்லா இடத்தையும் ஒருக்காச் சுத்திப்பார்த்தன். எல்லாத் தென்னமரங்களுக்குக் கீழேயும் பற்றைகளுக்குள்ளேயும் அவர்கள் குந்தியிருக்கிறது என்ர கண்ணுக்குத் தெரியுது. அந்தத் தருணத்தை வார்த்தையால சொல்ல முடியாது. அது ஒரு மரணவேதனை அனுபவிச்ச தருணம் இன்டைக்கு நினைச்சாலும் அச்சமாத்தான் இருக்கு. சரியென்டு என்ர காணிக்கு நேரேவர கான்ஸ் - அப் - என்டு சத்தம் கேட்டுது. கையில கிடந்த பாக்கைக் கீழே போட்டிட்டு கையை நடுங்கியபடியே மேலே உயர்த்தினம். அதுக்கிடையில எல்லாப்பக்கத்தில இருந்தும் வெளிக்கிட்டு றோட்டுக்கு வந்திட்டாங்கள். அப்பதான் எங்களுக்குத் தெரியும் நாங்கள் வந்த பன்னெண்டாம் நம்பர் காணியடியிலயிருந்தே அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்டு. அதுவரைக்கும் அவங்களின்ர பகுதிக்குள்ள நாங்கள் நடந்து வந்திருக்கிறம். கையை உயர்த்தின எங்களிட்டயிருந்து டக்கென சேட்டைக் கழட்டி எங்கட கையைப் பின்னால கட்டினாங்கள். கட்டிப் போட்டு சிங்களமும், தமிழும் கலந்து 'ஏன் இஞ்ச வந்தனீங்கள்' என்டு கேட்டாங்கள். அப்ப நான் நடுங்கிக் கொண்டே சொன்னேன். நாங்கள் இஞ்ச தேங்காய் எடுக்க வந்தம். இது என்ர காணியென்டு என்ர காணிக்க நிக்கிற அவனுக்கே நான் பயந்து நடுங்கியபடி இது என்ர காணியென்டு அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. அதுக்கிடையில அவன்

பதில் சொன்னேன். சரியென்டு போட்டு எங்கள் ரெண்டு பேரையும் கூட்டிக் கொண்டு போய் அங்கால இரத்தினபுரத்தடியில் இருந்த ஒரு கொட்டிலுக்க இருத்தி அந்த வீட்டுக்க கிடந்த கறுப்புத்துணியால கண்ணைக் கட்டிப்போட்டு விசாரிச்சாங்கள் "ஏய்! எல்.ரீ.ரீ.க்கு றெக்கி எடுக்க வந்தது? இல்லையையா..." நாங்கள் தேங்காய் பிடுங்க வந்தனாங்கள். "ஏய் ஏய் பொய் சொல்லாத" என்டு வெருட்டினவன். நாங்கள் எவ்வளவு சொல்லியும் கெஞ்சியும் அவன் நம்பேல்ல. நாங்கள் எங்கட கதை இதோட முடிஞ்சிட்டுது என்டு அப்பிடியே நடுங்கியபடி இருந்தம். அப்ப ஒருத்தன் "ஏய் கட்டக் இன்ட செல்லம பென்னன்னம்" கொஞ்சம் பொறு விளையாட்டைக் காட்டுறம் என்டான். அப்பநான் உண்மையிலேயே மனசில நினைச்சன் நாங்கள் சாகப்போறம் என்டு. ஏனென்டா அவன் சுடப்போறான் என்டு நினைச்சன் அவன் பக்கத்தில இருக்கிற ஆமிட்ட கேக்கிறது எனக்கு கேக்குது. "மச்சான் ஒயாலங்க தியனவத" "மச்சான் உன்னட்ட இருக்குதானே" சரியென்டு ஒரு ரெண்டு நிமிசம் இருந்திருப்பம். கோவிந்தன் கடைச்சந்திப் பக்கம் ஆர்.பி.ஜி எல்லாம் அடிச்சு வெடிவைச்சாங்கள். ஒரே முழக்கம். நாங்கள் அப்படியே இருந்தம். ஒரு பதினைந்து நிமிசம் எல்லாத்துவக்காலையும் அடிஅடியென்டு கோவிந்தன் கடைப்பக்கமா அடிச்சான். அடிச்சு முடிய எங்கட கையப்பிடிச்சுப் போட்டுச் சொன்னான். "பேவா. தப்பிற்றீங்க" என்டு. ஏனென்டா எங்களுக்கு அப்பத்தான் விளங்கிச்சுது அவன் அங்கால சுட்டு ஏதும் எதிர்ப்பு வருதா என்டு பாக்கிறதுக்கு செய்திருக்கிறான். அப்பிடி ஒன்றும் நடக்கேல்ல என்டபடியா எங்கள ஒன்டும் செய்யேல்ல. சரியென்டு அதிலயிருந்து எங்களக் கூட்டிக் கொண்டு போய் இரத்தினபுரம் பிள்ளையார் கோவிலுக்க இருத்தினாங்கள். இருத்திப்போட்டு கையை அவிட்டு விட்டுட்டுச் சேட்டப் போடச் சொல்லி சொன்னாங்கள். சேட்டை முறுக்கி கையைக் கட்டினதால சேட்டெல்லாம் கசங்கி சுருங்கிப் போய்க் கிடந்தது. அப்பிடியே பிள்ளையார் கோயிலுக்க பிள்ளையாருக்குச் சாத்தியிருந்த பட்டுத்துணியை அவிட்டுத் திரும்பவும் எங்கட கண்ணைக் கட்டினாங்கள். கட்டிப்போட்டு அப்பிடியே கூட்டிக்கொண்டு போய் ஒருவாகனத்தில் ஏத்தினாங்கள். அந்த வாகனம் நான் நினைக்கிறன் அதுவொரு ஆமர்ட் காராக இருக்கவேணும் என்டு. ஏனென்டா அதுவொரு கடினமானதொரு வாகனமாக இருந்தது. எங்கள அதுக்க ஏத்தி கீழபடுக்க வைச்சுப்போட்டு ரெண்டு காலையும் அவங்கள் இருந்து கொண்டு எங்களுக்கு மேல அவங்களின்ர பூட்ஸ்கால வைச்சிருந்தாங்கள். அப்பிடியே அந்தவாகனம் வந்து டிப்போச்சந்திய இருக்கவேணும் அதால திரும்பி இப்ப எங்கட கிளிநொச்சி காவல்துறை நிலையம் இருக்கே அந்தக் கட்டிடமாய் இருக்க வேணும் அதில போய் அந்தவாகனம் நின்டுது. பிறகுதான் நான் இப்ப அந்த இடத்தைப் பார்த்தன். இறக்கிப்போட்டு உள்ளுக்க கொண்டு போனாங்கள் அங்க அவங்களின்ர ஒருபெரியவனாக இருக்க வேண்டும். "இருங்கோ வாடிவெண்ட" எனச் சொன்னான். நாங்கள் மெதுவாக இருக்கப்போக அதற்கிடையில் அவன்ர காலால என்னை எட்டி உதைச்சுப்போட்டான். அந்த உதைபோட நான் கீழ



"

அவங்கள் புதைச்சுப் போட்டுப் போன ஒரு மிதிவெடி வெடிச்சு என்ரகால் முழங்காலுக்குக் கீழே போட்டுது. அங்க உயிரோட விட்டவன் இஞ்ச கால எடுத்தாங்கள். அவர்களுக்கு எங்களிட்ட இருந்து ஏதாவது எடுத்துக் கொண்டே இருக்கவேணும்.

"

எண்டு கத்திறது எனக்குக் கேட்குது. அவருக்கும் அடிவிழுந்திருக்கு. பிறகு திரும்பித்திரும்பி பழைய கேள்வியைக் கேட்டான். "எல்.ரீ.ரீய கண்டனியோ இயக்கமோ" எண்டு கேட்டான். நாங்கள் எல்லாத்துக்கும் உண்மையைச் சொல்ல அவன் நம்பேல்ல. "மெயா பொறு சியனவா பொய் சொல்லுறான்" எண்டு இன்னொருத்தன் அவனுக்குச் சொல்லுறது எனக்கு விளங்குது. மாறிமாறி தனித்தனிய வைச்சு விசாரிச்சாங்கள். நாங்கள் உண்மையைத்தான் திருப்பித்திருப்பி சொல்லிக் கொண்டிருந்தம் ரெண்டு பேரும் ஒரேமாதிரி சொன்னதால எங்கட விசாரணையை அதில முடிச்சுப்போட்டுக் கொண்டு போய் ரக்டரில ஏத்தினாங்கள். காலையில பதினொரு மணிக்குப் பிடிச்சவங்கள் விசாரிவிசாரியெண்டு விசாரிச்சு எங்கட பொக்கற்றுக்ககிடந்த காசு ஐலண்டிக்காட் எல்லாத்தையும் எடுத்துப் போட்டாங்கள். மூண்டு மணிபோல ரக்டரில ஏத்தி ஏனைன் றோட்டால கொண்டு போறாங்கள். ஒரு கொஞ்சத்தூரம் போனவுடன் நிப்பாங்கள் நிண்டு அங்க நிக்கிறவங்களோட கதைப்பாங்கள். இப்பிடியே கதைச்சுக் கதைச்சு ரக்டர் போய்க்கொண்டிருக்கு அதுக்கிடையில ரக்டர், மோட்டார் சைக்கிள்ல வாறவன் மறிச்சு மறிச்சு விசாரிப்பான். அது இப்பிடிக்கன இடத்தில மறிச்சு மறிச்சு விசாரிச்சான். ரக்டர் நிக்கிற இடத்தில அவங்கள் குதிக்கிற சத்தமெல்லாம் கேக்கும் அதோட ரக்டர் நிக்க ஓடிவந்து கதை கேப்பாங்கள் கதை கேட்டிட்டு எட்டி அடிப்பாங்கள் அதில வாறவன் நிக்கிறவன் எல்லாம் ஒருக்கா எங்களை எட்டி அடிப்பான். திரும்பவும் மோட்டார் சைக்கிள் காறன் மறிச்சு விசாரிப்பான். அப்பநான் அனுமானிச்சுப் போட்டன். ஒருத்தன் தான் திரும்பத்திரும்ப வேறான் மாதிரி விசாரிக்கிறான் எண்டு அப்பிடியே கொண்டு போக நாங்கள் இவங்கள் அடிக்கிறாங்கள் எண்டு மெதுவாக ரக்டர் போகேக்க பெட்டியின்ர நடுவுக்க ஊர்ந்து போய் கொஞ்சம் அடிவாங்குறதிலிருந்து தப்பினம். இப்பிடி நிண்டு நிண்டு போய்க்கொண்டிருக்கேக்க கொட்டியாவா எண்டு கேக்க இவங்கள் தேங்காய் பிடுங்க வந்தவங்கள எண்டுசொல்ல அதில நிக்கிறவங்கள் சொல்லுறாங்கள் "உந்த நாயள ஏன்

விட்டிட்டு. ஏத்திக் கொண்டு போறாய்" எண்டெல்லாம் சொல்லுறாங்கள். அதுவும் எங்களுக்குக் கேட்குது. அப்பிடியே மினக்கெட்டு மினக்கெட்டு அந்தர் ரக்டர் போய்க் கொண்டிருக்க எங்கட முகத்தில உப்புக்காற்றுப்படுறது தெரியுது அதோட சேற்று மணம் கலந்து வருது. அது ஆனையிறவா இருக்க வேணும் எண்டு நான் நினைச்சுக் கொண்டன். என்ன செய்யப் போறாங்களோ எண்டு ஒண்டும் தெரியாது தானே. கொண்டு போய் ஆனையிறவில மில்றி பொலிஸ்காரனிட்ட எங்கள ஒப்படைச்சாங்கள். அப்ப இரவாகிட்டுது. ஒரு சின்னச் சின்னதுக்கெல்லாம் முதுகில குத்துப்படுற ஒரு சின்ன இடத்துக்க போட்டாங்கள். அதுவொரு ரெயில் றோட்டா இருந்திருக்க வேணும். விடியப் பார்த்தம் சைட்டுக்கு சிலிப்பர் கட்டையும்மேல மண்மூடை அடுக்கி சீற்போட்டு இருந்தது அந்தச் சின்ன இடம். ஆனால் எந்தவெளிச்சமோ இல்லை அவங்களும் இருட்டுக்கதான் கிடக்கிறாங்கள் பயத்தோட அதுக்கிடையில் எங்கள மாதிரி இன்னொரு ஆளும் அதுக்குள்ள இருக்கிறார். அவர் பூநகரியில இருந்து கடலுக்குத் தொழிலுக்குப் போன இடத்தில திசைமாறி இவங்களிட்ட பிடிபட்டுப் போனார். அவருக்கு அடிச்சு ஒருபல்லைத்தவிர மற்றப்பல்லையெல்லாம் உடைச்சிட்டாங்கள். அப்ப எங்களையும் அடிச்சாலுமெண்டு அந்தச் சின்ன இடத்தின்ட ஒரு மூலைக்குள்ள போய் சுருண்டு கிடந்தம். பிறகு விடியவந்து திரும்பவும் விசாரிச்சாங்கள் விசாரிச்சுப் போட்டு எங்கள ஒரு வாகனத்தில ஏற்றிக்கொண்டு வெளிக்கிட்டாங்கள். அப்ப சொன்னாங்கள் "வென்றுக்குள்ள திரும்பேக்க கவனமாக இருக்கோணும். இல்லாட்டி எட்டி உதைச்சு விழுத்திப்போட்டு தவறி விழுந்திட்டாங்கள் எண்டு சொல்லிடுவம்" அப்பி டியே கொண்டுபோய் இயக்கச்சியில ஒரு இடத்தில ஒரு நாலைஞ்சு நாள் வச்சிருந்தாங்கள். அதுவொரு கிச்சின் போல இங்க எங்களோட வேறு பிடிபட்ட ஆக்களையும் கொண்டு வந்து விட்டிட்டாங்கள். அங்க அதில இருந்த ஆக்களில நாங்கள் கொஞ்சம் வயசான ஆக்கள் எண்டு சாப்பாடு எடுக்கறதுக்குப் போறது. எங்கட சாப்பாட்டைத்தின்ன வந்திருக்கிறாங்கள் எண்டு எங்களப் பேசுவாங்கள். அது அவமானமாக இருக்கும். சாம்பசிவம் அண்ணைக்கு காதில மயிர் கொஞ்சம் கூட அப்ப அவற்ர காதுமயிரைப் பிடிச்சு இழுப்பாங்கள். பிரடியில அடிப்பாங்கள் காதுமயிரைப் பிடிச்சுக் கொண்டு ஆட்டுவாங்கள். அப்ப ஒருநாள் சாம்பசிவம் அண்ணை சொன்னவர் இஞ்ச பார் நாங்கள் இவங்கண்ட பிடியில இருக்கிறதால இதையெல்லாம் சகிக்க வேண்டியிருக்கு இல்லாட்டி இவண்ட காலப்பிடிச்சு நிலத்தில தூக்கி அடிச்சுப் போடுவன் எண்டு. அந்தளவுக்கு எங்களை ஒரு கேவலமான பொருளாகப் பார்த்தாங்கள். பிறகு அப்பிடியே கொண்டு போய் யாழ்ப்பாணத்தில ஐசிஆர்சியிட்ட ஒப்படைச்சாங்கள். அதுக்குப் பிறகு அங்கயிருந்து நாங்கள் வீட்ட வந்து சேர்ந்தோம். ஒருபத்துப்பதினைந்து நாளைக்குப் பிறகு வீட்டவந்தா எங்களுக்குச் செத்தவீடும் செய்து எட்டும் முடிஞ்சிட்டுது. பிறகு எங்கட பொடியள் கிளிநொச்சிய பிடிச்சாப்பிறகு என்ர காணிக்கு நான் சுதந்திரமாகப் போய் பார்த்து அங்க இருந்தம். ஆனால் அந்தச் ஆமிக்காரங்கள் புதைச்சுப் போட்டுப் போன ஒரு மிதிவெடி வெடிச்சு என்ரகால் முழங்காலுக்குக் கீழே போட்டுது. அங்க உயிரோட விட்டவன் இஞ்ச கால எடுத்தாங்கள்

# 15 ஆம் ஆண்டு நினைவாக...







எங்கெல்லாம் எதைப்பார்க்கிலும்
தெரியும்
இவர் முகங்கள்.
எங்கு நோக்கிலும் வீர புருசர்கள்
நினைவுகள் தெரியும்.
வாசலிடை வந்து வீசும்
தென்றலிலும்
உம் இறுதி மூச்சு வீரம் பேசும்.



நினைவு நாள்:
■ ஜனவரி 16

கேணல் கிட்டு
உட்பட
பத்து வேங்கைகள்
நினைவாக...

தமிழ்நிலா



# நிலவொன்று நிழலாகின்றது

'இரவு பதினொருமணி இன்னும் இவளைக் காணேல்ல. பொம்பிளைப்பிள்ளை இந்த நேரத்தில் எங்க போயிட்டாள். ஆமானப் பட்ட ஆம்பிளையளே தனியாப் போகப் பயப்பிடுகினம் கள்ளர் காடையர் உலவிற இடம். இவள் தனியப் போயிட்டாள். எனக்குக் கை காலெல்லாம் பதறுது. அவள் துணிஞ்ச கட்டதான். இவளின்ற வயசில நான் இரவில வெளியில போறதெண்டா அம்மான்ர சீலத்தலைப்பப் பிடிச்சுக்கொண்டெல்லே திரிஞ்சனான். இண்டைக்கு வரட்டுக்கும் கண்டிச்சு வைக்கோணும்'. சிந்தனையுடன் கட்டிலில் புரண்ட அபிராமி அம்மாவுக்கு நித்திரை வர மறுத்தது. எழுந்து வெளியே வந்தார். நகரம் அமைதியாய் உறங்கத் தயாராகிக்கொண்டிருந்தது. ஓரிரு வாகனங்கள் வெளிச்சத்தை அள்ளி இறைத்தவாறு அவரைத் கடந்தன.

வருவதும் முகிலுக்குள் மறைவதுமாயப் பிறைச்சந்திரன் விளையாடிக்கொண்டிருந்தான். அள்ளிச் சிந்திய பூக்களாய் நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருந்தன. ஓடித்திரியும் முகிற் குஞ்சுகள், அவற்றை இரசிக்கும் மனநிலையில் அபிராமி அம்மா இல்லை. அவர் மனம் நிலானியைச் சுற்றிச் சுற்றியே வந்துகொண்டிருந்தது. நிலானி முதன் முதலாய் அபிராமி அம்மாவின் வீட்டுக்கு வந்த நாளை நினைத்தாலே அவரது மனதுக்குள் மகிழ்ச்சிக் குயில்கள் வசந்த ராகம் இசைக்கும். பெண்குழந்தை மேல் கொள்ளைப் பிரியம் கொண்ட அபிராமி அம்மாவுக்கு ஒரேயொரு மகன் மட்டுமே. பெண்குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க விரும்பினாள். ஆனால் அவரது துணைவர் ... அவர் ...

திருமணமாகி தனிக்குடித்தனம் சென்றுவிட தனிக்கட்டையாய் வாழ்ந்துகொண்டிருந்தார். பெண்குழந்தைக்காய் ஏங்கிய அவரின்வீட்டுக்கு வாலைக்குமரியாய் வந்தவள் தான் நிலானி. நகரத்திலுள்ள நிறுவனமொன்றில் பணி புரியும் அவளுக்குத் தங்குமிடவசதி இல்லையாகையால் இங்கே அழைத்து வந்ததாக அவரது மைத்துனர் கூறினார். உடுப்புப் பெட்டியுடன் பதுமையாய் நின்ற நிலானியின் வசீகர வதனத்தால் கவரப்பட்டு அபிராமி அம்மாள் உடனே சம்மதித்துவிட்டார். அவருக்கு ஒரு மகள் கிடைத்ததால் கைகால் புரியாத மகிழ்ச்சி. அவள் 'அம்மா' என்றால் அவர் மனம் சிறகடிக்கும். யாரையும் வசீகரிக்கும் குழந்தை முகத்தால், பண்பால் அபிராமி அம்மாவின் மனதில் அழியா இடத்தைப் பெற்றுக்கொண்டாள் நிலானி. அவளைத் தன் மகளாகவே நினைத்தார். தனிக்கட்டையாய் வாழ்க்கையில் பிடிப்பற்று வாழ்ந்தவருக்கு நிலானி எனும் கைப்பிடி கிடைத்துவிட்டதாய் நினைத்தார். சில வேளைகளில் அவளின் நடவடிக்கைகள் அவருக்குப் புதிராய் இருந்தன. இரவு வேளைகளில் அவள் தனியே வெளியே சென்று வருவதை அவரது தாய்மனம் அனுமதிக்கவில்லை. யாரோ ஒரு இளைஞனுடன் பூங்காவில் கண்டதாய் உறவினர் ஒருவர் கூறினார். அதைப்பற்றி விசாரி விசாரி என மனம் அடித்துக்கொண்டதால் பட்டும் படாமலும் கேட்டபோது அவள் சிரித்து மழுப்பிவிட்டாள். இது அந்தக் காலமில்லை என நினைத்து மனதைச் சமாதானப்படுத்திய அபிராமி அம்மாவுக்கு ஒரு சந்தேகம். பேரனின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு நிலானியையும் அழைத்துக்கொண்டு சென்றிருந்தார். அங்கு வந்திருந்த மருமகளின் தம்பி ஆனந். அவனையே சுற்றித் திரிந்ததை அவதானித்த அபிராமி அம்மாள், ஆனந்தும் நிலானியும் வாழ்க்கையில் ஒன்றிணைந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனையில் மிதந்தார். தான் ஏற்கனவே ஒருவரைக் காதலிப்பதாகக் கூறி, ஆனந்தின் வேண்டுகோளை நாகரீகமாய் மறுத்துவிட்டாள் நிலானி. அபிராமி அம்மாவுக்கு ஏமாற்றமாய்த்தானிருந்தது. அவர்களது குடும்பத்துடன் சேர்ந்து புகைப்படம் எடுக்க ஆனந் அழைத்தபோது கழுவுகின்ற நீரில் நழுவுகின்ற மீனாய் நிலானி நழுவியதையும் அவதானித்தார். நிலானியின் மனதைப் பறித்தெடுத்த அந்த யாரோ ஒருவனைத்தான் பூங்காவில் சந்தித்திருப்பாள் என்று அவர் நினைத்தார். இடையிடையே நிலானி தன்னுடைய வீட்டுக்குப் போய்விட்டால் அவர் வாடிப்போவார். சந்தேகத்தின் பேரில் அவனைக் கைதுசெய்துகொண்டு போனபோது தடுத்தார். அவனைப் பிடித்து இவனைப் பிடித்து அவனை வெளியே

வந்த நிலானி தனியாக அறைக்குள் இருந்து விம்மிவிம்மி அழுதபோது பதறிப்போனார். நிலானி கண்ணீர் விட்டு அழுததை அவர் ஒருபோதும் பார்த்ததில்லை. 'ஏனம்மா அழுகிறாய்' அன்பாய் கேட்டபோது அவர் மார்பில் முகம் புதைத்துக் கதறினாள். ஒரு பெண்ணின் தலையைக் காட்டி தெரியுமா எனக்கேட்டு அடித்தார்கள் என்றாள். தலையைப் பார்த்துப் பயந்துவிட்டாள் என்று நினைத்துக்கொண்டார். காவற்றுறையினரின் வாகனம் ஒன்று தெருவில் சென்றுகொண்டிருந்ததைக் கண்டதும் உள்ளூறப்பயம் தொற்றிக்கொண்டது. 'திரும்பவும் கைது செய்திட்டாங்களோ தெரியேல்ல. பிள்ளையை இவ் வளவு நேரமாக்காணேல்ல..' மீண்டும் தெருவை நோக்கினார். நிலானி வந்துகொண்டிருப்பது தெரிந்தது. 'அப்படி பிள்ளைவாறாள்...' அவர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். தெருவிளக்கு வெளிச்சம் முகத்தில் பட்டுத் தெறிக்க, மகிழ்ச்சி தாண்டவமாட வந்துகொண்டிருக்கும் நிலானியைக் கண்டதும் அவரது முகத்திலும் மகிழ்ச்சி. 'இந்தச் சிரிச்ச முகத்த ஒரு படத்தில சிறைப்பிடிப்பமெண்டால் ஓமெண்டாளே! முகத்தில ரெண்டு மூண்டு பரு. இன்னொரு நாளைக்கு எடுப்பமெண்டு கள்ளத்தத் தடவி எப்படிச் சமாளிச்சுப் போட்டாள்.' 'என்னம்மா நீங்கள் இன்னும் நித்திர கொள்ளேல்லயா? இப்படி முழிச்சுக்கொண்டிருந்தா உடம்பு என்னத்துக்கு ஆகும்?' 'நீ கதைக்காத!!! இவ்வளவு நேரமும் என்ன கோவமா? எங்க சிரியுங்கோ, நாளைக்குச் சொக்கா வாங்கித் தருவன்..' 'இந்தச் சாமத்தில கண்டறியாத நிகழ்வு. சரி உடுப்ப மாத்தி கைகாலக் கழுவிக்கொண்டு நித்திரையைக்கொள்ளும்... சாப்பிட்டியா?' 'ஓமம்மா நீங்க' 'நானும் சாப்பிட்டுட்டன்' 'இல்ல பொய்சொல்லுறீங்கள். நான் அங்க கொஞ்சந்தான் சாப்பிட்டனான். பசிக்குது வாங்க சாப்பிடுவம்.' மாட்டன் என்றால் விடவாபோகின்றாள் என எண்ணியவராய் அவளைப் பின்தொடர்ந்தார். 'நான் சாப்பாட்டப் போடுறன். நீ கை கால அலம்பிட்டு வா' 'ஓமம்மா. அம்மா! சாப்பாட்ட ஒண்டாப்போட்டு குழையுங்கோ' 'உருட்டித் தரட்டோ?' 'தீத்தி விடுங்கோம்மா...!' அவர் ஊட்டி விட ஆசையாய் உண்டாள். அவளையே பார்த்துக்கொண்டிருந்த கண்களில் நீர் தழும்பி, அவனை மீறி உடைத்து கன்னங்களில் வழிந்தது. 'என்னம்மா ஏன் அழுகிறாய்?' 'ஒண்டுமில்ல... அம்மா அப்பாட ஞாபகம் வந்திட்டுது.. அதுதான்' ஒருவாறு சமாளித்து உணவை விழுங்க முயற்சித்தாள். நிலானியின் கண்ணீரைத் துடைத்த அபிராமி அம்மாவின் கண்களிலும் நீர் வைத்த கண்வாங்காமல் ...

மனங்களிலும் வெவ்வேறு சிந்தனைகள். 'அம்மா!' அமைதியான அந்தச் சூழலில் ஒலித்த நிலானியின் குரலில் உணர்வுகளின் கலவை. 'என்னம்மா' 'நான் நாளைக்கு ஊருக்குப் போறன் திரும்பிவரக் கொஞ்சக் காலம் பிடிக்கும்' 'ஊருக்குப் போறியோ...! என்ன திடீரெண்டு?' 'அம்மாவுக்கு வருத்தமாம் அதான்' அபிராமி அம்மாவுக்கு அதிர்ச்சி போவதற்கு அனுமதிக்காதே என மனம் அடித்துக்கொண்டது நீ எப்படி அவளுக்க தடைபோட முடியும் சிறிதுகாலத்தில் திரும்பி விடுவாள் தானே என்றது இன்னொரு மனம். 'சரியம்மா போயிற்று வா. எவ்வளவு கெதியா வரேலுமோ அவ்வளவு கெதியா வா நீ இல்லாட்டி இது வீடா இருக்காது' 'அம்மா நீங்க, அண்ணா, அண்ணியையோட சேர்ந்து இருக்கலாந்தானே?' 'நான் இருக்கிறது கிடக்கட்டும் நீ கெதியாய் வரப்பார். 'சரியம்மா' 'நல்லா நேரம் போயிற்று. வா நித்திரை கொள்ளுவம்.' நிலானி பாத்திரங்களை ஒதுக்கிவைத்துவிட்டுத் தனது அறைக்குள் சென்றாள். நிலானியைச் சிறிது காலம் பிரிவதை எண்ணி எண்ணி அபிராமி அம்மா தவித்துக்கொண்டிருந்தார். தவிப்பு அவரை நித்திரை செய்யவிடாமல் தடுத்து எழுந்து சென்று நிலானியின் அறையை எட்டிப்பார்த்தார். அவள் அவசரமாய் ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். அதை உறையிலிட்டு ஒட்டிவிட்டு, சிறிது நேரம் யோசித்துக்கொண்டிருந்தாள். பின்னர் எழுந்து சென்று கட்டிலில் படுத்தாள். சிறிது நேரத்தில் நித்திரை நிலானியை ஆட்கொண்டது. அன்றுதான் அவளை முதன் முதலாய் பார்ப்பது போல அவளையே பார்த்துக்கொண்டிருந்தார். குழப்பமேதுமற்று நிர்மலமான முகத்துடன் அமைதியாய் உறங்கிக்கொண்டிருக்கும், அந்த அழகுதேவதை நாளை தன்னை விட்டுப் பிரியப் போகிறதே என நெஞ்சு விம்மியது. திரும்பி வந்து கட்டிலில் சரிந்தார். நிலானி அதிகாலையிலேயே எழுந்துவிட்டாள். தேநீருடன் வந்து அபிராமி அம்மாளை எழுப்பினாள். அப்போதுதான் நித்திரையாகியிருந்தவர் திடுக்கிட்டு எழுந்தார். அவருக்கு முன்னால் புத்தம் புதுமலராய்ப் புன்னகையுடன் தேநீர் கோப்பையை நீட்டியபடி நின்ற நிலானியைக் கண்டு புன்னகை பூத்தார் திடீரென இரவு நிகழ்வுகள் நினைவைத் தொட புன்னகை எங்கோ மறைய கவலைபடர்ந்தது. 'என்னம்மா நேரத்தோட வெளிக்கிட்டாச்சே! சமைக்கவேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுறன்' எழுந்து தேநீர்க் கோப்பையை வாங்கிக்கொண்டார். 'உடுப்பெல்லாம் அடுக்கிற்றியா? சிலமைக் காணேல்ல. அடுக்கித் தரட்டே' 'நான் இராத்திரியே எல்லாம் செய்துபோட்டன் அம்மா!' தேநீ...

உள்ளங்கால் வரை பார்வை ஊடுருவியது. அவரை அறியாமல் நீண்ட பெருமூச்சொன்று வெளிவந்தது. அணிந்திருந்த 'ரோல்கோல்ட்' நகைகள், உடையுடன் வெகுவாய்ப் பொருந்தியிருக்க அன்று அவள், அவர் கண்களுக்கு மிக அழகாய் தெரிந்தாள். 'என்னம்மா அப்பிடிப்பார்க்கிறியள்' 'ஒண்டுமில்ல...' 'மாமா வாவெண்டு சொன்னவர் ஆளைக் காணேல்ல.. நேரம் போகுது.' அலுத்துக்கொண்டவளாய் அபிராமி அம்மாளுக்கு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்துகொண்டாள். அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை அபிராமி அம்மா அவளது கையைப்பற்றி அதில் மணிக்கூடொன்றைக் கட்டிவிட்டார். 'என்னம்மா இது..' 'வேண்டாம் என்று சொல்லாத நான் எதத் தந்தாலும் வேண்டாமெண்டுவாய் இதையெண்டாலும் கட்டியிரு. இல்லையெண்டால் உனக்கு அம்மாவில பாசமில்லை என்டு அர்த்தம். வேண்டாமெண்டு சொல்லாதையம்மா.... அம்மாவால தாங்கிக்கொள்ளேலாது.' அபிராமி அம்மாவின் கண்களில் நீர். 'சரி கட்டிவிடுங்கோம்மா. வடிவாய் இருக்கு' நிலானி புன்னகைத்தாள். அவள் கால்களில் அவசரம். குட்டிபோட்ட பூனைபோல வாசலுக்கும் கதிரைக்குமாய் நடந்தாள். 'மாமாவக் காணேல்லயம்மா. நேரம் போகுது' அவள் இப்போதைக்கு வரக்கூடாதென அபிராமி அம்மாள் நினைத்துக்கொண்டார் அவர் வருமட்டும் நிலானி தன்னோடு நிற்பாளே என்ற தவிப்பு. 'அம்மா! எனக்கு நேரம் போகுது நான் போறன், மாமா வந்தோடன சொல்லுங்கோ. ம்... அம்மா மாமாட்ட இத ஒருக்காக் கவனமாக் குடுங்கோ. சரி நான் போயிற்று வாறன். அலட்டிக்கொள்ளாம உடம்பக் கவனியுங்கோ. ஒழுங்காச் சாப்பிடுங்கோ' கன்னங்களைத் தடவி விடைபெற்றாள். கண்களில் நீர் அரும்ப விடைகொடுத்தார். அவள் படிக்கட்டுக்களில் இறங்கிச் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தார். அவள் திரும்பிப் பார்த்து கையசைத்தாள். இவரும் கையசைத்தார். கண்களிலிருந்து அவள் மறையும் வரைபார்த்துக்கொண்டிருந்தார். வீடு வெறிச்சோடிக்கிடந்தது அவர் மனம் போலவே ஏதுவும் செய்யப்பிடிக்கவில்லை சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். நிலானி என மனம் அடித்துக்கொண்டது அவளை நிரந்தரமாய் பிரிந்தது போன்ற தவிப்பு அவருக்கு. நேரம் கடந்துகொண்டிருப்பதை சாளரமூடாக நுழைந்து கன்னொளச் சுட்ட ஆதவனின் கதிர்கள் உணர்த்தின. வீட்டின் அமைதி நிலானி இல்லை என்று கூறியது. 'அவள் ஒரான் நிண்டா ஒன்பதுபேர் நிக்கிறமாதிரி வீடு எவ் வளவு கலகலப்பா இருந்திருக்கும்.' பெருமூச்சுடன் எழுந்து குளியலறைக்குள் நுழைந்தார். கவலைகளைக் கழுவும் எண்ணத்தோடு தலையில் நீரை



நகரம் ஒருகணம் அதிர்ந்து நின்றது. என்ன நடந்தது என அறியும் அவசரத்துடன் உடையை மாற்றிக்கொண்டு வெளியே வந்தார். ஜன்னலால் நகரத்தைப் பார்த்தார். அது அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தது. நோயாளர் காவு வண்டிகளும், காவற்றுறை, இராணுவ வாகனங்களும் அவசரகதியில் ஓடித்திரிந்தன. அபிராமி அம்மாளுக்கு இதயம் திக்கென்றது. 'குண்டு வெடிப்புப் போல, என்ர பிள்ளை போய்ச்சேர்ந்திருப்பானோ? அல்லது! ஆண்டவா! அவருக்கு ஒரு பிரச்சினையும் இல்லாமக் காப்பாத்தப்பா.' ஓடிச்சென்று தொலைக்காட்சியை இயக்கினார் அவசரமாய் ஒரு பெண் செய்திகளைக் கூறிக்கொண்டிருந்தாள். 'சற்றுமுன் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் அவரது மெய்ப்பாதுகாவலரும், குண்டுதாரியும் உடல் சிதறிப் பலியானார்கள்...' 'பாவி ஒருத்தன் ஒழிச்சிட்டான். எத்தின இளசுகள் நாசமாக்கினவன்' தொலைக்காட்சி, தாக்குதல் நடந்த இடத்தை மிகநெருக்கமாய்ப் படம்பிடித்துக்காட்டிக்கொண்டிருந்தது. சிதறிக்கிடக்கும் சதைத்துண்டங்களைப் பார்க்க மனம் ஒப்பாமல் முகத்தைத் திருப்ப எத்தனித்தவரின் கண்களில் அது பட்டது. கல்பதித்த தங்கநிறக் கைக்கடிகாரம் அணிந்த கை. 'நீ..' தன்னையறியாமல் கதறமுனைந்தவர் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டார். அதிர்ந்து கல்லாய்ச் சமைந்தார். அழைப்பு மணி ஒலித்தது நீண்ட நேரமாய் அவர் காதில் விழவில்லை. நீண்ட நேரத்தின் பின் தன்னைச் சுதாகரிக்க முனைந்தவாறு கதவைத் திறந்தார். மைத்துனர்.. நிலானி எதிர்பார்த்த மாமா நின்றுகொண்டிருந்தார். 'உள்ள வாங்கோ...' 'நான் கெதியாப்போகோனும். நிலானி தந்திட்டுப் போனதுகளத் தருவியளா' அதைத் தூக்கிய போது அடிவயிறு சுருண்டு வலித்தது. மைத்தினரின் பார்வை தொலைக்காட்சியிலிருந்து முகத்திலிருந்து உணர்ச்சிகளைத் துடைத்துவிட்டிருந்தார். ஆனாலும், அவர் இதயம் அழுதுகொண்டிருந்ததை அபிராமி அம்மா புரிந்துகொண்டார். நிலானி பத்திரமாய் கையில் திணித்துவிட்டுப் போனதை மைத்துனரிடம் நீட்டிய அவரின் கைகள் நடுங்கின. மைத்துனரின் கைகளிலும் தடுமாற்றம் தெரிந்தது. 'இது அவனின்ர நகையள்..' நாத் தழுதழுக்கக் கூறியவர், அதை வாங்கிக்கொண்டு விரைந்தார் பொங்கிவரும் அழுகையை கட்டுப்படுத்தப் அபிராமி அம்மா பெரும் பாடுபட்டார். அழுதழுது கண்ணீர் வற்றிவிட்டது சிவந்த கண்களுடன் வெளியே செல்லப் பயந்தவராய் வீட்டுக்குள் முடக்கிக் கிடந்தார். 'அம்மா அம்மா...' பதறியடித்து எழுந்தவர் கூந்தலை முடிந்துகொண்டு கதவைத் திறந்தார் வாசலில் மகன் சிரித்தபடி நின்றான். கைகளில் இனிப்பு. 'அம்மா! என்னம்மா திகைச்சுப் போய் நிக்கிறீங்கள்? இன்டைக்கு சந்தோசமான நாளேலே... பாவி செத்திட்டான். இந்தாங்க இனிப்பு.' அபிராமி அம்மா தடுமாறினார் கொடியவன் அழிந்தான் என மகிழ்வதா? மகளுக்காய் அழுவதா? தனது நடவடிக்கைகள் மகனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்திவிடக்கூடாதே எனப் பயந்தவராய் இனிப்பை எடுத்துக்கொண்டார். 'நிலானி எங்கையம்மா?' 'அத்தை எங்க அப்பம்மா?' மகனதும் பேரனதும் கேள்விகள் ஒன்றாய் எழுந்தன. ஒருகணம் தடுமாறியவள் சுதாகரித்துப் பதில் கூறினார். 'அவசரமெண்டு ஊருக்குப் போயிற்றாள். திரும்பி வரக்கொஞ்சக்காலம் பிடிக்கும்.' 'ச்சா.. இந்த சந்தோசத்தக் கொண்டாட அவள் இல்லாமல் போயிட்டாளே!' 'இந்தச் சந்தோசத்துக்கே அவள் தானடா காரணம்' பெரிதாய்க் கத்தி சொல்லத்தான் நினைத்தார். முடியுமா? 'அத்தப் பிள்ள போ..., என்னட்டத் தோத்துப் போட்டா. இந்தமுற கட்டாயம் என்ன வெல்லுவன் என்டவா பயத்தில ஓடிற்றாவா? சரி வரட்டும் பாப்பம். அப்பம்மா! இன்டைக்கு அத்தைக்குப் பதிலா நீங்கதான் விளையாடோணும்' அபிராமி அம்மாவின் கைகள் 'கரம்போட்' காய்களை அடுக்கிக்கொண்டிருந்தன. அவரது இதயம் அணு அணுவாய்ச் சிதைத்து அழுதுகொண்டிருந்தது

# கிழக்கு சூரியன் வரட்டும் காத்திருக்கிறேன்

கிழக்குச் சூரியனை இறுக்கக் கட்டி
மேற்கில் கொண்டு போய் மறைத்து விட்டு போனார்கள்
அந்த உயிர்த் திருடர்கள்...

சவுக்கடியால் வெந்து போன மேனியில்
தழும்புகளில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது
காயங்களை மறைத்துக் கொண்டு
காணிக்கை கொடுத்தோம் மாற்றாருக்கு
இப்படியான காலங்கள்
வெந்து போன மேனியின் இதயத்துள்
காய்ந்து போனது...

கூட்டை விட்டுப் பறந்தவர்கள் திரும்பி வந்தார்கள்
விருந்தாளியாக மட்டும்.. தாம்
பிறந்த கூட்டில் எஞ்சிக் கிடந்த
பிஞ்சுச் சிறகுகளைக் கூட பார்க்க முடியாமல்
நேரம் முக்கியமாய்ப் போக வான் பறந்தார்..

நித்தமும் செத்துப் போன சிரிப்புக்களின்
பாடல்களுக்கு பல்லவி எழுதியே
காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும்
இந்த மேனிக்கு அழுகுரல் என்ன புதியவையா?

தீக்குள் வாழ்ந்துகொண்டு
வெப்பத்தின் சனதியை வெறுக்க முடியுமா?
சவுக்குள் இருந்து கொண்டு இயமனுக்கு
கால நீடிப்பு மனுக் கொடுப்பதா?
இலவதுளிர் காலங்களை
காலுக்குள் போட்டு மிதித்து விட்டு
வசந்த காலத்தின் வருகைக்காய் காத்திருக்கிறேன்.

விடிழுந்து மாநிழலில் மாவள்ளி அவித்தபோதும்
விடுதலை என்பதை வெறுத்து விடவில்லையே!
காலம் முழுதும் சாமேட்டில் விடுதலை வீரரை வைத்துச்
சத்தியம் செய்த போதும் சாவைக் கண்டு
எங்கள் சுபத்தை விட்டுவிடவில்லையே!
துச்சமென மதித்துக் கரும்புலிகள்
மேனியைத் தீயிடும் தேசம்.



காட்டிக் கொடுப்புக்களும்
துரோகக் கும்பல்களும்
செம்ம பாவத்தின் வழித்தடங்கள் போலும்
இருந்தும்....
ஒருபோதும் வெட்கித் தலைகுனிந்து
மண்டியிட்டுப் பிச்சை கேட்கும்
நிலையில் நாமில்லையே!
தலை நிமிர்த்தி தட்டிக் கேட்டால்
இப்போது இந்த மேனியும் வெந்து போனது
சவுக்கடியின் காயங்களால்?!

இராக்கணங்களில் மறைந்து போகும்
உறவுகளின் பட்டியல்
மனித உரிமையில் பதிவாகிப் போனாலும்
செத்துப் போன வெற்றுடல்கள் தான்
மனுக்களை பரிசீலித்துப் பார்க்கின்றன
எல்லாமே...
பதில்கள் தேடப்பட முடியாத
'ஓ' கோவைகளாகிப் போகின்றதே!

காலத்தை சாகடித்துக் கொண்டு என்னால்
முகம் மறைத்துப் போக முடியவில்லை
மூக்கை அடைக்கும் என் உறவின் பிணநாற்றம்
என் உறவுகளை மறுக்கச் சொல்கிறது!
ஆனாலும் சாம்பல் மேட்டிற்குப் போய் ஒரு
கொள்ளி வைத்துவிட்டுப் போக
தொப்புள் கொடியின் ஆசை கிளர்ந்தெழுகிறது.

கையில் தீமூட்டிப் போனவென்னைப்
போராட்ட வீரன் என்றல்லவா தேடுகிறார்கள்
காலம் அப்படித்தான் அடையாளப்படுத்திக் கொள்கிறது.
தொப்புள் கொடியின் உறவால்
கையெடுத்த தீக்கட்டையில் இருந்து
கிளர்ந்த தீ ஒருமுறை
இருளைக் கலைத்து விட்டு என்னை
ஒளிக்குள் கொண்டு போனது!

வெந்திருந்த மேனியில் வலிகள் தெரியவில்லை
வேதனையில் இதயங்கள் நொந்துவிட வில்லை.
காயங்களில் இருந்து கழிவுநீர் கசியவில்லை
தீயிலிருந்து கிளர்ந்த ஒளியில் என்
கருவிழியும் சிவப்பாகி உடல்
உருவேற்றிக் கொண்டது
தீயின் வேகம்.... உடலோடு படர்ந்து கொள்ள
விடியலுக்காய் காத்திருக்கும் என் மேனிக்கு
கட்டுடைப்புக்கள் தேவையாகிப் போனது...

எழுந்து நின்று சுற்றிப்பார்த்தால் எங்கும்
தொப்புள் கொடியுறவு எரிந்து கொண்டிருக்க
கொலைக் குற்றவாளிகள் பச்சைப் போர்வையால்
போர்த்திக் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்!
புத்தனின் பஞ்ச சீலத்தைப் பாடிக்கொண்டு இருந்தார்கள்.
போதிமரங்களுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தார்கள்.
தீயில் கருகிக் கொண்டிருக்கும் என் உறவுகள்
தன் இறப்பிற்கும் இறந்து போன ஆசைக்கும்
இலாப நட்டம் பார்க்காமல்
பழி தீர்த்துக் கொள் என்றுவிட்டுத் தீயாகி எழுந்து
என்னொடு கலந்து விட்டன.

தயாரப்படுத்தலுடன் கிழக்குச் சூரியனின்
வருகைக்காய் காத்திருக்கின்றேன்...
வெந்து போன மேனியில் இப்போது காயங்கள்
கொஞ்சம் கொஞ்சமாக ஆறிப்போனது.
மனதுக்குள் மட்டும் தீ எரிந்து கொண்டிருக்கிறது.
தொப்புள் கொடியுறவின்
இறுதியாசையை நிறைவேற்ற வேண்டும்.
கிழக்குச் சூரியன் வரட்டும்....


அன்பரசன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வீறு 7

அவளைப் பார்த்த பரநிருபசிங்கன் ஒரு கணம் தான் இருப்பது பூலோகமா என்பதை மறந்தான். தேவதையைப்போல மெல்ல நடந்து வந்து அவனருகே குனிந்து பழத்தட்டை வைத்ததும் பின்னலென ஓடிமறைந்தாள் அவள். அவள் ஓடிய திசை மீதே தன் பார்வையைச் செலுத்தி மெய்மறந்திருந்த பரநிருபசிங்கனின் தோள்மீது கைவைத்துத் திருப்பினான் மாமன். பரநிருபன் திடுக்குற்றுத் திரும்பினான்.

## வடிவழகி





சிங்கவாகுவின் இறப்புக்கான காரணம் என்ன? வைத்தியர்களின் தீவிர சோதனைகளின் முடிவு அதிர்ச்சி தருவதாயிருந்தது. அதை மன்னனிடம் எப்படிச் சொல்வது என்பது சோழர்குலத்திலிருந்து வந்த அமைச்சன் சுபதிட்டாவின் தலைவிதியாயிற்று

"உணவில் நஞ்சு.... ஆ." தமிழர்கள் எந்தவகையிலும் எதிரிகளை வதைப்பார்கள் ஈட்டி முனையிலும் அம்புநுனியிலும் விசம் தடவிக் கொல்வர் ஆனால் உண்ணும் உணவில் நஞ்சு கலப்பது பாவம் என்ற கருத்துடையவர்கள் சிங்கவாகுவின் உணவில் நஞ்சு கலக்கும் அளவுக்குப் பாதகம் யார் செய்தார். "ஐயகோ அவன் விதி இப்படியாயிற்றே" மன்னனின் மனைவி அம்மங்காதேவி கிழிந்தநாராய் கட்டிலில் கிடந்தாள் மன்னனின் மனமும் கலங்கிப்போய்க் கிடந்தது என்ன செய்வது சாதாரண குடிமகனைப் போல இன்ப துன்பங்கள், ஆசாபாசங்களெல்லாம் மன்னர்களுக்கு ஏது மறுபடியும் இராட்சியப்பாரம் பரராசசேகரனை அழுத்தியது சுற்றுவட்டமாக இருந்த அந்த மாளிகை ஒளியிழந்து போய்கிடந்தது அவ்வேளை அரச நெருக்கடிகள் காரணமாக சுபதிட்டா பேசவேண்டியதாயிற்று. "மன்னா துயரப்பட்டு என்ன செய்வது அரசகட்டில் நிரப்பப்பட வேண்டும்" என்றார் தொடர்ந்து நாம் அடுத்துள்ள குமாரன் பண்டாரனுக்கு முடிசூட வேண்டும் அதைத்தவிர வேற வழியில்லை. (வன்னியை ஆண்ட பண்டாரன் அல்ல அவன் முள்ளியவளையை ஆண்டவன் இவன் வேறு)

கால் நடைப்பயணிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு கடலேரியைக்கடக்க யானைகளையே பயன்படுத்தி வந்தனர் தெற்கே வன்னியின் கரையில் யானையின் முதுகிலேறி இயக்கச்சிக்கரையில் இறங்கினால் யானைப்பாகனுக்கு படிப்பணமாக காப்பணம் பெறுவான் இப்படி அநேக யானைப்பாகர்கள் தொழிலாக இந்தப் பயணிகளைக் கரைசேர்த்தனர் ஆனையிறங்குதுறையே காலப்போக்கில் ஆனையிறவாக மாறிவிட்டது போலும். அன்று அந்த துறையில் காலையிலிருந்தே சனக்கூட்டம் மிகுந்திருந்தது காரணம் நாளை மறுநாள் சுன்னாகப் பட்டினத்தின் அங்காடி கூடும் நாளாகும் அதனைக் காண அராபிய வணிகர்களும், கிரேக்கத்திலிருந்து யவன வணிகர்களும் வருவார்கள் ஆதலால் சனக்கூட்டம் மிகுதியாகவே காணப்படும் அங்காடி வியாபாரிகள் தவிர மேலும் இருவர் அ...

ஹே..... அலியா ...... அலியா என்றழைத்து தம்மை இனங்காட்டிக் கொண்டனர். வரிந்து கட்டிய தலைப்பாகை ஒற்றைக்குடுமி அதன்கீழ் தொங்கினாற் போல முடியப் பெற்றிருந்தது கட்டம்போட்ட துண்டு இடையில் கட்டி மேலாடையற்ற மார்பில் புலிப்பல் பொருந்திய தங்கப்பதக்கம் தொங்கியது கையில் புஜங்களுக்கு கீழே தாயத்துப் போன்ற அச்சரக்கூடு கட்டியிருந்தது கையிலொரு சிறு வேல்க்கம்பு இவர்களைச் சிங்களநாட்டிலிருந்து வருவதைச் செப்பியது.

அக்காலப்பகுதியில் சீதாவாக்கை மாயாதுன்னை என்பவனின் ஆட்சியிலிருந்த அவனுடைய தம்பியான விமலதர்மசூரியன் கோட்டையை ஆண்டு வந்தான் இன்னுமொரு தம்பியான றைகம்பண்டாரன் ரஜரட்டையை ஆண்டான் றைகம்பண்டாரன் இறந்துவிடவே, அப்பிரதேசம் அருகிலேயே இருந்த மாயாதுன்னையிடம் வந்துவிட்டது உண்மையில் சகோதரனின் சொத்தில் தனக்கும் பங்கு தரவேண்டும் என்பது விமலதர்மனின் கோரிக்கை ஏனெனில் இம்மூவரின் தந்தையான புவனேகபாகுவின் முழுப்பாத்தியில் தான் மூன்று மக்களுக்கும் நாட்டைப் பகிர்ந்து கொடுத்திருந்தான் எனவே றைகம் பண்டாரனின் இறப்புக்குப்பின் இருக்கும் நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றான் விமலதர்மன், மாயாதுன்னை அதைக் கொடுக்க விரும்பவில்லை விமலதர்மசூரியன் தன் பேரனான தர்மபாலனை அப்பகுதியின் இளவரசனாக அறிவித்து இளவரசபட்டமும் கட்டினான். இது இப்படியிருக்க. மாயாதுன்னையின் மனைவிக்கு தீராத நோய் ஏற்பட்டது எத்தனையோ வைத்தியர்கள் சிகிச்சை செய்தும் பலனளிக்கவில்லை அத்தனை வைத்தியர்களின் மருந்துகளையும் விழுங்கியும் அவளைப் பிடித்த நோய் திருப்தியடையவில்லை இந்நிலையில் தான் யாத்திரகன் ஒருவன் அருமையான வைத்தியர் இருப்பதைக் கூறினான் பின்நாளில் அற்புதமான மருத்துவநூலை பரராசசேகரமாலை என்ற பெயரில் வெளியிடப்படவுள்ள அந்தப் பரராசசேகரனைப் பற்றிக் கேள்வியுற்ற மாயாதுன்னை உடனடியாகவே ஒரு அன்புமடலை எழுதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தான்.

அந்தமடலைச் சுமந்துவரும் தூதுவர்களைத்தான் நாம் ஆனையிறவுத் துறையில் பார்த்தோம். அன்றிரவு அவர்கள் அப்பா முதலி மாளிகையில் கையளித்த ஓலையில் ராஜாதி ராஜ பரராஜ சேகரதுரை பரநிருபசிங்கருக்கு. ஜயசிறி! நண்ப என் மனைவி தீராத வினையால் ஆக்கினையுறுகிறாள் நீர் வந்து அதை மாற்றி அவளை மகிழ்ச்சியாக வாழத்தந்து அருளவேண்டுமாய் மனவிருப்புற்றுள்ளேன் இந்தபடிக்கு இவ்வோலை கண்டு ...விரும்பபடி வேண்டிக் கொள்கிறேனாகவும்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive



பரநிருப சிங்கனின்
மனம் வடிவழகியில் நிலைத்து நின்றது.
பெயருக்கேற்ற அழகி... ஆ... நல்லூர்
ராசதானிக்குப் பொருத்தமான பெயர்.
பொருந்தமான அரசி. நல்லூர் இப்போது
எப்படியிருக்கும் நான் வந்து ஏறக்குறைய
இரண்டு மாதங்களாகி விட்டன. இப்போது
வடிவழகிக்கும் எனது நினைப்பு இருக்குமா?

அவனுடைய ஏக்கத்துக்கரிய
அந்த வடிவழகி... ஒருவனுடைய
அணைப்பில் கிறங்கிப் போயிருந்தாள்.

அரச இலட்சினை பொறித்து அனுப்பப்பட்ட அந்த ஓலையைக் கண்டதும் பரநிருபசிங்கன் அடப்பம் கட்டிப் புறப்பட்டான்.

தந்தையிடமும் தமையன் பண்டாரனிடமும் விடைபெற்றவன் மாமன் அப்பாமுதலியையும் காணச் சென்றான். அப்பா முதலியின் மாளிகை வாயிலை அவன் அடைந்த போது அப்பா முதலி உணவு உண்டு கொண்டிருந்தான் அவனைக் கண்டதும் அவசியம் போகவேண்டுமா? என்றொரு கேள்வியைக் கேட்டார் 'ஆம், அப்படித்தான் நினைக்கிறேன் பண்டாரனின் பதிலைக் கேட்டவாறே கைகளைத் துடைத்தவன் மருமகனின் அருகே வந்து அமர்ந்தான்.

"ம்...... விரைவில் திரும்ப வேண்டும்".

"நான் செல்லும் காரியம் விரைவில் முடிந்தால் விரைவில் வருவேன்"

"எப்படியும் கார்த்திகைக்குள் வந்து விடுங்கள்" என்ற அப்பாமுதலி அவனை அழைத்துக்கொண்டு முன் அறைக்குள் வந்தான்.

"பார்க்கலாம்" என்று பரநிருபன் அளித்தபதில் அவனைத் திருப்தி செய்யவில்லை அங்கிருந்த மஞ்சத்தில் மருமகனை அமரச்செய்து தானும் அருகில் அமர்ந்தான். அப்போது பழத்தட்டைக் கையிலிருத்திவாறு அவ்வறைக்குள் நுழைந்தது ஒரு முழுநிலவு ஆகா கொடுமையான முட்களைக் கொண்ட ரோசாவில் பூத்த மலர்களைப் போல் சேற்றிலே செந்தாமரை பூப்பது போல், அப்பாமுதலியின் மனைவிக்கு இந்த வடிவழகி பிறந்திருந்தாள். ஒரு தட்டிலே பழத்தட்டுடன் மறுகையிலே தொங்கியதன் சிற்றாடையையும் சற்று உயர்த்தி நடக்க வசதியாகப் பிடித்துக்கொண்டு மெல்ல நடந்து வந்தாள் அவள் மேலாடை இன்றி தனி மார்புக்கச்சு மட்டுமே அணிந்திருந்தாலும் பின்னலிடாத அவள் கருங்கூந்தல் இரு மார்பிலும் மேலாடை பரவியது போல் பரவிக்கிடந்தது ஆரவாரமின்றி அடங்கிக் கிடந்த கடகங்கள் காதில் சிமிக்கி, மயிர்மாட்டி, வாளி, குடை என்பனவும் கட்டாத மயிர் முகத்தில் பொற்சங்கிலியால் நெற்றியிலிருந்து பின்தலையுடன் இணைத்துப் பிணைத்திருந்தாள் நெற்றிச் சுட்டியின் கீழ் செந்தூரப்பொட்டு, காசுமாலை, அட்டியல், பதக்கம் சிற்றாடையை நழுவவிடாமல் அணிந்த சிவப்புக்கல் பதித்த ஒட்டியாணம் இவையனைத்தும் அவள் சிவந்தமேனியில் பொருந்தி தம்மை அழகுபடுத்திக் கொண்டன. அவள் வயதுக்கு வந்து பலமாதங்களின் பின் இன்றுதான் அவளைப் பார்த்த பரநிருபசிங்கன் ஒரு கணம் தான் இருப்பது பூலோகமா என்பதை மறந்தான். தேவதையைப்போல மெல்ல நடந்துவந்து அவனருகே குனிந்து தட்டை வைத்ததும் பின்னலென ஓடிமறைந்தாள் அவள். அவள் ஓடிய திசை மீதே தன் பார்வையைச் செலுத்தி மெய்மறந்திருந்த பரநிருபசிங்கனின் தோள்மீது கைவைத்துத் திருப்பினான் மாமன் பரநிருபன் திடுக்குற்றுத் திரும்பினான். "இளவரசே இங்கு அதிக விசயங்கள் உனக்காகக் காத்திருக்கின்றன? என்று மகள் சென்ற திசைநோக்கிக் கூறியவன் "நீ.... வருவாய்..." என்று அவன் பார்வையின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தினான். பரநிருபசிங்கனின் இதயம் அப்பாமுதலியின் மாளிகையிலேயே சுழன்று கொண்டது அவனது புரவி கச்சாய்த்துறை நோக்கிச் சென்றது அவனும் அவனுடைய புரவியும் பூநகரித்துறை கடந்து மாதோட்டம் செல்லும் நெடுஞ்சாலையில் நடக்க வாரம்பித்தனர்.

பாலியாற்றங்கரையிலிருந்து செல்வதே காங்கைகுறைந்த போக்குவரத்து என நினைத்தவன் துணுக்காய் வழியாக [illegible]மம் சென்று அந்த நெடுஞ்சாலையூடியே



செட்டிக்குளம் சென்று அப்படியே காடுகளுடாகச் சீதாவாக்கையை அடைந்தான் ஏறக்கறைய ஒருவாரமாகக் காடுகளுடன் போராடி வெளியே வந்தாலும் அவன் அரண்மனையை அடைய மேலும் ஒரு வாரமாயிற்று. இவ்வளவு கஷ்டப்பட்டுத் தன்னிடம் வந்த நண்பனை ஆரத்தழுவி வரவேற்றான் சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை அவனுக்குச் செய்ய வேண்டிய வரிசைகளைக் கிரமமாகச் செய்தான். மாயாதுன்னவின் மனைவிக்கு கண்டிருந்த நோயை இனங்கண்டபின் வைத்தியத்தை ஆரம்பித்தான் பரநிருபசிங்கன் நசியம், குடிநீர், பத்தியம், வேது எனப் பலமுறைகளில் சிகிச்சை நடைபெற்றது முறைப்படி கையாளப் பட்ட உள்ளூர் மூலிகைகளின் சிறப்பில் வருடக்கணக்கில் ஆக்கினைப் படுத்தியநோய் ஒரே மாதத்திலேயே அவளை விட்டகன்றது மாயாதுன்னையின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை சீதாவாக்கைப் பகுதியெங்கும் சுற்றிக் காண்பித்தான் சென்ற இடமெங்கும் விருந்துகள் களியாட்டங்கள் என எங்கும் அவன் புகழைப்பரவச் செய்தான். நண்பனின் அன்பிலும் உபசரணையிலும், பரநிருபன் தன்னை மறந்து களித்திருந்தான் மாயாதுன்னை அவனை மலையருவிக்கு அழைத்துச் சென்றான் இடையில் சிற்றாடையுடன் மார்புக்கச்சையணியாத சிங்களத்துப் பெண்கள் அணிவகுத்து மலர்தட்டுகளுடன் வழிபாடு செய்யப் போய்க் கொண்டிருந்தனர் இதைக்கண்டதும் பரநிருபன் நெஞ்சில் பழத்தட்டுகளுடன் வந்த வடிவழகியின் தோற்றம் மின்னலென வரவே அவன் துயரத்தில் ஆழ்ந்தான். திடீரென நண்பனிடம் மாயாதுன்னை யாலுவோமொனாவத கல்பனாவ (நண்பா என்ன யோசனை) என்றான். நே மொக்குத் நே (இல்லை ஒன்றுமில்லை) தன்னைச் சுதாரித்தக் கொண்டான் பரநிருபன் என்றாலும் நண்பனிடம் "மம... யண்டோண ரஜத்துமா" என்றான் "அய்... ஒயா யன்ன" "மட்ட மொகுத் கொமத்தி நே ஹதிசயன் யன்ன கொமத்தி" (எனக்கொன்றும் பிடிக்கவில்லை நான் விரைவாகப் போகவேண்டும்) சரி சரி அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்றான் மாயாதுன்னை.

பரநிருப சிங்கனின் மனம் வடிவழகியில் நிலை[illegible]

பொருத்தமான பெயர் பொருந்தமான அரசி நல்லூர் இப்போது எப்படியிருக்கும் நான் வந்து ஏறக்குறைய இரண்டு மாதங்களாகி விட்டன. இப்போது வடிவழகிக்கும் எனது நினைப்பு இருக்குமா? அவனுடைய ஏக்கத்துக்கரிய அந்த வடிவழகி... ஒருவனுடைய அணைப்பில் கிறங்கிப் போயிருந்தாள்.

"பிரபு நீங்கள் இந்த நாடாளு மன்னர் நான் வெறும் மந்திரிகுமாரி" இதைக்கேட்டவன் கலகலவென நகைத்தான்

"வடிவழகி... அமைச்சர் அரசகேசரியின் மகளான வள்ளியம்மையை எமது அரசர் மணக்கவில்லையா? அமைச்சர்களின் புதல்வியரை அரசர்கள் மணப்பது புதிதல்லவே அப்படியிருக்க நான் அமைச்சர் அப்பா முதலியின் மகளை மணம்புரியக் கூடாதா"

"கூடாது சங்கிலியா" இடியென எழுந்தது ஒரு குரல் வடிவழகியும் சங்கிலியும் திகைத்துத் திரும்பினர்.

(தொடரும்)



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## காலத்தின் பதிவுகளைக் காவிச்செல்லும் படைப்புக்கள் உருவாகவேண்டும்



சமூகவிடுதலை நோக்கிய ஒரு எழுத்துப்போராளியாக கடந்த கால்நூற்றாண்டுகளாக தமிழ் எழுத்துத் தளத்திலே அறியப்பட்டிருப்பவர் திருமதி. ஆதிலட்சுமி சிவகுமார். சிறுகதை, கவிதை, பாடல்கள், வானொலி நிகழ்ச்சிகள், விமர்சனங்கள், கட்டுரைகள் என தனது தடத்தினை எழுத்துலகில் ஆழப்பதித்திருக்கும் இவர், புலிகளின்குரல் வானொலியின் நிகழ்ச்சித்தயாரிப்பாளருமாவார். கடந்த 17ஆண்டுகளாக இப்பணியை ஆற்றிவருகிறார். இரண்டு சிறுகதைத்தொகுப்புக்கள், ஒரு கவிதைத்தொகுதி, பலவிடுதலைப்பாடல்கள் என தொடர்ந்து தனது பாதையில் பயணிக்கிறார் இவர். விடுதலை என்பதை ஆழமாக நேசித்து தன்னுடைய நேசிப்புக்குரிய எழுத்தை அதற்கான ஆயுதமாக வரித்து ஓய்வின்றி உழைத்துவரும் திருமதி.ஆதிலட்சுமி அவர்களை எரிமலை நேயர்களிற்காக நேர்காண்கிறோம்.

**கால்நூற்றாண்டாக படைப்புத்தளத்தில் இருக்கிறீர்கள். உங்களுடைய படைப்பை எதனுடைய கருவியாகப் பார்க்கிறீர்கள்?**

படைப்புக்கள் என்பது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவல்லவை. எனவேதான் சமூகத்தவர்களின் அறியாமையைப்போக்கி தெளிவுபடுத்தப் பயன்படும் ஒருகருவியாக படைப்புக்களை நான் எடுத்துக்கொண்டேன்.

**இலக்கியத்துறையில் படைப்புக்கள் பலவகைசார்ந்தவை. நீங்கள் எந்தவகையிலான படைப்புமுறையை கைக்கொள்கிறீர்கள்?**

சிறுகதைகளைத்தான் நான் கூடுதலாக எழுதிவருகிறேன். எங்களுடைய பாரம்பரியம் என்பது காலங்காலமாகக் கதைகேட்கும் பண்பினூடாக வந்தது. ஒருவருடைய கதையை இன்னொருவர் கேட்பதென்பது மிகவும் சுவாரசியமானது. நானும் இதேபோன்றுதான் கதைகேட்கும் பண்பினூடாகத்தான் வளர்ந்தேன். சிறுவயதில் மனுநீதிக் கதைகள், பஞ்சதந்திரக்கதைகள் போன்றவற்றைப் படித்தும் கேட்டும் அறிந்தது மறக்கமுடியாதது. எனவேதான் சிறுகதைகள்மூலம் எனது கருத்துக்களை வெளிப்படுத்திவருகிறேன்.

**சிறுகதைகளை எழுதிவரும் நீங்கள் கவிதைகளையும் எழுதுகிறீர்கள். ஒருகவிதைத்தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறீர்கள். கவிதை தொடர்பான உங்களது கருத்து யாது?**

சிறுகதைகளை வாசிப்பதற்கு காலம்தேவை. ஆனால் கவிதை என்பது இலக்கைநோக்கி எய்யப்பட்ட அம்பு என்றே நான் பார்க்கிறேன். எய்யப்பட்ட அம்பு எப்படி இலக்கைநோக்கி சென்றடைகிறதோ அதேபோன்றுதான் கவிதைகள் வாசகனுடைய மனதை சென்றடைகின்றன.

**25வருடங்களில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் எந்தளவிற்கு உங்களது தடங்களைப் பதித்திருக்கிறீர்கள்?**

எனது படைப்பின் பின்புலமாக தமிழ்மொழியாளுமை இருந்துவருகிறது. இத்தமொழியாற்றலானது எனது அப்பாவிடமிருந்தே என்னைப்பற்றிக்கொண்டது. அப்பா ஒரு தமிழ்சார்ந்த நூல்கள், அறிவியல்நூல்கள் படிப்பதற்கான வசதிகள் நிறையவே கிடைத்தன. இதுமட்டுமல்லாமல் எங்களை சூழ உறவுகள் இருந்தார்கள். சித்தப்பா, பெரியப்பா, மாமா என்று எல்லோரும் பகலில் தோட்டவேலையை முடித்துக்கொண்டு இரவில் எங்களுடைய வீட்டு விறாந்தையில் ஒன்றுகூடுவார்கள். மறுநாள் தோட்டத்திற்கு தேவையான சும்மாடு (நாற்றுக்களுக்கு வெயில் படாதவாறு வைக்கோலினால் முறுக்கி நாற்றுக்குமேலாக போட்டுவிடுவது. இந்தவைக்கோலானது பின்னர் உரமாக நாற்றுக்குப் பயன்படும்.) முறுக்கும்வேலையைச் செய்துகொண்டும் சிலர் பனையோலை கிழித்துக்கொண்டும் இருப்பார்கள். பனைஓலையை மாட்டிற்கும் சர்க்கை விற்பதற்குமாக பயன்படுத்துவார்கள். சர்க்கு வேலிகட்டுவதற்கும் கிடுகுவேய்வதற்கும் பயன்படுத்தப்படும். இந்தவேலையை இரவில்தான் செய்வார்கள். இந்தசந்தர்ப்பத்தில் சமூகக்கதைகள், அரசியல்கதைகள் என சூட்டாக விவாதிப்பார்கள். அப்போது அன்றைய பத்திரிகையை நான் சின்னவளாக இருந்தபோது என்னையும் அழைத்து கதைகள் வாசிக்கச்சொல்லி வாசிப்பது எனது வேலை. இது எனக்கு மேலும் பத்திரிகைகளையும், கதைகளையும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியதோடு நல்ல கதைகளைத் தேர்ந்தெடுத்து அன்றைய இராப்பொழுதிற்காகத் தயார்ப்படுத்துவதிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டேன். படிக்கும் காலத்தில் பள்ளிக்கூடத்தில் இடம்பெறும் இலக்கியப்போட்டிகளில் தவறாது பங்குகொள்வேன். காரணம் அப்பா பண்டிதர் என்பதால் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பங்கெடுக்கக்கூடியதாக இருந்தது. சுவாரசியமான சம்பவம் என்னவென்றால் பள்ளிக்கூடத்தில் மாத்திரம் போட்டி என்று இல்லாமல் எனக்கும் எனது அண்ணாவுக்குமிடையிலும் போட்டி நிலவியது. எனக்கும் அண்ணாவுக்கும் இடையிலான வயதுவேறுபாடு என்பது குறைவானது. இவ்வாறுதான் ஓர் சந்தர்ப்பத்தில் அண்ணா தயார்செய்துவைத்திருந்த பேச்சை அவருக்குத் தெரியாமல் படித்துப் பேச்சுப் போட்டியில் பங்குகொண்டுமிருக்கிறேன். அந்தளவிற்கு இலக்கியத்துறையில் ஆர்வமிருந்தது.

**... உங்களுடைய எழுத்துலகத்தின் தொடக்கத்தைக்**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## வாழ்த்துரை

மண்ணையும் மக்களையும்
கண்ணென நேசிப்பவர் ஆதிலட்சுமி
இதன் விளைவே இக்
காதக் கதிர்க் கொத்து
சத்தியஜித்தே என்னும்
உலகப் புகழ்பெற்ற கலைஞன்
மண்ணையும் மக்களையும்
தனது கமராவால்
படம் பிடித்தார்
ஆதிலட்சுமி அவர்களும்
தன் பேனா முனையால்
சமுதாயத்தினைப்
படம் பிடிக்கின்றார்
"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்" என்னும்
வீரவரிகளைத் தன்
இலட்சியமாய்க் கொண்டு
கலையுலகில் பிரவேசித்துள்ளார்
அவரின் எழுத்துத் துறை
வளர்ச்சிக்கு எனது
வாழ்த்துக்கள்.

எஸ். வெகுராணசுந்தரம்
(சிந்திரன் ஆசிரியர்)

பாடசாலை மாணவியாக இருக்கும்போதே வெளிஊடகங்கள் மீதான ஈர்ப்பின் காரணமாக நிறையவே எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதற்கேதுவாய் எங்கள் வீட்டிலேயே பலவகையான பத்திரிகைகள், (இலங்கை) வானொலிகேட்டல், புத்தகங்கள் வாசித்தல் என பல்வகையான துறைசார்ந்த வசதிகள் நிறைந்திருக்கவே முதன்முதலாக ஒருசிறுகதையை ஈழநாடு பத்திரிகைக்கு எழுதியிருந்தேன். துரதிஸ்ரவசமாக கதையானது வெளிவரவில்லை. எனினும் மனம் சோர்ந்துபோகாமல் மீண்டும் ஒரு சிறுகதையை அதாவது 'உரிமையில்லாத உறவு' தினகரனின் புதன் வசந்தம் பகுதிக்கு அனுப்பியிருந்தேன். அது அடுத்த புதன்கிழமையே பத்திரிகையில் பிரசுரமானது. 20-05-1982 இல் அது வெளிவந்தது. இந்தச் சிறுகதையின் பிரசுரமானது எனது எழுத்தாற்றலில் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக சிந்தாமணி, தினகரன் எனப் பல பத்திரிகைகளில் எனது படைப்புக்கள் வெளியாகின.

**உங்கள் கவிதைப் பயணம் பற்றிக்கூறுங்கள்?**

எனது முதலாவது கவிதை இதுதான் என்று கூறமுடியவில்லை. ஆனால் (இலங்கை) வானொலிக்கு நிறையக்கவிதைகள் எழுதியிருக்கிறேன். இதைவிட சிரித்திரன், உதயன், மாலைமுரசு என பல பத்திரிகைகளுக்கும் எழுதியிருக்கிறேன். 1990ம் ஆண்டுகளிற்கு முற்பட்ட ஈழமுரசு பத்திரிகையிலும் கணிசமாக யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்ற அனைத்துப் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கின்றேன்.

**உங்களுடைய படைப்புக்கள் நிறையவே நூலுருவ[ம்] பெற்றிருக்கின்றன. அவைதொடர்பாக உங்களுடைய [...]க்கள்?**

எனது படைப்புக்களின் வெளியீடு என்றால் 90ம் ஆண்டு 'புயலை எதிர்க்கும் பூக்கள்' எனும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருந்தேன். இந்தப் புத்தகத்தை சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் அவர்களுடைய உந்துதலாற்தான் என்னால் வெளியிடமுடிந்தது. அந்தக்காலகட்டத்தில் எவ்வளவுதான் எழுதியிருந்தாலும் ஒரு பிரபலமாகாத நான் இந்தச் சிறுகதைத்தொகுப்பை எப்படி வெளியிடமுடியும்? என்று தயங்கியவேளை, ஆசிரியர் சுந்தர் அவர்கள் அது ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்லி, புத்தகத்தின் பின்அட்டைக்கான குறிப்பையும் தந்து அந்தச் சிறுகதைத்தொகுப்பை வெளியிடுவதற்கான மனத்தைரியத்தையும் தந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது படைப்புத்துறையில் ஏற்பட்ட ஒரு முக்கிய சம்பவத்தைக் கூறலாம் என எண்ணுகின்றேன். திரு.சுந்தர் அவர்கள் என்னை சத்தியஜித்தோடு ஒப்பிட்டு எனது புத்தகத்தில் எழுதியிருந்தார். 'மண்ணையும் மக்களையும் நேசிக்கும் கலைஞரான சத்தியஜித்தைப் போலத்தான் இப்போதிருக்கும் ஆதிலட்சுமியும்' என எழுதியிருந்தார். பின்னர் ஒருதடவை என்னை அழைத்து தன்னிடம், ஒரு பெரியவர் 'நீங்கள் அந்தப்புத்தகத்தில் ஆதிலட்சுமியைப் பற்றி கொஞ்சம் மேலதிகமாகத்தான் எழுதியிருக்கிறீர்கள்' என்று சொன்னதாகவும், ஆனால் அதைமறுதலித்து 'இன்றைக்கு ஆதிலட்சுமிக்கு அந்தத் தகுதி இல்லையென்று நீங்கள் கருதலாம். ஆனால் எதிர்காலத்தில் அவர் அந்தஇடத்தை நிச்சயம் பிடிப்பார்' என்று நம்பிக்கையோடு அந்தப்பெரியவரிடம் தான் கூறியதாகவும் சொன்னார். அவர் சொன்னதைக்கேட்டபோது எனக்கோர் உணர்வுவந்தது. அந்தப் பெரியமனிதரோடு சுந்தர் சவால்விட்டிருக்கிறார். அவரின் வார்த்தையைக் காப்பாற்றவேண்டும் என்று உறுதியெடுத்துக்கொண்டேன். அதைநிறைவேற்றியும் வருகின்றேன் என்றுதான் நான் நினைக்கிறேன்.

**அதற்கு அடுத்துவெளியான நூல்களைப்பற்றி?**

2004ஆம் ஆண்டு வெளியான 'என்கவிதை' என்ற கவிதைத்தொகுப்பு. தினசரிப் பத்திரிகைகளே கொப்பித்தாள்களில் அச்சிடப்பட்டு வெளிவந்த இந்த இக்கட்டான காலகட்டத்தில் எனக்கொரு புத்தகம் வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. தமிழீழப் பெண்கள் ஆய்வுநிறுவனம் 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில்வைத்து இந்தக் கவிதைத்தொகுதியை வெளியிடுவதாக இருந்தது. ஆயிரம் புத்தகங்கள் அச்சிட்டும் யாழ்.இடப்பெயர்வு காரணமாக அவற்றை வன்னிக்குக் கொண்டுவரமுடியாமற் போய்விட்டது. இதனால் அவர்கள் என்னிடம் வந்து கதைக்கவோ காணவோ விரும்பாமல் பயத்துடன் இருந்தார்கள். ஆனால் நான் எந்தக்கவலையும் அடையவில்லை அதைப் பெரிதுபடுத்தவுமில்லை. மீண்டும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு இருந்தது. வன்னிக்கு இடம்பெயர்ந்தபின்பும் தொடர்ந்து எனது எழுத்துப்பணியை தீவிரமாகச் செய்துகொண்டிருந்தேன். அதிஸ்ரவசமாக அக்கவிதைகளை அச்சிடுவதற்கு முன்னர் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களிற்கு ஒரு பிரதியை பெண்கள் ஆய்வு நிறுவனத்தினர் அனுப்பியிருந்தார்கள். வன்னிக்கு வந்தபிறகு அந்தக் கவிதைப்பிரதியை அவர்களிற்கு அனுப்பிய தலைவர் அவற்றைப் புத்தகமாக வெளியிடும்படி வேண்டியிருந்தார். என்னுடைய எல்லாக்கவிதைகளையும் வெளியிடுவதற்கான சாத்தியம் அப்போது கிடைக்கவில்லை. புத்தகத்தை அச்சிடுவதற்கான அச்சுத்தாட் பற்றாக்குறை.

> உண்மையில் எழுத்து என்பது விலைமதிக்க முடியாதது. எழுத்தை எந்தஇடத்திலும் நான் பேரம்பேசுவதில்லை. எழுத்தால் நிறையச்சாதிக்கலாம். எனது எழுத்து நிறைவாகச் சாத்தித்திருக்கின்றது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

நாலும் சாத்தியமான இடங்களிற்குச் சென்று, என்னுடைய கவிதைகளை பெண்கள் ஆய்வு நிறுவனம் வெளியிட இருக்கிறது. பேப்பர் இருந்தால் தாங்கோ என்றுகேட்டு ஆங்காங்கே என்னால் இயன்றவற்றைத் திரட்டிக் கொடுத்தேன். அதனால் அதனைப் பெரியபுத்தகமாக வெளியிடமுடியாமற் போயிற்று. கவிஞர் புதுவைஇரத்தினதுரை அவர்களோடு கதைத்தபோது ஆரம்ப காலக்கவிதைகளை முதற்பதிப்பிலும், பிற்பட்டகாலக் கவிதைகளை இரண்டாவது பதிப்பிலுமாக வெளியிடுவதாக முடிவெடுக்கப்பட்டது.
ஆரம்பகாலக்கவிதைகள் மட்டும் அந்தத் தொகுதியில் வெளிவந்ததால் என்னுடைய அந்தக்கால வளர்ச்சி புத்தகத்தில் பதிபடவில்லை. அதாவது முழுமையான எனது ஆளுமையை வெளியிடமுடியவில்லை என்னும் ஒரு மனக்குறை எனக்கு இருக்கின்றது. அந்தக்குறையை இன்னுமோர் கவிதைத் தொகுப்பு வெளியீட்டில் நிவர்த்திசெய்யமுடியும் என நம்புகின்றேன். மனிதர்கள் எனும் சிறுகதைத்தொகுப்பானது கப்டன் வானதி பதிப்பகத்தின் வெளியீடாக 2006ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் வெளிவந்தது. இந்தப்புத்தகத்தின் அட்டைப்பட ஓவியமானது இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த ஓவியர் புகழேந்தியால் வரையப்பட்டது. இத்தொகுப்பிற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது.

**வானொலியில் ஒரு படைப்பாளியாகவும் அத்தோடு 17 வருடங்களாக நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணிபுரிந்துவருகிறீர்கள். வானொலியென்பது மக்களுடன் இணைந்து பயணிக்கும் ஒருபயணி. அந்தவகையிலேயே உங்களுடைய வானொலிப்பயணிப்பின் ஊடாக உங்களுடைய உணர்வை எப்படி மக்களுக்கு கொண்டு சென்றீர்கள். அதைப்போல மக்களுடைய உணர்வுகளையும் எவ்வாறு புரிந்துகொண்டு பிரதிபலிக்கிறீர்கள்?**

ஆரம்பத்தில் புலிகளின்குரல் வானொலிப் பொறுப்பாளரான பரதன் ஊடாக நான் புலிகளின் குரலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன். 1990ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி புலிகளின்குரல் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் நான் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி புலிகளில் குரலில் பணியாளராக இணைந்திருந்தேன். அப்போது வானொலி தொடங்குவதற்கான முன்னாயத்த வேலைப்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. ஏற்கனவே இலங்கை வானொலிக்கு நிகழ்ச்சிகளை எழுதியமையால் எனக்கு எழுதுவதற்கான தயக்கம் இருக்கவில்லை. அத்தோடு வானொலிகளை அதிகமாகக்கேட்பதால் வானொலியோடு பழக்கப்பட்ட மாதிரியான உணர்வுதான் இருந்தது. எனது அப்பாவினூடாக எனக்குக் கிடைத்த தமிழ்அறிவும் புத்தகங்கள் வாசிப்பதனூடாகப் பெறப்பட்ட அறிவும் ஒருங்குசேர[...] தேசத்திற்கான எனது பங்களிப்பாக எழுத்துத்துறையை[...]

ஆரம்பத்தில் நாங்களே நிகழ்ச்சிகளைத் தயாரித்தோம். பிற்காலத்தில்தான் நேயர்களிடம் இருந்து வரும் நிகழ்ச்சிகளைச் சேர்த்துக்கொண்டோம். வானொலிக்கு ஆரம்பத்தில் எழுதுபவர்கள் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். தங்களுடைய பெயர்கள் வெளிப்படவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். நான் அவர்களுடைய படைப்புக்களைப் பார்த்தவுடனேயே அவர்கள் என்ன சொல்ல முற்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிந்துகொண்டு திருத்தம் செய்து ஒலிபரப்புவதற்கேற்றதான நிகழ்ச்சியாக மாற்றம் செய்வேன். அதுவும் உரியவர்களுடைய அனுமதியோடுதான். இவ்வாறு வானொலிப்படைப்பாளராக நிறைய நேயர்கள் மாறியிருப்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.




தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive
தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

விடுதலைக்கான வானொலியிலே நேயர்களைப் படைப்பாளிகளாக மாற்றுவதென்பது மிகவும் சிரமம்தான். அந்தப் பட்டறிவைப்பற்றிச் சொல்லுங்கள்?

முதலில் அவர்களிற்கு என்ன எழுதவேண்டுமென்று தெரியாது. முதலில் சொன்னதைப்போல தங்களுடைய பெயர் வானொலியில் ஒலிபரப்பாக வேண்டுமென்றே எதிர்பார்ப்பார்கள். வானொலியில் வருகின்ற நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு அந்த நிகழ்ச்சியைப் பின்பற்றி எழுதமுற்படுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாங்கள் அவர்களிடம் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களுடைய அனுமதியோடு அவர்களுடைய படைப்பில் மாற்றங்களைச்செய்து ஒலிபரப்புச்செய்கின்றபொழுது எவ்வாறு அந்தப்படைப்பு மெருகூட்டப்பட்டிருக்கிறது என்று அவர்கள் புரிந்துகொண்டு புதியபடைப்புக்களை எழுதுவதற்கான ஒரு தடைநீக்கியாக செயற்பட்டுவருகின்றேன்.

உங்களது பாடல்கள் பற்றிப் பார்ப்போம், 'விழிமடல் மூடி துயில்கின்ற வேங்கை' என்ற பாடல் எல்லோராலும் பேசப்படும் பாடலாகவும் விரும்பப்படும் பாடலாகவும் இருக்கின்றது. இவ்வாறான இசைப்பாடல்கள் பற்றிய அனுபவங்களை எங்கள் நேயர்களுடன் பகிர்ந்துகொள்ளமுடியுமா?

நாங்கள்ஆரம்பத்தில் வேலைசெய்த காலங்களில் எங்களுடன் வீரமணி ஐயாவும் இருந்தார். அவர் பாடல்கள் எழுதுபவர். அவருக்குப் பக்கத்தில் இருந்து அவர் எழுதிய பாடல்களைப் படிப்பேன். உங்களுக்குத் தெரியும், கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும் என்பதுபோல வீரமணி ஐயா அயலவராக இருந்ததால் நானும் பாடல்கள் எழுதவேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் எப்படி எழுதுவது என்பது தெரியாமல் இருந்தது. ஆனால் பின்னர் வீரமணி ஐயா அவர்களிடமிருந்து பாடல் எழுதும் முறையைக் கற்றுக்கொண்டேன். 91ஆம் ஆண்டளவில் வெளிவந்த உதயம் எனும் ஒலிப்பேழையில் என்னுடைய இரண்டுபாடல்கள் வெளிவந்தன. புலிகளின்குரலின் வெளியீடாக இந்த ஒலிப்பேழை வெளிவந்தது. 'புதுயுகம் ஒன்று பிறந்திட வேண்டும் புறப்பட்டுவா தோழி' , 'ஈழம்மலரப்போகுது எங்கள் இதயம் குளிரப்போகுது' என்ற இரண்டுபாடல்கள் என்னுடையதாகும். தொடர்ந்தும் கரும்புலிகள் ஒலிப்பேழையிலும் என்னுடைய பாடல் வெளிவந்திருக்கிறது. இதுவரைக்கும் பதின்மூன்று பாடல்கள்வரை எழுதியிருக்கிறேன். 'காலை மலரைக் கைகளில் ஏந்தி காலடியில் வந்து நிற்கிறோம்' என்றபாடல் இரண்டு பேர் சேர்ந்து பாடியிருந்தார்கள் ஜெயபாரதியினதும் கமலினதும் குரல்கள் பாடலை உயிர்ப்பித்து இருக்கின்றன. 'விழிமடல்மூடி' என்றபாடல் எனது மனதைத்தொட்ட பாடல். கார்த்திகை மாதம் என்றாலே மாவீரர்களிற்குரிய மாதமாக அவர்கள் நாமம் சொல்லும் மாதமாக நிறைந்திருக்கும். மாவீரர்நாள் சிறப்பு நிகழ்ச்சிக்காக அப்பாடலை எழுதினேன் இப்பாடலை செயல்வீரனின் இசையில் இசையரசனின் குரலில் உயிரூட்டி நல்லதொரு பாடலாக வெளிவந்தது. இந்தப் பாடலின்வெற்றிக்கு நான்மட்டும் உரிமைகொண்டாட விரும்பவில்லை. செயல்வீரன், இசையரசன் என எல்லோரின் கூட்டு முயற்சியில்தான் அந்த வெற்றிகிடைத்தது.

பெண்ணியம் என்றபக்கத்திலே மிகவும் அறியப்பட்டவராக இருக்கிறீர்கள் படைப்பை ஒரு சமூகமாற்றத்திற்கான கருவியாக கையில் ஏந்திய இலக்கியப்போராளியாக சமூக...

படைப்பாளியாக நீங்கள் இதுதொடர்பாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?

உலக சனத்தொகையில் பெண்ணினம்தான் பெருந்தொகையானவர்கள் அதேபோன்று பெண்களிற்குதான் அதிகம் அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்று நான்பார்க்கிறேன். யுத்தசூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அநேகமாகப் பெண்கள்தான். அத்தோடு சமூகரீதியில் பார்த்தால் பாதிக்கப்படுவோரும் பெண்கள்தான். எனவே அநீதிக்கு எதிராக நாங்கள் குரல்கொடுக்கும்போது கூடுதலானவை பெண்கள்மீதான் அநீதிகளிற்கு எதிரானவை என்பதால் அது பெண்ணியநோக்காகப் பார்க்கப்படுகிறது. இதை நான் மனிதகுலத்தின் மீதான அநீதிக்கு எதிரான குரலாகத்தான் பார்க்கிறேன். அதாவது மனிதர்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிரானவையாகத்தான் நான் பார்க்கிறேன். ஆனால் மனிதர்களில் அநேகமானவர்கள் பெண்கள் என்ற காரணத்தால் நாங்கள் பெண்களுக்காக நீதி கேட்பவர்கள் என்று பார்க்கப்படுகிறது. உண்மையில் நான் எப்படிப்பார்க்கிறேன் என்றால் பாரதி சொன்னதைப்போல 'பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா'. நான் சிறுவயதிலிருந்து அவ்வாறுதான் வளர்க்கப்பட்டவள். அநீதியின் பக்கம் சார்ந்துபோகவில்லை என்பதாற்தான் எனது மண்ணின் விடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவாக எனது எழுத்துப்பணியை மேற்கொள்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைசொல்லவேண்டும். எனது பொழுதைப் போக்குவதற்காகவோ அன்றேல் மற்றவர்களுடைய பொழுதைப் போக்குவதற்காகவோ பேனையை நான் தூக்கவில்லை. எமது விடுதலைப்போராட்டத்தின் உண்மைநிலையை எனது படைப்பின்மூலம் வெளிப்படுத்தவே அதைச்செய்கிறேன். எழுத்தை அதற்கான ஒரு கருவியாகவே பார்க்கிறேன். எனது உயிர்போகும் மட்டும் என்னுடைய எழுத்து விடுதலை என்கின்ற இலக்கைநோக்கியே பயணிக்கும்.

நீங்கள் 82 ஆம் ஆண்டிலிருந்து எழுத்துத்துறையில் இருந்துவருகிறீர்கள். ஈழத்தமிழ் எழுத்துலகத்தில் என்பதுகள் தமிழீழவிடுதலைப்போராட்டம், தமிழ்த்தேசியசிந்தனை என்பவை தீவிரம்பெற்றகாலம். இந்தசிந்தனைப் போக்கையும் உங்கள் சொந்த எழுத்துலகம் மற்றும் சமகால எழுத்துலகம் போன்றவற்றை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

எனது அப்பா தமிழரசுக்கட்சியின் தீவிரதொண்டனாக இருந்தவர். அவரூடாக வந்த அரசியல் ஈடுபாடு எனக்கும் கடத்தப்பட்டது. கூட்டங்களில் அப்பா பேசுகின்றபோது அவரது தேசியஉணர்வைப் பார்த்திருக்கிறேன். எனது பாடசாலை நாட்களில் நானும் இனஒடுக்குமுறையின் கொடூரத்திற்குள் சிக்குண்டவள். கல்விமீதானதடை, விகிதாசார அடிப்படையிலான கல்விநடவடிக்கைகள், போர், மற்றும் நான் படித்துக்கொண்டிருந்த காலம் சிங்களக் காவற்றுறையிடமிருந்து இராணுவத்தினரிடம் சிவில் நிர்வாகம் மாற்றமடைகிறது. இந்தக்காலகட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள், பேராதனைப் பல்கலைக்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப்போராட்டம், மற்றும் அந்தப்போராட்டத்தில் கலந்துகொண்ட அனுபவம், இவற்றினூடாக நான்பெற்றுக்கொண்ட அரசியல் ஈடுபாடு, போராளிகளின் வரவு, அப்போது எங்கள் மண்ணில் 33 இயக்கங்கள் இருந்தன. அவ்வளவு இயக்கங்களிற்குள்ளும் எந்த இயக்கம் தமிழ்மக்களின் விடுதலைக்கானது என்பதில் பெருஞ்சிக்கல் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அப்பாவிடம் ...க நிறைய மாணவர்கள் தமிழ்மாணவர்பேரவையில்

உலக சனத்தொகையில் பெண்ணினம்தான் பெருந்தொகையானவர்கள் அதேபோன்று பெண்களிற்குதான் அதிகம் அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்று நான்பார்க்கிறேன். யுத்தசூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் அநேகமாகப் பெண்கள்தான். அத்தோடு சமூகரீதியில் பார்த்தால் பாதிக்கப்படுவோரும் பெண்கள்தான். எனவே அநீதிக்கு எதிராக நாங்கள் குரல்கொடுக்கும்போது கூடுதலானவை பெண்கள்மீதான் அநீதிகளிற்கு எதிரானவை என்பதால் அது பெண்ணியநோக்காகப் பார்க்கப்படுகிறது. இதை நான் மனிதகுலத்தின் மீதான அநீதிக்கு எதிரான குரலாகத்தான் பார்க்கிறேன்.



விடுதலைப்புலிகள் அமைப்புடன் பின்னர் இணைந்துகொண்டார்கள் அவர்களுக்கும் அப்பாவிற்கும் இருந்த உறவு பின்னர் விடுதலைப்புலிகளிற்கும் எங்கள் குடும்பத்திற்குமான உறவாக மாறியது. இந்தச் சந்தர்ப்பத்திற்தான் லெப்.கேணல் திலீபன் அவர்களின் தொடர்பும் கிடைக்கிறது. அந்தவேளையில் விடுதலைப்புலிகள் வெளியிடுகின்ற பிரசுரங்களை மக்கள் மத்தியில் விற்பனைசெய்கின்ற வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அந்தநேரத்தின் காவற்றுறை இல்லாத காரணத்தால் மக்கள் தவறான நடத்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை திலீபன், கிட்டண்ணா இருவரும் இணைந்து மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் கலையை ஒரு கருவியாக எடுத்துக்கொண்டார்கள். வில்லுப்பாட்டு, தெருவெளிநாடகம் எனப் பல்வகைக் கலைவடிவங்கள் ஊடாக மக்கள்மத்தியில் விடுதலை உணர்வை விதைப்பதும் அவர்களைப் பிழையான வழியிலிருந்து மீட்பதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் இதனால் மக்களின் நல்லொழுக்கம் பேணப்பட்டதுடன் சட்டங்கள் இல்லாமலே கலையின் ஊடாக எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையை என்மனமும் ஏற்று எழுத்தை ஒரு கருவியாக ஏந்திக்கொண்டேன்.

சமூக விழிப்புணர்வுக்காகவும் அதனூடான விடுதலைக்காகவும் கலையை பயன்மிகுந்த ஆயுதமாகத் தூக்கிக்கொண்டீர்கள். இதை எந்தளவுக்கு நேசிக்கிறீர்கள்?

உண்மையில் எழுத்து என்பது விலைமதிக்கமுடியாதது. எழுத்தை எந்தஇடத்திலும் நான் பேரம்பேசுவதில்லை. எழுத்தால் நிறையச்சாதிக்கலாம். எனது எழுத்து நிறைவாகச் சாத்தித்திருக்கின்றது என்றுதான் நான்நினைக்கின்றேன்.

விடுதலை என்பதை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

விடுதலையென்றவுடன் நாடு சுதந்திரமடையவேண்டும் என்பதுதான் எங்கள் மனங்களின் அவா. நாடு கிடைத்த பின்னர் அதற்கு அடுத்ததாக நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்ற கேள்வி எங்களுக்கு முன்னால் இருக்கிறது. அடுத்த தலைமுறையை நாங்கள் அனைவரும் தயார்ப்படுத்தவேண்டும் அவர்களுக்குப் போர்க்கருவிகள் மாத்திரம் தெரிந்திருக்கக்கூடாது. இந்தவிடயத்தில் எங்களுடைய தேசியத்தலைவரும் உறுதியாகவும் விழிப்பாகவும் இருக்கிறார். விடுதலைக்குப் பின்னான தலைமுறை இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருக்கவேண்டும். விடுதலைக்காகச் செய்த ஒவ்வொரு உயிர்த்தியாகங்களின் பெறுமதியையும் உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஏனென்றால் யாரும் நாட்டை விற்கவோ அல்லது சூறையாடவோ முற்படுகின்றவேளை அவர்களுக்கு எதிராகப் போராடி மாவீரர்களின் உயர்ந்த அர்ப்பணிப்பின் பயனாகக் கிடைத்த நாட்டை கண்ணை இமைகாப்பதுபோலப் பார்க்கவேண்டும். உலகத்தில் எங்கும் நடக்காத நடந்திராத அர்ப்பணிப்புக்கள், உயிர்க்கொடைகள் எங்கள் மண்ணிற்தான் நடக்கின்றன இவைகளைக் காலப்பதிவாக எதிர்கால சந்ததியினர் முன் சமர்ப்பிக்கவேண்டும் என்பதுதான் நாங்கள் செய்கின்ற கடமையாகும். நாங்கள் மாவீரன் பண்டாரவன்னியனைப் பற்றிக் கூறுகின்றோம் அவருடைய பதிவு கிடைத்ததுதான் இதற்குக் காரணம். எனவே காலத்தின் பதிவுகளைக் காவிச்செல்லும் படைப்புக்கள் உருவாகவேண்டும். அதைச்செய்வது விடுதலை நோக்கிப் பயணிக்கும் எங்களுடைய கடமையாகும்.



## தடைகளைக் கடந்து சாதனை படைத்த இளமாறன்

# சாதித்தது எப்படி?

பதுசியந்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



ஆசிரியர் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை என ஒருபக்கமும் இராணுவத் தாக்குதல்கள் என இன்னொரு பக்கமுமாக சிறிலங்கா அரசுகளின் தமிழ் மாணவர்கள் மீதான அழுத்தங்கள் பாராமுகங்கள் இருந்தாலும் அவற்றையும் தாண்டி எமது தமிழ்க் கல்விச் சமூகம் தன்னை முன்னிலைப்படுத்தி நிலை நிறுத்தி வருகின்றமை சாதனைக்குரியதே. அந்த வகையில் அண்மையில் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையிலே அகில இலங்கை முழுவதிலும் இருந்து தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களுள் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த கிளிபுனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவன் திருமாறன் இளமாறன் 190 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றான் என்ற செய்தி எமது கல்விச் சமூகத்தை பெருமிதத்தோடு தலைநிமிர வைத்தது எனலாம். செய்தியறிந்து அந்த மாணவனைச் சந்திக்க விரைந்தேன். எந்தச் சாதனையையும் நிகழ்த்தி விட்டதாக எண்ணாத அவனது எளிமையான தோற்றம் இவனா அவன்? என என்னை எண்ண வைத்தது. 'தம்பி நீங்களா இளமாறன்' என்ற சந்தேகத்துடன் வினவி சாதனை மாணவனை உறுதிப்படுத்தினேன். 'நான் பெரிதாக எதனையும் செய்துவிட்டதாக எண்ணவில்லை. எவரது வற்புறுத்தலுக்காகவும் நான் படிக்கவில்லை. எனக்கேற்ற கல்வி வசதியையும் அதற்கான தேவைகளையும் பூர்த்தி செய்து தந்த எனது பெற்றோருக்கு நான் நன்றி கூறுகின்றேன். அத்துடன் எனது ஆர்வத்திற்கு ஏற்றவகையில் கல்வியைப் புகட்டிய ஆசிரியர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். அதனை ஒழுங்குபடுத்தி தந்த அதிபர் மற்றும் பெரியவர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்' எனத் தொடர்ந்த மாணவனிடம் நீங்கள் எவ்வளவு நேரம் படிப்பீர்கள் எனக் கேட்டேன். 'சிலவேளை இரவு 11.00 மணி வரையும் படிப்பேன். விடியவும் எழுந்து படிப்பேன். இவ்விடயத்தில் என்னை யாரும் வற்புறுத்தவில்லை' என்றான். அதிகம் பேசாத தன்னைப் பற்றி அலட்டிக்கொள்ளாத அந்தச் சிறுவனின் சாதனைக்கு பக்கபலமாக இருந்தவர்களைச் சந்தித்தேன். முதலில் இளமாறனுக்கு கற்பித்த ஆசிரியை திருமதி நிரஞ்சன் கரோலின் அவர்கள் கூறுகையில் 'இளமாறனை நான் தரம் 03இல் இருந்து கற்பித்து வருகின்றேன். மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட அவனிடம் நிறையத் திறமைகள் இருந்தன. ஒரு தடவை சொல்லிக் கொடுத்தால் அதனைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தது. பெற்றோரும் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருந்தனர். அடிக்கடி என்னுடன் வந்து கதைத்து அவனின் தேவைகளை நிவர்த்தி செய்வார்கள். எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவெனில் அவன் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்துவதற்காக இதர செயற்பாடுகளை ஒதுக்கித் தள்ளி விட்டது கிடையாது. சமகாலத்தில் நடைபெறும் போட்டி நிகழ்வுகள் பேச்சு போன்றவற்றில் மிக ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டான். அவற்றில் வெற்றியும் பெற்றான். படிப்பை விட ஏனைய நிகழ்ச்சிகளிலேயே ஆர்வமாக இருந்தான் எனலாம். விமானத் தாக்குதல்கள் நடைபெற்றால் ஒன்றிரண்டு நாட்களுக்கு பாடசாலைக்கு வரமாட்டான். ஆனால் பின்னர் வந்து அந்தப் பாட விடயங்களை கேட்டு அறிந்து கொள்வான். என்னுடன் சேர்ந்து ஆசிரியர் சத்தியவாணியும் அவனுக்கு கற்பித்திருந்தார் என்பதையும் குறிப்பிடவேண்டும்' என்றார். கிளிபுனித திரேசா பெண்கள் கல்லூரியின் அதிபர் திருமதி ஜெயமதி தனபாலசிங்கம் அவர்கள் தனது மாணவனின் சாதனை குறித்து மகிழ்வுடன் இவ்வாறு கருத்துரைத்தார். 'எமது மாவட்டத்தில் முதலாவதாக வருவான் என்றே எதிர்பார்த்தோம். ஆனால் அவன் அகில இலங்கை நிலையிலேயே முதலாவதாக வந்தது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். விமானக் குண்டுவீச்சு, எறிகணைவீச்சு, வளப்பற்றாக்குறை என்பவற்றுக்கு மத்தியிலும் நாம் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தியே மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தினோம். இது எமது ஆசிரியர்களின் உ[illegible] வலயக்கல்வி தொடக்க [illegible] கருதுகின்றேன். வலயக் கல்வி தொடக்கப் பரிவால் மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்' என்றார். இது தொடர்பாக தொடக்கக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவனேசலிங்கம் அவர்கள் குறிப்பிடுகையில் 'கடந்த பல ஆண்டுகளாக எமது மாவட்டம் தொடக்க கல்விப் பிரிவிலே பின்னடைவுகளைச் சந்தித்து வந்த நிலையில் இளமாறனின் இந்த சாதனை நல்ல மாறுதல்களை தந்திருக்கின்றது. கணனி வசதியுடனேயே ஆரம்பமாகும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் தொடக்க கல்வி நடவடிக்கைகள் எம்மைப்

கடந்த பல ஆண்டுகளாக எமது மாவட்டம் தொடக்க கல்விப் பிரிவிலே பின்னடைவுகளைச் சந்தித்து வந்த நிலையில் இளமாறனின் இந்த சாதனை நல்ல மாறுதல்களை தந்திருக்கின்றது. கணனி வசதியுடனேயே ஆரம்பமாகும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின் தொடக்க கல்வி நடவடிக்கைகள் எம்மைப் பொறுத்த வரை செயற்படுத்த முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் இளமாறனின் இச்சாதனை தடைகளைத் தாண்டியும் நாம் சாதனை படைத்திருக்கின்றோம் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம்

பரீட்சை வருகிறது அல்லது பரீட்சைக்குச் செல்கிறேன் என்ற பதட்டம் அவனிடம் இல்லை. 'பரீட்சைக்கு பயந்த மாணவர்கள் பனடோல் கொண்டு வாருங்கள்' என பாடசாலையில் சொன்னார்கள். என எம்மிடம் வந்து சொன்னவன் படித்ததை எழுதுவதற்கு பயந்து ஏன் பனடோல் போட வேண்டும் என எம்மைக் கேட்டான்.



பொறுத்த வரை செயற்படுத்த முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் இளமாறனின் இச்சாதனை தடைகளைத் தாண்டியும் நாம் சாதனை படைத்திருக்கின்றோம் என்பதைச் சுட்டி நிற்கின்றது. நாம் இம்முறை முதல் முயற்சியாக கிளிநொச்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக 05ற்கு மேற்பட்ட முன்னோடிப் பரீட்சைகளை நடாத்தியிருந்தோம். அவற்றிலேயே இம் மாணவனை நாம் இனங்கண்டு விட்டோம். எத்தகைய கடினமான வினாவிற்கும் மிக சுலபமாக விடை எழுதும் திறன் இவனிடம் இருந்ததைக் கண்டு நாம் அவனை ஊக்கப்படுத்தினோம். இது வன்னிப் பகுதி கல்விச் சமூகத்திற்கே கிடைத்த வெற்றி' என்றார். இவ் விடயங்களைக் கேட்டறிந்த பின் இளமாறனின் கல்விச் சாதனை பற்றியும் அவனின் ஆற்றல் குறித்தும் அறிய அவனது பெற்றோரான கதிருமாறன், திருமதி கனிஸ்ரா திருமாறன் ஆகியோரைச் சந்தித்தேன். 'நாம் எமது மகனை கல்வி விடயத்தில் வற்புறுத்தியது கிடையாது. அவனாகவே படிப்பான். நாங்கள் அவனுக்குத் தேவையான உதவிகளை மட்டும் செய்து கொடுப்போம். தரம் 01 தொடக்கம் கிளிநொச்சி திரேசா பெண்கள் கல்லூரியிலேயே கற்று வருகின்றான். அன்றிலிருந்து வகுப்பில் அவன் முதலாம் பிள்ளையாக வருவான். தானாகவே விடயங்களைத் தேடிப் படிக்கும் ஆர்வம் அவனிடம் இயல்பாகவே இருந்தது. புத்தகங்கள் பத்திரிகைகளை ஆர்வத்துடன் படிப்பான். படிப்பில் ஏதாவது விளங்காவிட்டால் அது தனக்குப் புரியும் மட்டும் எங்களிடம் கேட்டு அறிவான். இயல்பாகவே அமைதியானவன். அந்த விடயத்தையும் நிதானமாக [illegible] இருந்தது.

பரீட்சை நெருங்கி விட்ட போதும் எந்தவிதப் பதட்டமோ அல்லது மேலதிக நேரம் எடுத்துப் படிப்பதோ கிடையாது. பரீட்சைக்குப் போகும் நாளில் கூட வழமையான நேரத்திற்கே எழுந்து மிகச் சாதாரணமாகச் சென்றான். பரீட்சை வருகிறது அல்லது பரீட்சைக்குச் செல்கிறேன் என்ற பதட்டம் அவனிடம் இல்லை. 'பரீட்சைக்கு பயந்த மாணவர்கள் பனடோல் கொண்டு வாருங்கள்' என பாடசாலையில் சொன்னார்கள் என எம்மிடம் வந்து சொன்னவன் படித்ததை எழுதுவதற்கு பயந்து ஏன் பனடோல் போட வேண்டும் என எம்மைக் கேட்டான். இரவு சாதாரணமாக 10.00 - 11.00 மணி வரை படிப்பான். விடிய எழும்புவது குறைவு. பாடசாலை விடுமுறை நாள் என்றால் நன்றாக நித்திரை கொள்ளுவான். நாம் அவனைப் படி என்று நிர்ப்பந்திப்பது இல்லை. பரீட்சை நெருங்கிய காலத்திலும் பாடசாலையில் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளிலும் பங்கு பற்றி முதலாம் பரிசை எடுத்து வந்திருக்கின்றான். திருக்குறள் மனனப்போட்டி, சைவ பரிபாலன சபை நடத்திய மாவட்ட மட்டத்திலான போட்டிகள் பரீட்சைக்கு மிக அண்மையாக நடைபெற்றன. அவை இரண்டிலுமே பங்கு கொண்டு முதலிடம் பெற்றான். கிரிக்கற் சதுரங்கம் போன்றவற்றில் மிக்க ஆர்வம் கொண்டவன் படிப்பு நேரம் தவிர்ந்த முக்கியமாக சிறுவர்களுடன் கிரிக்கற் விளையாடுவான். சர்வதேச கிரிக்கற் போட்டிகள் இடம்பெறும் காலங்களில் தொலைக்காட்சிக்கு முன்னாலேயே அவனது பொழுது போகும். பரீட்சை நெருங்கிய காலத்திலும் அவன் கிரிக்கற் போட்டிகளைப் பார்ப்பதை குறைத்துக் கொள்ளவில்லை. மற்றும் அவன் ஒரு தொலைக்காட்சிப் பிரியன். கூடுதலான அறிவியல் விடயமான படங்கள் செய்திகள் மொழிபெயர்ப்பு படங்கள் என்பவற்றை ஆர்வத்தோடு பார்ப்பான். பரீட்சைக் காலங்களிலேயே அப்படியே அவனது செயற்பாடு இருந்தது. மற்றவர்களை மதிக்கும் பண்பு அவனிடம் மேலோங்கியிருந்தது. திரேசா கல்லூரி மாணவன் அகில இலங்கை தமிழ் மொழி மூலப் பரீட்சையில் முதலிடம் என நாம் வானொலி ஊடாக அறிந்து சொன்ன போது அதை அவன் பெரிதாக பொருட்படுத்தாது 'எனது நண்பர்களுக்கும் பரீட்சை முடிவுகள் வரட்டும்' என்று சொன்னான். குறிப்பாக ஆசிரியர்கள் கூடிய அக்கறை எடுத்து இவனைக் கற்பித்தனர். அவர்களின் அக்கறைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். அதே போல் எமது மகனை கல்வியிலே ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நாம் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம்' என்றார்கள். எத்தனை இடர் வரினும் அத்தனைக் குள்ளாலும் எழுந்து நின்று சாதனை படைப்போம் எனக் காட்டுவதற்கும் மாணவன் இளமாறனை வன்னிக் கல்விச் சமூகம் பாராட்டி மகிழ்கிறது.

சாரங்கன்



# சாரதி

வன்னி வீதிகளில் வாகனம் ஓடத்தெரியாதவர்களை சந்திரனில் வாகனம் ஓடுவதற்கு தெரிவு செய்யலாம். சந்திரனின் மேற்பகுதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகுதாம். திருவிழா முடியக்கலைந்து போன அலங்காரங்கள் போல் சமாதானமும் முடியக் கறுப்பு வர்ணம் பூசப்பட்ட வீதிகள் விழுப்புண் அடையத் தொடங்கி விட்டது. அந்தக் குழிகள் பலருக்கு விழுப்புண் பெறுவதற்கு அனுசரணை வழங்குகின்றன. எனது கண்கள் அடிக்கடி கடிகாரத்தைப் [illegible]

மல்லாவி போகும் பேருந்து வந்து புறப்படும். கால்கள் ஓய்வு கேட்கச் சீமெந்தால் அமைக்கப்பட்ட குந்தில் அமர்ந்தேன். "நீ வேற வேலையில்லை என்டு போட்டு நேரத்திற்கே இங்கு வந்தால் அதுக்காகப் பேருந்து வழமையான நேரத்தை விட முன்னுக்கே புறப்படுமோ?" உரையாடுவதற்கு வேறு எவரும் இல்லாததால் எம்மனம் எனக்கே கூறிக்கொண்டது. முறுக்கி விடப்பட்ட பொம்மைபோல் திடீரென உசாரானது பேருந்துத்தரிப்பு நிலையம். எரிபொருள் டீசலுக்குப் பதிலாக மண்ணெ[illegible]

பயன்படுத்தப்படுகின்றது என்பதை குறிப்பிடாக வெளிப்படுத்த வந்து உறுமி நின்றது. அந்தப் பேருந்து எமது நாட்டில் அதிகம் சோம்பேறிகள் அதிகம் வேகமாகச் செயற்படுவது பேருந்தில் ஏறும் போதுதான். பலசாலிகளும் துடிப்பானவர்களும் வெற்றி பெறுகின்றனர். வாசலில் நெருசல் ஒருகட்டத்தில் உள்ளே எவரும் செல்லவில்லை. ஆனால் வாசலில் நெரிசல் நீடிக்கிறது உள்ளே நுழைந்தவர்கள் நாட்டின் சனாதிபதி ஆசனத்தைக் கைப்பற்றிய பெருமையில் பெருமிதத்துடன் வாசலில் தெரிபவர்களைப் பார்த்து

"வாங்கோ மாஸ்ரர்" அன்பாக அழைத்தார். குனிந்து வீட்டிற்குள் புகுந்தேன் ஆச்சரியத்தால் திகைத்துப் போனேன் சற்று நேரம் பேசாமல் நின்று விட்டேன். காரணம் உட்சுவரில் அந்த ஓட்டுனரை எமது தேசியத் தலைவர் நேரடியாகச் சந்தித்துப் பாராட்டி கௌரவித்து பரிசளிக்கும் புகைப்படம் பெரிதாக்கி சட்டமிடப்பட்டுத் தொங்குகிறது எப்ப...? ஏன்...? எனது வார்த்தைகள் துண்டு துண்டாக வெளிவந்தது அது 2005 ம் ஆண்டு சிறந்த ஓட்டுனராக கருதி என்னை அழைத்துக் கௌரவித்தவர். ஓட்டுனர் கூறினார்.




இரசிக்கின்றனர். நடத்துனர் கையாலாகத்தனத்தில் ஒதுங்கிக் கொண்டார் ஓட்டுனர் கண்சிவந்தார் நடத்துனர். இயலாமையால் ஒதுங்குவதைக் கண்டு கொண்டார். ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்கள் எல்லோரும் மனச்சாட்சி உறுத்தியிருக்க வேண்டும் மனச்சாட்சிக்கும் பஞ்சிற்கும் இடையில் நடக்கும் போரில் பஞ்சியை வெற்றிபெறச் செய்வதற்காக வெளியே பார்த்த வண்ணம் இருந்தார்கள். தனக்குப்பக்கத்தில் இயலாதவர்கள் நின்றால் அதைக் காணாமல் இருந்து விடவேண்டும் இதுவே அவர்களின் இலக்கு. ஓட்டுனர் நடத்துனராக மாறிவிட்டார். "தம்பி எழும்பும் அந்த ஆச்சியை இருக்க விடும். ஆச்சி நிற்கிறது உங்களுக்குத் தெரியேல்லையா" "நானும் காசு குடுத்துதான் போறன் ஏலாத ஆக்களெண்டா பிறகேன் பேருந்தில பயணம் செய்யினம்" "எழும்பி இடத்தைக் குடும் இல்லாட்டில் இறங்கி அடுத்த பேருந்தில் வாரும்" ஓட்டுனர் கடுமையாகி விட்டார்

என்பதை உணர்ந்தவன் எழுந்து இடம் கொடுப்பதற்குள் ஏனைய ஆசனங்களிலிருந்து இயலுமானவர் அருகில் இருந்த இயலாதவர்களிற்கு இடம் கொடுத்தனர். நிற்கிற பெண்பிள்ளைகள் எல்லோரும் பின்னுக்கு வாங்கோ பெண்பிள்ளைகள் பாதை எடுத்து பின்னுக்குச் சென்றனர். சில வாலிபர்களுக்கு அச்செயல் கவலையை உண்டு பண்ணியிருக்க வேண்டும். என்னதான் சிரமப்பட்டாலும் பேருந்து சரியாக 4 மணிக்கு உறுமத்தொடங்கியது. ஒலிப்பேழை மெல்லிசைப் பாடலை ஒலிபரப்பியது. அதைத் தாலாட்டுப் பாடலெனக் கருதியவர்க்கு பேருந்து மாறிமாறி அசைந்து ஏணையிலிட்ட குழந்தை அசைவதைப் போல் அசைந்தது பலர் உறங்கிவிட்டனர் நான் மட்டும் ஓட்டுனரின் திறமையை அவதானித்தபடி அமர்ந்திருந்தேன். ஓட்டுனர் மிக லாவகமாகப் பேருந்தைச் செலுத்துவதை எனது கண்[illegible]த்துக் கொ[illegible]து. பேருந்தில்

குலுக்கலை ஏற்படுத்தாமல் செல்கிறது இயன்றவரை வேகத்துடன் அதற்காக அவன் எண்ணமும் உடலும் எவ்வளவு கஷ்டப்படுகிறது. அந்தக் கஷ்டமெங்கே உறங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பயணிகளிற்கு விளங்கப் போகிறது. அவன் தனது உடல் அலுப்பை நினைத்து சிறுபள்ளங்களைக் கவனிக்காமல் பேருந்தைச் செலுத்தினால் பயணிகள் நிலை அதிரும் ஒலிபெருக்கியில் தேக்கிய மண்துணிக்கைகள் துள்ளுவது போல்தான் அமையும். அடுத்த சந்தி இறக்கம் சடுதியாக வேகத்தைக் குறைக்காமல் புகையிரதம் நிறுத்தியது போல் மெதுவாக நின்றது உள்ளிருந்த பலர் விழிக்கவில்லை. குறைந்த வேகத்தில் மீண்டும் வேகம் அதிகரித்தது. பாட்டொலி நின்றது ஏன் பலருக்கு விடை தெரிந்து விட்டது சிலருக்கு கொஞ்சம் கணங்கித்தான் பத்தியது. கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லம் அனைவரது ஆன்மாக்களையும் ஒருதடவை தாய்மைப்படுத்தியது. வாழ்க்கையில் பல சம்பவங்கள் வந்து மறைவது போல் பலரது உள்ளத்தில் மாவீரராக உள்ள உறவினரின் நினைவு வந்து மறைந்தது. ஆச்சி இறங்கப் போகின்றா தனது பொருட்களை ஒழுங்குபடுத்தினார் பேருந்து சந்தியில நின்றது. பலர் இறங்கினார்கள். ஆச்சி பொருட்களுடன் சிரமப்பட்டு இறங்க முற்படுகின்றார். ஓட்டுனரின் மனதில் கருணை பொங்கியது "அம்மா எவ்விடத்தில் வீடு" "அந்தா அதிலையப்பு" கை காட்டிய தூரம் நூறு மீற்றர் தூரம் தான் வரும். அதற்கொருக்கா பேருந்தை எடுத்து பிறகு நிறுத்தி மீண்டும் எடுப்பது மிகவும் சிரமம் நேரமும் எரிபொருளும் விரயமாகும் என்றாலும் ஆச்சியின் சிரமத்தைக் கணித்து "இறங்காதேங்கோ நான் அதிலை நிப்பாட்டுறன்" ஓட்டுனர் கூற ஆச்சியின் முகம் பாரம் தணிந்துடன் சிரித்து நன்றி கூறியது. புறப்பட்ட பேருந்து மீண்டும் நின்றது. ஆச்சி இறங்கினார். உள்ளேயிருந்த சிலருக்கு அது சினத்தைக் கொடுத்திருக்க வேண்டும். பேருந்து தனிக்காட்டு ராஜாவாக ஸ்கந்தபுரம் வீதியூடாக நகருகின்றது. பொருத்தமான இடமாக இருந்தால் வேகம் அதிகமாகும். சிறு

பாய்ந்து உயரமேற முடியாமல் மீண்டும் திரும்பிப் பள்ளத்தை அடைகின்றன. இறக்கம் பேருந்து வேகம் குறைந்து நிற்கிறது "அவசரப்படாமல் பேருந்து நிண்டாப்பிறகு இறங்குங்கோ" இவ்வார்த்தை கருணையில்லாமல் உருவாக முடியாது நான் எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன். "தம்பி புட்போட்டில ஒருத்தரையும் நிக்கவிடாதேங்கோ" எல்லாப் பேருந்து ஓட்டுனரும் சொல்லும் வார்த்தை தான் ஆனால் அப்பேருந்து போகுமிடத்தில் காவல்துறையினர் நிற்பார்கள் என்ற காரணத்தால் உருவாகும் கருணையது. ஆனால் இந்தப் பேருந்து போகுமிடத்தில் அப்படிக்காவல் துறையினர் நிற்பதற்குச் சாத்தியம் இல்லை. உண்மையில் அவரது பயணிகள் மேலுள்ள கருணையால் தான் இந்த வசனம் உருவாகியிருக்க வேண்டும். எனது மனம் நிறைந்து ஆச்சரியப்பட்டது. சுயபுத்தியில் இயங்காத நடத்துனர் அதன் பின்தான் "எல்லோரும் உள்ள போங்கோ ஒருத்தரும் புட்போட்டில நிக்காதேங்கோ" ஆலோசனை வழங்கினார். பேருந்து அம்பலப் பெருமாள் குளத்தடியில் நின்றது. எல்லோரும் காரணம் தேடினர். குளத்தின் கலிங்கி அருகாகச் செல்லும் வீதி குளம் நிரம்பிப் பாய்ந்ததால் அரித்து மிக ஒடுங்கிய பாதையே எஞ்சியிருக்கிறது. அதற்கப்பால் ஒரு நீளமான பாரவூர்தி தரித்து நின்றது மறுபக்கத்தில் பேருந்து நிற்பதைக் கண்ட பாரவூர்தியின் ஓட்டுனர் அதைப்பின் நோக்கி நகர்த்திப் பேருந்துக்கு இடம் விட்டு நிறுத்தினார். பாரவூர்தி நிற்பதற்கு காரணம் இயந்திரக் கோளாறு காரணம் இல்லை. என்பது புரிந்து கொண்டது அந்த ஒடுங்கிய பாதையின் அகலமும் பேருந்தின் அகலமும் ஒரே அளவாகத்தான் இருக்கும் போல் இருந்தது. அந்த ஒடுங்கிய பாதையூடாகச் சென்று உடனே வளைந்து சென்று உயரமான குளக்கட்டின் பகுதிக்கு ஏறவேண்டும். உண்மையில் கயிற்றில் நடக்கும் செயல்தான் சற்றுத்தவறு நிகழுமெனில் பாரிய பள்ளத்தில் விழவேண்டும். விழுந்தால்? ஓட்டுனர் திடமானார். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டார். பேருந்து

பெருமிதம் கொண்டார். பேருந்தைக் கடினமான பாதையூடாக ஓட்டினார் என்பது பேருந்திற்குள்ளே இருந்த பலருக்குத் தெரியாது. அந்தப் பாரவூர்தி ஏன் நிற்கிறது? பேருந்தை நிறுத்தி இறங்கிப்போனார். பாரவூர்தியின் ஓட்டுனர். இவரைப் பார்த்து புதுமணப் பெண்போல் வெக்கப்பட்டார். "பயமாய் இருக்கண்ணை" பாரவூர்தி ஓட்டுனர் கதையைத் தொடங்கினார். முன்னே பின்னே அறிமுகம் இல்லாதவருக்கு உதவ முன்வந்தார் ஓட்டுனர். பாரவூர்தி ஓட்டுனர் ஆசனத்தில் பேருந்து ஓட்டுனர் புகைபோக்கி கரும்புகையைக் கக்கியது இரண்டு நிமிடத்துக்குள் பாரவூர்தியின் உடல்நிலையைப் பரிசோதித்துக் கொண்டார். பாரவூர்தி அசைந்தது கயிற்றில நடக்கும் சாகசத்தைப் புரிந்து வளைந்து சென்று உயரமான வீதியில் ஏறி நின்றது. உண்மையில் இது சாதனைதான். பாரவூர்தி ஓட்டுனர் புன்னகை ஒன்றை உதிர்த்து பாராட்டும் நன்றியும் தெரிவித்தார். பேருந்து மீண்டும் புறப்பட்டது. புறப்பட்டுத் துணுக்காய் நோக்கி நகர்கிறது பயணிகள் குறைந்துவிட்டனர். ஓட்டுனருக்கும் இலகுவாக இருந்தது. அருகில் இருந்து கதைக்கத் தொடங்கினேன். நான் ஆசிரியர் என அறிமுகப்படுத்தியதுடன் தற்போதைய மாணவரைவிட மரியாதையாக உரையாடினார். தான் பலதடவை செய்த சாதனைகளைப் பகிர்ந்து கொண்டு பேருந்தைச் செலுத்தினார். நான் துணுக்காயில் இறங்கிவிட்டேன். ஓரிரு பயணிகளுடன் ஓட்டவீரன் ஓட்டமுடிவில் வேகமாக ஓடுவதைப் போல் முடிவிடமான மல்லாவியை நோக்கி வேகமாகப் போனது பேருந்து இப்படியான பண்புள்ள திறமையான ஓட்டுனர்களைத் தெரிவு செய்து கௌரவிக்க வேண்டும். எனது மனம் ஆதங்கப்பட்டது. என்னால் என்ன செய்ய முடியும்? இப்படி வெறுமனே சிந்திக்கத்தான் முடியும் யாரைக் கௌரவிக்கிறார்கள் பிரபலமானவர்களைக் கௌரவிக்கிறார்கள்.... நமக்குத் தமது நிறுவனத்திற்கு விளம்பரம் கிடைக்குமென்றால் கௌரவிக்கிறார்கள்.... குறிப்பிட்டவரை கௌரவித்தால் நமக்குச் சலுகைகள் கிடைக்கும் என்றா[illegible]ரவிக்கிறார்கள்

நேர்மையான திறமைசாலிகளை யார் தேடிக் கௌரவிக்கிறார்கள். இப்படியே சிந்தித்தபடி எனது வீட்டை நடந்து அடைந்து விட்டேன். எனது பாடசாலை மாணவர்களை ஏற்றிக்கொண்டு முள்ளியவளை செல்ல வேண்டியிருந்தது. அந்தப் பொறுப்பை நானே ஏற்கவேண்டியிருந்தது. பொருத்தமான பேருந்தை வாடகைக்கு அமர்த்த வேண்டியிருந்தது. உடனே எனக்கு அன்று பயணம் செய்த பேருந்தே ஞாபகம் வந்தது. அவரது திறமைக்கு நான் செய்யக்கூடிய நன்மை அதுதான். அவரையே நியமிப்பது என முடிவெடுத்துக் கொண்டேன். அவரோடு அன்று உரையாடிய போது வீட்டுவிலாசம் சொல்லியிருந்தார். அது விலாசம் அல்ல அடையாளம் கொக்காவில் வீதிக்கிளை ஒழுங்கையால் எனது துவிச்சக்கர வண்டி உருள்கிறது. கிளை ஒழுங்கையால் இன்னுமொரு கிளை ஒழுங்கை. இத்தனை வருசம் இங்கே வசித்திருக்கிறன். ஒருதடவை கூட இக் குச்சொழுங்கையால் சென்றதில்லை.... அவர் சொன்ன வீட்டின் அடையாளப்படி இடத்தைக் கண்டு பிடித்தேன் ஒழுங்கையின் ஓரத்தில் அவரது பேருந்து நிறுத்தப்பட்டிருந்தது பேருந்தைவிட சிறியவீடு கிடுகால் வேயப்பட்டு மண்குந்து வைக்கப்பட்டுள்ளது. நான் சிறுவயதில் பேருந்து வைத்திருப்பவர்கள் பெரும் பணக்காரராக இருப்பார்கள் என்று எண்ணியிருந்தது பொய்யாகி விட்டது. "வாங்கோ மாஸ்ரர்" அன்பாக அழைத்தார். குனிந்து வீட்டிற்குள் புகுந்தேன் ஆச்சரியத்தால் திகைத்துப் போனேன் சற்று நேரம் பேசாமல் நின்று விட்டேன். காரணம் உட்சுவரில் அந்த ஓட்டுனரை எமது தேசியத் தலைவர் நேரடியாகச் சந்தித்துப் பாராட்டி கௌரவித்து பரிசளிக்கும் புகைப்படம் பெரிதாக்கி சட்டமிடப்பட்டுத் தொங்குகிறது எப்ப...? ஏன்...? எனது வார்த்தைகள் துண்டு துண்டாக வெளிவந்தது அது 2005 ம் ஆண்டு சிறந்த ஓட்டுனராக கருதி என்னை அழைத்துக் கௌரவித்தவர். ஓட்டுனர் கூறினார். இந்தக் கிராமத்தின் ஓரத்தில் வாழும் ஏழைத் திறமைசாலியை எமது தலைவர் எவ்வாறு கண்டுபிடித்து செய்து கொண்டார்? மகிழ்ச்சி அதிர்ச்சியில் இருந்து மீள எனக்கு நீண்ட நேரம்

# உலகெங்கும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் - 2007



அவுஸ்திரேலியா



பெல்ஜியம்







சைபிரஸ்



டென்மார்க்




Tamileelam Archive

# உலகெங்கும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் - 2007



பிரான்ஸ்



யேர்மனி



இத்தாலி





பிரித்தானியா



மலேசியா



# உலகெங்கும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் - 2007




நியூசிலாந்து




நோர்வே









சுவீடன்




சுவிற்சலாந்து




# இனி விடியும்

காவடி எடுத்து வந்து
சாந்திலை நிற்கிறது
வலியோடு தூக்கும்
வரலாற்று ஞாபகங்கள்
உணர்வுகளின் முதுகில்
அரியமாய் நிற்கின்றன...
வாழ்வின் நியமம் தெரிந்தும்
வலி மாற மறுக்கிறது...
நீளும் காலத்தில்...
நீள் துயிலுறும் மாவீரர்களின் நினைப்பு...
அதோ...
அமைத்து நிற்கின்றன நடுகற்கள்...
உதிரத்தை நீராக்கி
ஊற்றும் உறவுகளின்
கண்ணீரில் தலைகுத்தபடி
உறுப்பிறது மனது

விடுதலை அவாவுடன்
விழி மூடிய விருட்சங்கள்
வெண்புறாக்களின் நடனம்
ஓய்ந்துவிட்டது
நினைக்கும் குடிக்கும் சனைடன்
கழுகுகள் பறக்கின்றன...
விழிகள் சிவக்க
சூரியன் சுழற்சியில்
தேடுவதும் ... ... நடுநிசி தாண்டி
விதைத்தும் வந்தோம் ஒரு விளைதையை...
துயருறைய
மனம் இறுக...
தொடர்கிறது பயணம் ...
என்றும்,
புதிய விடியலுக்காய்
காத்திருக்கிறது மனம்...
காட்டு மரங்களின் மேலே
சூரியனின் இரு விழிகள்
சிவப்பேறித் தெரிகின்றன...
இனி விடியும்!

■ ஆதிலட்சுமி சிவகுமார்





# உலகில் தமிழன் தலை நிமிர ஆகுதியாகியவர்கள் மாவீரர்கள்

கவி

தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதிகளில் இருக்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் பல சிறிலங்கா இராணுவத்தினால் முற்றாக அழிக்கப்பட்டும் மேலும் சில சேதமாக்கப்பட்டும் உள்ளன. தமிழ்மக்களால் மிகப் புனிதமாக போற்றி மதிக்கப்படும் மாவீரர் துயிலும் இல்லங்கள் சிறிலங்கா இராணுவத்தால் தாக்கி அழிக்கப்படுவது மனித நாகரீகமற்ற மிகவும் கொடுஞ் செயலாகும். இதுபோன்ற மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் சிறிலங்கா அரசாங்கத்தின் உயர் மட்ட அரசியல் தலைவர்களின் அனுசரணையோடே மேற்கொள்ளப்படுகிறது என்பது வெளிப்படையானது. சிறிலங்காப் படைகளின் இதுபோன்ற செயல்கள் அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுவதால் அது மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

யாழ் குடாவில் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் சூரியக்கதிர் 1, 2 இராணுவ நடவடிக்கையின் போது நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களும் சிறிலங்காப் படைகளால் முற்றாகத் துடைத்தழிக்கப் பட்டது. மாவீரர் துயிலும் இல்லங்களில் வைக்கப்பட்டிருந்த கல்லறைகள் நினைவுக்கற்கள் யாவும் உழுபொறி கொண்டும் புல்டோசர் கொண்டும் தகர்த்தெறியப்பட்டது. 2006, 2007 இல் இதே போன்று பகுதியில் கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளன. போரில் கொல்லப்படும் படைவீரர்களுக்கு ஐ.நா ஜெனீவா உடன்பாட்டில் சொல்லப்பட்ட விதிகளுக்கு இவை யாவும் எதிரானது. ஒருபடை வீரன் போரில் கொல்


■■

ஒருபடை வீரன்
போரில் கொல்லப்படும் போதும்,
போரில் காயப்படும் போதும் அவன்
எவ்வாறு நடாத்தப்பட வேண்டுமென்ற
சர்வதேச சட்டவிதிகள் பல உண்டு.
இதனைப் பொருட்படுத்தாது அல்லது
மதிக்காது கொல்லப்பட்ட போர் வீரனை
களங்கப்படுத்துவது ஒருபோரியல்
குற்றமாகும். இதனைப் புரிந்து கொள்ள
சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும்
தவறிவிட்டன.

■■



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



வைப்பதும் போதும், போரில் காயப்படும் போதும் அவன் எவ்வாறு நடாத்தப்பட வேண்டுமென்று சர்வதேச சட்டவிதிகள் பல உண்டு. இறந்தவனைப் பொறுப்பேற்பது அல்லது மதிக்காது கொல்லப்பட்ட போர் வீரனை களங்கப்படுத்துவது ஒரு போரியல் குற்றமாகும். இதனைப் புரிந்து கொள்ள சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் தவறிவிட்டன. இதற்கெதிராக சர்வதேச போர் விதிகளுக்கமைவாக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். போர் வீரர்களை அடக்கம் செய்த இடத்தை சிறிலங்கா இராணுவம் தாக்கியழிப்பது என்பது ஒரு பாரிய குற்றமாகும். இது ஒருபோதும் இருக்க போரில் கொல்லப்பட்ட மாவீரரை மதிக்கும் பண்புடை அவர்களிடம் இருக்கவில்லை. சாதாரண மனிதர் ஒருவர் இறந்து விட்டால் அது பகைவராக இருந்தாலும் அவரை நல்லடக்கம் செய்யும் பண்பும் மனிதசமூகத்தில் வேரூன்றியுள்ளது. ஆனால் அந்தப் பண்புடை சிறிலங்கா ஆட்சியாளரிடமோ அல்லது இராணுவத்திடமோ இருக்கவில்லை என்பது மனித நாகரீகமுள்ள சமுதாயம் வெட்கித் தலைகுனிய வேண்டியதொன்றாகும்.

மாவீரர் துயிலும் இல்லங்கள் தமிழர்களின் கோவில்களாக மதிக்கப்படுகின்ற நிலையே தமிழீழத்தில் காணப்படுகிறது. தாங்கள் கௌரவமாக சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ்வதற்கு தங்கள் இன்னுயிரை ஈகம் செய்தவர்களே இந்த மாவீரர்கள். அவர்களை போற்றி வழிபடுவது கனவிலும் நனவிலும் நினைப்பது என்பது தமிழர்களின் வாழ்வில் இரண்டறக் கலந்து விட்டது. இவ்வாறு தமிழ்மக்களால் போற்றி மதிக்கப்படுகின்ற மாவீரர் துயிலும் இல்லங்கள் சிறிலங்காப் படைகளால் அழிக்கப்படுவது தமிழர்களைச் சீற்றம் கொள்ள வைத்துள்ளது என்பதை அழுத்தமாகக் குறிப்பிட வேண்டும்.

மாவட்ட ரீதியாக மாவீரர் துயிலும் இல்லங்களின் நிலை குறித்து கவனம் செலுத்துவோம்; சாட்டி - தீவகம், கோப்பாய் - வலிகாமம், எள்ளங்குளம் - வடமராட்சி, கொடிகாமம் - தென்மராட்சி யாழ்ப்பாணத்திலுள்ள மேற்குறித்த நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் 1995 அக்டோபரில் இடம் பெற்ற சூரியக் கதிர் - 01 இராணுவ நடவடிக்கைக்குப் பின் சிறிலங்கா இராணுவம் மிலேச்சமான முறையில் தகர்த்து அழித்தது. இதனைப் பின்பற்றித் தீவகம் வேலணை சாட்டியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லமும் தகர்த்தழிக்கப்பட்டது. 1996 ஏப்ரல் தொடங்கிய சூரியக்கதிர் - 02 சிறிலங்கா இராணுவ நடவடிக்கைக்குப் பின் தென்மராட்சியிலுள்ள கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லமும் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லமும் இராணுவத் தாக்குதல் மூலம் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டது. இதுவொரு இனவெறிச் செயற்பாடுடைய பௌத்த சிங்கள பேரினவாதத்தின் திமிர் பிடித்த செயற்பாடு என்பதோடு தமிழர்களின் நெஞ்சங்களில் ஆறாத காயத்தை ஏற்படுத்தியதும் எனலாம்.

1991இல் சிறிலங்கா இராணுவத்தின் வலம்புரி நடவடிக்கையின் போது 95சதவீதமான தீவகமக்கள் புலம் பெயர்ந்து வன்னியிலும் மற்றும் ஏனைய பகுதிகளுக்கு புலம் பெயர்ந்தனர். 1995 அக்டோபரில் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமத்திலிருந்து 100 சதவீதமான மக்களும், தென்மராட்சி மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு புலம்பெயர்ந்தனர். 1996 இல் சூரியகதிர் - 2 இன் போது வன்னிக்குப் புலம் பெயர்ந்தும், ஏனைய மக்கள் இராணுவப்பிடிக்குள் சிக்குண்டுபோன வரலாறும் உண்டு. சிறிலங்கா இராணுவம் பன்னாட்டு உதவியுடன் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது தான் யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டது. இது போன்றே தமிழீழத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி துயிலும் இல்லங்களுக்கும் ஏற்பட்டன. இந்த அழிப்பு தொடர்பாக தமிழ்மக்களுக்கு ஆழமான காயம் ஏற்பட்டிருந்தது. இதனை மீளவும் கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் அசையாத பற்றுறுதி அவர்களிடம் காணப்பட்டது.

2002இல் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன ஏற்பட்ட போது முதற்பணியாக மாவீரர் துயிலும் இல்லங்களை கட்டியெழுப்பும் வாய்ப்பும் புலிகளுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டது. இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்த துயிலும் இல்லங்கள் வேரோடு அழிக்கப்பட்டாலும் அதனை அந்தந்த இடங்களில் மீளக்கட்டியெழுப்பக் கூடியவாறு வரைபடங்கள், ஆவணங்கள் பேணப்பட்டதால் அதனை மிகச்சிறப்பாக வடிவமைத்து முன்னிலும் பார்க்க சிறப்பாக கட்டி எழுப்பப்பட்டது. ஆனால் இன்று மீண்டும் சிறிலங்கா இராணுவம் மாவீரர் துயிலும் இல்லங்களை முற்றாக தகர்த்துச் சேதமாக்கி வருகிறது கவலையளிப்பதாகவுள்ளது. குறிப்பாக தென் தமிழீழத்தில் (கிழக்கில்) இராணுவம் ஆக்கிரமித்த பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் 2007ம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் பின் முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டுள்ளது. கிழக்கிலிருந்து புலிகளை விரட்டிவிட்டோம் எனக் கூறிக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் கிழக்கே திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை இராணுவத்தை விட்டுச் சல்லடை போட்டு அழித்துள்ளது.

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் 2006 மாவீரர் நாள் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது இராணுவம் எறிகணை வீச்சை நடாத்தி நிகழ்வைக் குழப்பியது. அதன் பின் 2007இல் இராணுவத்தினரால் கடுமையான சேதமாக்கப்பட்டது. இங்கு 686 மாவீரர்களின் கல்லறைகள் வைக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன (தரவை, தாண்டியடி, கண்டலடி, மாவடி). மட்டக்களப்பின் தரவை மாவீரர் துயிலும் இல்லமே கிழக்கின் மிகப்பெரியது. 1488 கல்லறைகளும் 994 நினைவுக் கற்களும் உள்ளன. 2007இல் இவை வித்துடல் விதைக்கப்பட்டிருந்த தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லம் முற்றாகத் தகர்க்கப்பட்டு லெப். கேணல் கௌசல்யன் வித்துடல் விதைக்கப்பட்ட கல்லறையின் மீது சிறிலங்கா காவல் நிலையம் ஒன்றைக் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 2007ம் ஆண்டு கிழக்கை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவம் இந்த நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களையும் தகர்த்துத் தரைமட்டமாக்கியுள்ளது.

திருமலை மாவட்டத்திலும் நான்கு மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. ஆலங்குளம், உப்பாறு, தியாகவனம், பெரிய குளம் ஆகிய நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் 292 கல்லறைகளும் 132 நினைவுக் கற்களும் உள்ளன. இதில் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் 2006இல் இராணுவத்தால் தாக்கியழிக்கப்பட்டது. உப்பாறு மாவீரர் துயிலும் இல்லம், பெரிய குளம் மாவீரர் துயிலும் இல்லம் என்பன 2007இல் இராணுவத்தால் தாக்கியழிக்கப்பட்டது. திருமலையில் தியாகவனம் மாவீரர் துயிலும் இல்லம் மட்டுமே பாதுகாப்பாக எஞ்சியுள்ளது.



**2006 இறுதியில் விடுதலைப் புலிகள் மண்டைதீவு, அராலிப் பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்ட போது டென்சில் கொப்பேகடுவவினதும் ஏனைய தளபதிகளினது நினைவுத் தூபி தாக்கப்படக் கூடாது என்பதை தலைவர் தெளிவாகக் கூறினார். அந்த நினைவுத் தூபி தாக்கப்பட்டு விடும் என எண்ணி தாக்குதல் நேரம் அதைப் பாதுகாக்க 4 போராளிகளை விட்டிருந்தார். அந்தளவு ஒரு போர் வீரன் மதிக்கப்பட வேண்டும் என்பதில் தலைவர் தெளிவாக இருந்தார். ஆனால் சிறிலங்கா அரசத் தலைவர்களும் இராணுவத் தலைமைகளும் தமிழீழப் போர் வீரனுக்குரிய மதிப்பை தரவில்லை**

வவுனியா மாவட்டத்திலுள்ள ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் 400 கல்லறைகளும் 313 நினைவுக் கற்களும் உள்ளன. இவை இராணுவத்தினரின் (எறிகணை) தாக்குதலுக்கு அடிக்கடி ஆளாகி வருகின்றன. ஏனைய மாவீரர் துயிலும் இல்லங்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் உள்ளன.

மன்னாரில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் 171 கல்லறைகள் உள்ளன. இதே போன்று மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லம் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லம் என்பன உள்ளன. இவையடைய இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு அருகில் இருப்பதால் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம், விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் என்பன உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் என்பன உள்ளன. வன்னி மாவட்டங்களிலுள்ள 11 மாவீரர் துயிலும் இல்லங்களில்தான் 60 சதவீதத்திற்கும் மேலான நினைவுக் கற்களும் கல்லறைகளும் உள்ளன. எஞ்சிய கல்லறைகளும் நினைவுக் கற்களும் இருக்கும் பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதோடு சேதங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

1995, 1996 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சாட்டி, எள்ளங்குளம், கோப்பாய், கொடிகாமம் போன்ற இடங்களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. அவை இப்போது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2007ம் ஆண்டு காலப்பகுதியில் இந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் ஏதோ ஒரு வகையில் சேதமாக்கப்பட்டுள்ளது. 2007ல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் புகுந்த இராணுவம் அலுவலகத்தைத் தாக்கியதோடு அங்கிருந்த ஆவணங்களுக்குத் தீ வைத்துவிட்டு மின்விளக்குகளை சேதமாக்கிச் சென்றுள்ளது. 2007 ஏப்ரலில் இதேபோன்று தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் புகுந்த கடற்படை அங்கிருந்த சொத்துக்களை அழித்து தொடர்ந்தும் விட்டு நினைவுக் கற்களைச் சேதமாக்கிச் சென்றுள்ளது. யாழ் மாவட்டத்தில் 15சதவீதமான கல்லறைகளும் நினைவுக் கற்களும் உள்ளது. சிறிலங்காப் படைகள் மாவீரர் துயிலும் இல்லங்களைத் தாக்கி வருவது கேவலமான நடவடிக்கையாகும் என மக்கள் விசனமடைந்தாலும் அந்த இராணுவத்திற்கு எதிராக எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாதவாறு அடக்கி அச்சுறுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச போரியல் சட்ட விதிகளுக்கு எதிரான செயற்பாடுகளை சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் போது அதைத் தடுக்க ஐ.நா.வோ அல்லது சர்வதேச நாடுகளோ மௌனம் காப்பது ஏற்புடையதல்ல. இதைத்தடுக்க புலம் பெயர் வாழ் தமிழ் உறவுகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இந்நேரத்தில் ஒன்றை மட்டும் குறிப்பிட முடியும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் ஒரு இராணுவ வீரனுக்கு கொடுக்க விரும்பும் மரியாதை தான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

யாழ்ப்பாணம், தீவகம் அராலி வெளியில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 11 தளபதிகள் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 1992 யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற சூழ்ச்சிகளைத் திட்டமிட்டுக் கொண்டிருந்த போது இத்தாக்குதல் இடம்பெற்றது. இவர்களுக்காக அங்கே அராலியில் நினைவு தூபி கட்டியுள்ளது சிறிலங்கா இராணுவம். 2006 இறுதியில் விடுதலைப் புலிகள் மண்டைதீவு, அராலிப் பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்ட போது டென்சில் கொப்பேகடுவவினதும் ஏனைய தளபதிகளினது நினைவுத் தூபி தாக்கப்படக் கூடாது என்பதை தலைவர் தெளிவாகக் கூறினார். அந்த நினைவுத் தூபி தாக்கப்பட்டு விடும் என எண்ணி தாக்குதல் நேரம் அதைப் பாதுகாக்க 4 போராளிகளை விட்டிருந்தார். அந்தளவு ஒரு போர் வீரன் மதிக்கப்பட வேண்டும் என்பதில் தலைவர் தெளிவாக இருந்தார். ஆனால் சிறிலங்கா அரசத் தலைவர்களும் இராணுவத் தலைமைகளும் தமிழீழ போர் வீரனுக்குரிய மதிப்பை தரவில்லை.

1982.11.27 அன்று முதல் மாவீரர் வித்தானார். அந்த ஆண்டு சங்கர் என்ற சத்தியநாதன் மட்டுமே வீரச்சாவடைந்திருந்தார். 1983 இல் 15 மாவீரரும் 1984 இல் 50 மாவீரரும் களப்பலியாகியிருந்தனர். 2ம் கட்ட ஈழப்போர் தொடங்கிய 1990இல் 965 மாவீரரும் போரில் அதிகபட்சமாக 1997 இல் 2112 பேர் மாவீரர்களானார்கள். ஆண்டு தோறும் போர் விரிவடைய வெற்றிகள் தொடர்ந்த வண்ணமிருந்தன. அதேவேளை ஆண்டு தோறும் மாவீரர்களின் தொகையும் அதிகரித்து வந்துள்ளது. 31.10.2007 நிலவரப்படி 19,792 பேர் மாவீரர்களாகி உள்ளனர். இதில் 4,160 பேர் பெண்களாவர். இதில் கரும்புலிகளும் அடங்குவர். இதில் 343 கரும்புலிகளாவர். இதில் 93பேர் பெண்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் உச்ச நிலையை எட்டியுள்ளது. இன்று உலகில் தமிழன் தலைநிமிர அர்ப்பணித்த மாவீரர்கள் தியாகம் அளப்பரியது. தமிழர் அனைவரும் தலைவரின் கைகளைப் பலப்படுத்தி மாவீரர்களின் இலட்சியக் கனவை நனவாக்கிட வாருங்கள் வெற்றிபெறுவோம்.





# விடுதலைக்கான அடையாளம்

மக்ஸ்வெல் மனோகரன்






எரிமலை
ERIMALAI
கலை பண்பாட்டு அரசியல் சமூக இதழ்
ப்பொங்கல் - தமிழர் திருநாள்
ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு...
Tel: 01 43 58 11 42
Fax: 01 43 58 11 91
e-mail: info@erimalai.info
ERIMALAI,
c/o T.C.C France,
341, Rue Des Pyrenees,
75020, Paris,
FRANCE


எரிமலை
ERIMALAI
ஜனவரி - 2008